

சிறுகதைகள்
சுதாராஜ்
கொடுத்தல்
மணிமேகலைப் பிரசுரம்

# கொடுத்தல்

(சிறுகதைகள்)

## சுதாராஜ்

**மணிமேகலைப் பிரசுரம்**

தபால் பெட்டி எண் : 1447
7 (ப.எ.4), தணிகாசலம் சாலை,
தியாகராய நகர், சென்னை - 600 017.
தொலைபேசி : 24342926
தொலைநகல் : 0091-44-24346082
மின் அஞ்சல் : manimekalai@eth.net
WebSite : www.manimekalaiprasuram.com

* கொடுத்தல் * சுதாராஜ் * உரிமை - ஆசிரியருக்கு
* 2004 * முதல் பதிப்பு * 11.6 கி.கி. * 184 பக்கங்கள்
* ஓவியம் - ஜெயக்குமார் * கிறிஸ்ட் கம்ப்யூட்டர்ஸ்
* ஸ்கிரிப்ட் ஆப்செட்

விலை ரூ. 45.00

# பொருளடக்கம்

1. கொடுத்தல் ........ 11

2. சுகங்களும் சுமைகளும் ........ 26

3. ஏகபத்தினி விரதம் ........ 43

4. ஒரு தேவதையின் குரல் ........ 55

5. பாதைகள் மாறினோம் ........ 66

6. உதிரிகள் அல்ல ........ 82

7. நன்றியுள்ள மிருகங்கள் ........ 93

8. கனிகின்ற பருவத்தில் ........ 107

9. பொழுதுபட்டால் கிட்டாது ........ 121

10. படுக்கை ........ 137

11. திருப்பங்கள் ........ 150

12. தயவு செய்து கை போடாதீர்கள் ........ 165



# சுவைத்தேன்

நாடகம் பார்க்க வந்த என்னை தலைமை உரை வழங்கும்படி மேடையில் ஏற்றிவிட்ட கதையே என் கதை. சிறுகதை ரசிகனான என்னை சுதாராஜ் தனது சிறுகதைத் தொகுதிக்கு முன்னுரை எழுதும்படி பணித்துவிட்டார். எனது சிறிய தலைக்குப் பெரும் தலைப்பாகை. இது கோமாளித்தனமாகக் கூடத் தென்படலாம்.

நாடகத்தில் புகழ் மகுடம் கதாநாயகனுக்கேயுரியது. முன்னுரை மொழிபவருக்கல்ல. அதே போன்று புத்தகப் பிரசுரப் பண்பிலும் புகழாரம் படைப்பாளிக்குரியது. அணிந்துரை வழங்குபவருக்கல்ல.

கலை கடைச்சரக்கல்ல; எடை பார்த்து மதிப்புக் கூறுவதற்கு. தங்கமுமல்ல; உரைத்துப் பார்த்து தரம் கூறுவதற்கு. கலை ஓர் ஆத்ம தரிசனம். இந்த ஆத்ம தரிசனத்திற்குக் கூட எமது கலா வைத்தியர்கள் சட்டமிட்ட கண்ணாடி வைத்திருக்கின்றார்கள்.

கவர்ச்சித் தன்மை முரண்பட்டது. ஒருவரின் அறுசுவை மற்றவரின் அறுவையாகும். கார்மேகத்தில் வெள்ளைக் கொக்கு பறப்பதைப் பார்த்து ராமகிருஷ்ணர் பரவச நிலையடைந்து வீழ்ந்தார். அதே வெள்ளைக் கொக்கைக் 'கசாப்புக்' கண்ணோட்டத்தோடு ஒருவன் பார்த்தால் அதை வேட்டுவைத்தே தீருவான்.

ஒவ்வொருவரின் பக்குவத்தைப் பொறுத்தே கலைப் பார்வை அமையும். பிக்காசோவின் தூரிகையைத் துடைப்பங்கட்டை என்று விமர்சனங் கூறியவர்களுமுண்டு.

பண்பான உள்ளங்களின் நெகிழ்ச்சியில் கிளர்ந்தெழுந்த வடிவங்களே கலையாகும். A certain hospitality of the mind is culture என்று தத்துவஞானி ராதாகிருஷ்ணன் கூறுகின்றார். பண்பில்லாதவன் கையில் உள்ள பேனா பயங்கரமான ஆயுதம் எனக் கூறப்படுவதுண்டு.

புத்தக உலகம் இன்று பணம் சுரண்டும் துச்சாதன சாத்தான்களின் சதுக்கமாகிவிட்டது. இந்தச் சூழ்நிலையிலும் துகில் கொடுத்து மானங்காக்கும் கண்ணன் போன்றோரும் இல்லாமல் போகவில்லை. சுதாராஜின் கதைகளில் தர்மாவேசம் சுடர்விட்டெரிகின்றது.

சுதாராஜ் அவர்களின் 'பலாத்காரம்' என்ற சிறுகதைத் தொகுப்பும், வீரகேசரி வெளியீடான 'இளமைக் கோலங்கள்' என்ற நாவலும் பண்புமிக்க ஒரு பெண் முற்றத்திலிட்ட வண்ணக் கோலங்களாய் மனதில் நிறைந்திருக்கின்றன. அவரின் ஆக்கங்களைப் படித்த ஓர் இலக்கியதரிசி கூறியதை இங்கு குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும். ''சீறிவரும் நாகத்தையும் நோகாமல் கொல்லும் பண்புடையவர். அவரின் மென்மையே அவரின் கந்தகளின் மேன்மைக்குக் காரணம்.''

'கொடுத்தல்' தொகுப்பில் வரும் நன்றியுள்ள மிருகங்கள் என்ற கதைக்கு அவரின் மிருதுவான உள்ளமே மெருகூட்டுகின்றது. ஒரு காலம் வாரி அணைத்துத் தாலாட்டப்பட்ட சடை நாய்க்குட்டி இன்று குட்டை பிடித்த ஜென்மமாகிவிட்டது. சகோதரிகளுக்காக வாழ்ந்த அண்ணா

இன்று இருமலில் குலுங்கும் கிழமாகிவிட்டார். குட்டை நாயையும் கிழட்டு மாமாவையும் மருமக்கள் கோடியிலுள்ள கொட்டிலுக்குள் தள்ளிவிட எடுக்கும் முயற்சியை இதயம் நெகிழ அவர் சித்தரிக்கின்றார்.

மென்மையான சுதாராஜின் கதைகள் தன்மானமெனும் வைரம் பாய்ந்த மனதில் பூத்தவை என்றே கூறத் தோன்றுகின்றது. 'கொடுத்தல்' என்ற கதையில் தன்மானம் தணலாய்க் காய்கின்றது. சொந்தக்காரர் எல்லோரையும் வாழவைத்த ஆறுமுகத்திற்கு இன்று வறுமைதான் சொந்தம். பெற்றோல் விலை ஏறியதால் சாரதி வேலையை இழந்தார். ஆறுமுகத்தையும் மனைவி மக்களையும் பசித்தீயின் நாக்கு கார்ந்து கொண்டிருந்தது. இந்நிலையில் ஆறுமுகம் தான் ஆளாக்கிய தேனீர்கடை முதலாளி முத்துராசாவிடம் கடன் உதவி கேட்டுப் போகின்றார். முதலாளி முத்துராசா தேனீர் 'ஓடர்' செய்து கொடுக்கின்றார். ஆனால் கடன் உதவி செய்ய மறுக்கின்றார். ஆறுமுகம் தன் வேட்டி முடிச்சிலிருந்த ஒரே ஒரு ரூபாய்க் குத்தியை தன்னை உபசரிக்க வழங்கிய தேனீருக்குக் கொடுத்துவிட்டு மானமிழக்காதவராக வீடு திரும்புகின்றார்.

சுதாராஜின் கதைகள் சமூகப் பிரச்சினை கனத்த கதைகள். ஒவ்வொரு கதையும் பிரச்சினைக்கு ஓர் அர்ச்சனை. அறைக்கு வாடகைப் பணம் கொடுக்க முடியாது ஒளித்து விளையாடும் கிளறிக்கல் உத்தியோகத்தன், பட்டப்படிப்புப் படித்துவிட்டு மவுசுள்ள மணமகனுக்குக் காத்திருக்கும் கமலம், தொழிற்சாலையில் முதுகெலும்பாய் உழைத்த பியரத்னாவை ஈவிரக்கமின்றி வேலையிலிருந்து நீக்கும் அதிகாரி, ஹோட்டலில் விசுவாசமாக வேலை செய்தும், தனது பிள்ளைக்கு நாலு வடை கொண்டுபோக முடியாது ஏங்கும் சேர்வர் வைத்தி, எல்லோரையும்

யதார்த்தமாக எமது மனதில் வாழவைக்கின்றார் சுதாராஜ்.

ஓவியத்தில் துடிப்பில்லா இடங்களை 'Dead spots' என்று கூறுவார்கள். சிறுகதை, நாவலிலும் உயிர்த் துடிப்புள்ள சொல்லாட்சி ஆளப்படாத நிலையில் இந்த மையப் புள்ளிகள் ஏற்படலாம். சுதாராஜின் கதைகள் புழுதிச் சொற்களால் புனையப்பட்டவை. 'பாரதியின் கவிதைகள் வாழும் சொற்களால் வடிக்கப்பட்டவை. ஒரு சொல்லை வெட்டினும் குருதி கொப்பளிக்கும்' என்கிறார் மகுடியார். சுதாராஜின் படைப்பிற்கு இந்தப் பெருமை உண்டு.

நீண்ட காலம் எமது கதைகள் செம்பாட்டு மாங்கனியாகவே இருந்து வந்தன. இன்று எமது எழுத்தாளர்கள் அந்நிய நாடுகளில் வேலை செய்வதால் அந்நிய நாட்டு அநுபவங்களும் இணைந்து கதைகளில் ஒட்டு மாங்கனி ரசத்தை அனுபவிக்கக் கூடியதாக இருக்கின்றது.

ஒவ்வொரு எழுத்தாளனும் எழுதும் செம்மையான புத்தகங்கள் அறிவாலயம் எழுப்புவதற்கு வைக்கப்படும் செங்கல். இதற்கு 'கொடுத்தல்' தொகுதியும் தனது பங்கைக் கொடுத்துப் பெருமை அடைகின்றது.

- சிரித்திரன் சுந்தர்

# சந்திப்பு

இச் சிறுகதைத் தொகுப்பு மூலம் இன்னொரு முறை உங்கள்முன் வரும் சந்தர்ப்பம் கிடைத்ததில் மிகுந்த மகிழ்ச்சி.

சக மனிதர்களுடன் சேர்ந்து இயற்கையோடு ஒன்றி வாழ்க்கை நடத்துகிறோம். வாழ்க்கை... இன்பம் நிறைந்ததாகவும், அர்த்தமுள்ளதாகவும் அமைகிறது சிலருக்கு. இன்னும் சிலருக்கு ஒன்றுமே இல்லாதது போல விரக்தியும் வெறுப்பும் மிகுந்து தோன்றுகிறது. சுகமாகவும், சொகுசாகவும் சீவிப்பதற்காக மற்றவர்களை இம்சிக்கின்ற நிறையப் பேரை எங்கும் காணக் கூடியதாயிருக்கிறது. மனிதர்களே மனிதர்களின் கவலைக்கும் பிரச்சனைகளுக்கும் காரணமாகிறார்கள். மானிடரை நேசித்து வாழ்வதென்பது பெரிய கஷ்டமான காரியமல்ல என்பது அப்படியானவர்களுக்கு ஏனோ தெரியவில்லை? இதைத்தவிர முன்னுரை என்று சொல்வதற்கு விசேடமாக ஒன்றுமில்லை. மற்றபடி சொல்லவேண்டியவற்றை எனது கதைகளிலேயே சொல்லிவிடுகிறேன்.

இத் தொகுப்பிலுள்ள பன்னிரண்டு கதைகளில் ஏதாவது ஒன்றையாவது என்னால் எழுதாமலிருந்திருக்க முடியாது. அத்தனை

உக்கிரத்தோடு அவை என்னை உலுக்கின. சும்மா இருக்கவிட்டதில்லை. வேறு அலுவல்களில் ஈடுபட்டிருக்கும்போது... சிப்பிலியாட்டின. படுக்கைக்குப் போனால் உறக்கத்தைத் தடை செய்தன... 'எழுது' 'எழுது!' அதனால், எப்போதாவது நேரத்தை ஒதுக்கி எழுத அமர்ந்துவிட்டாற், சரி! - அப்பாடா, தலையிலிருந்து ஏதோ விடுபட்ட சுகம்... விடுதலை கிடைத்த மாதிரி ஆறுதல். என்னை எழுத வைக்குமளவிற்குத் தூண்டிய இக்கதைகளுக்கு நிச்சயமாக உங்கள் மனதையும் தொடுகிற சக்தி இருக்கிறது. எனது ஏனைய கதைகளும் இவ்வாறே!

எழுதவேண்டுமென்பதற்காக சும்மா விதவிதமான கலவைகளை ஒரே அச்சில் வார்த்தெடுப்பது போன்ற கதை செய்யும் காரியத்தில் எனக்கு உடன்பாடில்லை. பலவித தூண்டுதல்களால் அவை தாமாகவே உருவாகின. அவற்றின் உயிர்ப்பு கெடாமல் சொல்லியிருக்கிறேன், அவ்வளவுதான்.

இந்நூலை நல்லமுறையில் வெளியிடும் மணிமேகலைப் பிரசுரத்தினருக்கு குறிப்பாக நண்பர் ரவி தமிழ்வாணன் அவர்களுக்கு எனது மனமுவந்த நன்றிகள்.

அன்புடன்

சுதிர்ராஜ்

58/3, அநுராதபுரம் வீதி,
புத்தளம், இலங்கை.

# நன்றி



சிரித்திரன், வீரகேசரி, மல்லிகை, தினகரன், ஈழநாடு மற்றும் மணிமேகலைப் பிரசுரத்தினருக்கும் ஓவியங்களை வரைந்த தம்பி குணசிங்கம் (ரகன்) ஆகியோருக்கும்.

– சுதாராஜ்



# அணிந்துரை

'கொடுத்தல்' எப்போதுமே உயர்வானது, உன்னதமானது.

'கொடுத்தல்' குணமுடையோர் என்றுமே குன்றில் இடப்பட்ட தீபமாய் ஒளிர்வர்; புகழ் அவர்களைத் தேடிவரும்.

'கொடுத்தல்' என்னும் நல்ல தலைப்பிலான இச்சிறுகதைத் தொகுதிக்கு அணிந்துரை எழுதும் வாய்ப்பு எனக்குக் கொடுக்கப்பட்டிருப்பதை நான் மிகப் பெருமையாக எண்ணுகிறேன்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் குறிஞ்சி மலரும் என்பார்கள். இத்தொகுதியில் பன்னிரண்டு குறிஞ்சி மலர்கள் தொகுக்கப்பட்டிருப்பதாகவே நான் உணர்கிறேன். ஒவ்வொரு கதையும் மானுடத்தின் மகோன்னதச் சித்திரங்களாக எழுதப்பட்டிருக்கின்றன.

எழுத்தின் அடித்தளமே என்றும், 'மனிதர்களை நேசிப்பதும்; அவர்தம் மனங்களை வாசிப்பதும்' என்கிற இலக்கணத்தின் வெளிப்பாடாகவே அமையும். அவ்வகையில் இக்கதைகள் ஒவ்வொன்றும் மானுட சமூகத்திற்கான பங்களிப்பாக இலங்குகின்றன. இவை ஒவ்வொன்றும், சமூகம் தன் முகத்தைக் கண்ணாடியில் ஒவ்வொருமுறை பார்ப்பதாகவே அமையும் என்பதில் ஐயமில்லை. படிக்கின்ற வாசகன் இதை நிச்சயம் உணர்வான்.

முதல் கதை, தொகுப்பின் தலைப்புடன் அமைந்துள்ளது. இதில் வரும் ஆறுமுகம் ஒரு சராசரி மனிதர். ஏழ்மையும் வறுமையும் தன் கோரப் பற்சக்கரங்களால் ஆறுமுகத்தின் குடும்பத்தைப் பிழிகிறது. காரோட்டியான ஆறுமுகம் நிறைய செல்வம் இல்லாத நிலையிலும் கையில் இருப்பதையெல்லாம் பிறருக்கு அள்ளித்தந்து

மகிழ்ந்தவர். அவரிடம் கொடுக்க ஒன்றுமில்லை என்றதும் உறவுகள் ஒதுங்கி, அவரையும் ஒதுக்கிவிடுகின்றன. வேலை இல்லாத நிலையில் மனைவி மக்களோடு பட்டினி கிடக்கும் ஆறுமுகம் ஒரு பழைய நண்பரைப் பார்த்து, கைமாற்றாக ஒரு நூறு ரூபாய் கேட்க நினைத்துப் புறப்படுகிறார். இவரிடம் உதவிபெற்று, டீக்கடைத் துவங்கி வளம் பெற்று அந்த மனிதன் இப்போது பெரிய ஓட்டலே நடத்துகிறான். நெடுநாள் கழித்து வந்து நிற்கும் ஆறுமுகத்தை அவன் அரைகுறை மனதோடு வரவேற்கிறான். பார்க்கும் ஒரு பார்வையில் அவனுக்கு ஆறுமுகத்தின் வறுமைநிலை புரிந்து விடுகிறது. அவரும் வந்த நோக்கம் கூறிவிடுகிறார். ஆனால், அந்த மனிதன் அவரை முதலில் உள்ளேபோய் ஒரு கப் காபி சாப்பிட்டு வரச்சொல்லுகிறான். காப்பி சாப்பிட்டு வந்ததும் பணம் எதுவும் தர இயலாது என்று கை விரித்துவிடுகிறான். தன்மானம் உள்ள ஆறுமுகம், மனைவி உண்டியலைத் துழாவியெடுத்து அளித்திருந்த கடைசி ஒரேயொரு ரூபாயைத் தான் சாப்பிட்ட காப்பிக்காக அந்த நண்பனின் கல்லாமீது எடுத்து வைத்துவிட்டுப் படியிறங்குகிறார்; அப்படியே நம் மனம் ஏறி அமர்ந்துவிடுகிறார்.

மனித சுபாவங்களை, நன்றி மறத்தலை, ஏதிலியாய் நிற்கும் ஏழ்மையின் கொடுமையை இக்கதை மிக அருமையாகப் படம் பிடித்துக்காட்டுகிறது. கால் நூற்றாண்டுகளுக்கு முன் எழுதப்பட்டிருப்பினும் இன்றும் ஜீவனோடு திகழும் கதை இது.

'ஒரு தேவதையின் குரல்' கதையில், ஈழத்தமிழர்களின் வாழ்நிலையை வெகு எதார்த்தமாகச் செதுக்கிக் காலப்படிமம் போல் காட்டுகிறார் சுதாராஜ். ஒரு சாதாரண பஸ் பயணம். இதில் இவ்வளவு விஷயம் சொல்ல இயலுமா என நாம் அதிசயித்துப் போகிறோம். இருவேறு இனங்களின் வேறுபாடும் மனப்பூசலுமான ஒரு யுத்த

நாட்களில், சாதாரண மக்கள் எவ்வளவு பயங்களுடன் பயணிக்க வேண்டியுள்ளது என்பதை ஒரு டாகுமெண்டரி ஃபிலிம் போல நம் கண்முன் ஓடவிட்டுக் காட்டியுள்ளார். அதிலும் மனிதநேயம் மரிக்கவில்லை என்பதை எழுத்தாளன் கம்பீரமாகப் படம் பிடித்துவிடுகிறான். குழந்தைகளோடு பஸ்ஸில் ஏறி அமர இடம் கிடைக்குமாவென அந்த சிங்களப் பெண் தவிப்பதையும், அவளுக்கு இடம் தந்து எழுந்து நின்ற இளைஞர்கள் தமிழர்கள் என்பதையும், அதை அப்பெண் இனவெறியர்களிடம் சரியான தருணத்தில் உரத்த குரலில் எடுத்துரைப்பதையும் இதைவிடச் சிறப்பாக யாராலும் சொல்லிவிட முடியாது.

படைப்பு என்பது உத்திகளின் சிறப்பாலோ, மொழி வளத்தாலோவெல்லாம் உயிர்பெறவியலாது. அந்தச் சம்பவத்தின் கனம் இருக்கிறதே, அதுதான் படைப்புக்கான உயிர். இதேபோன்ற சம்பவம் ஒன்று அமெரிக்கச் சரித்திரத்திலும், கறுப்பர் – வெளுப்பர் இன பேதங்களின் முழுவீச்சை எடுத்தியம்பும் விதமாகச் சொல்லப்படுவதுண்டு. அவ்வகையில் இக்கதை உலகளாவிய அந்தஸ்தைப் பெறுகிறது.

'பாதைகள் மாறினோம்' என்றொரு கதை – குடும்ப உறவுகளிலும் மனிதர்கள் எவ்வளவு முகமூடிகள் அணியவும், தந்திரம் செய்யவும் பழகி, பண்புமாறிக்கிடக்க நேரிடுகிறது என்கிற அவலம் படம் பிடித்துக் காட்டப்படுகிறது. உத்தியோகம் பார்த்தும் குடும்பநிலையை மேம்படுத்த முடியாமல், வரவுக்கும் செலவுக்கும் ஈடுகொடுக்க முடியாமல் திணறும் ஒரு மனிதனின் மன அவலங்கள் மிக அழகாக எடுத்துச் சொல்லப்படுகிறது. இக்கதையில் வரும் மாஸ்டர் கிழவன் அருமையான பாத்திரம். எத்தனை முதியோர்கள் இப்படி நம் சமூகத்தில் புறம் தள்ளப்பட்டு கிடக்கின்றனர்!

பானை சோற்றுக்கு ஒரு பருக்கைதானே பதம் பார்க்க? நான் மூன்று முத்துக்களை உங்கள் முன் தூக்கிப் பிடித்துக் காட்டியுள்ளேன். இன்னும் சில கதைகளையும் குறிப்பெழுதி வைத்தேன். விரிவஞ்சி அவற்றை விடுத்து இந்த அணிந்துரையை நிறைவு செய்வதே உசிதம் என்றெண்ணுகிறேன். சுதாராஜ் வெறும் கதை சொல்லி மட்டுமல்ல; அவர் ஒரு மானுடம் பாடும் வானம்பாடி. மானுடத்தின் வாழ்வுச் சிக்கலை நீக்க முனையும் விதமாக அவரது பேனா, மனநிலத்தில் உழுகிறது. என்றோ. எங்கோ. எப்போதோ நிகழ்ந்த நிஜ நிகழ்வுகள் பாத்திகட்டப்பட்டு. நம்முன் காட்டப்படுகின்றன.

சுதாராஜின் மன ஓட்டம் எனக்குப் புரிபடுகிறது. என்னால் விளங்கிக்கொள்ளவியலாத சில ஈழத்தமிழ் சொற்பதங்கள் இக்கதைகளில் உண்டு என்றபோதிலும், கதைகளின் ஜீவன் பளிச்சென்று ஒளிர்வதால். புரிந்துகொள்வதும் எளிதாகவே இருக்கின்றது. நான் எழுபதுகளில் 'தீபம்' இலக்கிய மாத இதழில் பணிபுரிந்தபோது, நிறைய ஈழத்தமிழ் இதழ்கள் அவ்வலுவலகத்துக்கு வரும். அவற்றை ஆர்வமுடன் படித்துப் பழகியவன் நான். ஈழத்தமிழ் எழுத்தாளர்களை என்றுமே நேசிப்பவன் நான். ஈழ வரலாற்றுப் பின்னணியில் நான் சில வரலாற்று நவீனங்களை எழுதியதும் உண்டு. 'ஈழவேந்தன் சங்கிலி' என்னும் என் நாடக நூலை மணிமேகலைப் பிரசுரம் வெளியிட்டு. அந்நூலுக்கு ஈழத்தில் நல்ல வரவேற்பு என்றும் கூறினர். இத்தொடர்புகளால் சுதாராஜின் இந்நூலுக்கு நான் அணிந்துரை எழுதியிருப்பது சாலப் பொருந்தும் என்றெண்ணுகிறேன். இனி நூல் உங்கள் கரங்களில்.

நன்றி.

**-- கௌதம நீலாம்பரன்**

(பொறுப்பாசிரியர் : குங்குமச்சிமிழ்)


# கொடுத்தல்



சிட்டுக்குருவியொன்று குரல் கொடுத்து அவரை எழுப்பியது. பிள்ளைகள் விழிப்பதற்கு முன்னர் போய்விட வேண்டுமென்பது அவரது எண்ணம். இன்னும் பொழுது புலரவில்லை. அந்தக் குருவிக்கு என்ன மகிழ்ச்சியோ? இப்படி விடிவதற்கு முன்னர் வந்து பாடத் தொடங்கிவிடுகிறது. அதற்குச் சாப்பாட்டைப் பற்றிய கவலை இல்லை. இன்னும் கொஞ்ச நேரத்தில் பறந்துபோனால் எங்காவது கொட்டிக்கிடக்கும்.

நேற்றைய இரவும் அவர் வீட்டுக்கு வந்தபொழுது நேரம் கடந்துவிட்டது. வெறும் கையோடுதான் வந்தார். 'இஞ்சரும்...! ஏதாவது இருக்கே?' ஓ! வயிறும் வெறுமையாகவே இருக்கிறது! அவளுக்கு அழுகை பொங்கியது. பிள்ளைகள் வெறு வயிற்றோடு கிடந்ததைக் கூடப் பொறுத்துக் கொண்டிருந்தவள்.

'இப்ப இந்த மனிசனும் அலைஞ்சுபோட்டு ஒன்றுக்கும் வழியில்லாமல் வருகுதே! தங்களது இயலாமை நெஞ்சை வருத்தியது. இருபத்தைந்து வருடங்களுக்கு



மேலாக அவரது சுக துக்கங்களில் சமபங்கு கொண்டு அவருக்காகவே தனது வாழ்க்கையை அர்ப்பணித்துவிட்ட பவளத்திற்கு அவர் பசியோடு கிடக்கப் போகிறாரே என்ற வேதனை தொண்டைய்ய உடைத்துக் கொண்டு வந்தது.

ஆறுமுகம் மனைவியைத் தேற்றினார். "சரி சரி... ஏனப்பா இப்ப அழுகிறாய்...? நான் சாப்பிட்டிட்டுத்தான் வந்தனான்... உங்கடை பாடு எப்பிடி எண்டுதான்

கேட்டனான்." அவர்களுடைய பாடு எப்படி இருந்திருக்கும் என்பது அவர் அறியாததல்ல.

பிள்ளைகளின் வயிறு காய்வதைப் பார்த்துக் கொண்டு ஒரு தாயினால் எப்படித்தான் சும்மாயிருக்க முடியும்? வெளியிலே சொன்னால் வெட்கக்கேடு - மத்தியானம் ஒரு பேணி அரிசியில் (அதுகூடக் கடன்பட்டு) கஞ்சியாகக் காய்ச்சி ஊற்றினாள். இரண்டு குமர், மூன்று சிறுசுகள், நடுவில் இரண்டு படிக்கிற வயசுப் பெடியள். எத்தனை நாட்களுக்கு இப்படி மற்றவர்களை இரந்துகொண்டுபோவது, அவர்களது நொட்டைக் கதைகளைக் கேட்பது? பவளத்திற்கு நெஞ்சு பொறுக்காத கவலை முட்டியது.

"இஞ்சருங்கோ... பிள்ளையளுக்கெல்லாம் நஞ்சைக் குடுத்திட்டு நாங்களும் சாவமே?"

"உனக்கென்ன விசரே..? இப்ப என்ன குடிமுழுகிப் போச்செண்டே இந்தக் கதை கதைக்கிறாய்?" மனைவியே தனது தன்மானத்துக்குச் சவால் விடுவதாக நினைத்துக் கொண்டு ஆறுமுகம் சீறிப் பாய்ந்தார்.

அவள் அதற்குமேற் பேசவில்லை, 'அந்த மனிசனும்தான் என்ன செய்யிறது?'

ஆறுமுகம் பாயைத் தட்டிப் போட்டுக்கொண்டு படுக்கப்போனபொழுது பவளம் ஒரு பேணியிற் சுடு தண்ணீரைக் கொண்டுவந்து கொடுத்தாள் : "இந்தாங்கோ... வெறுவயித்தோடை கிடக்கக்கூடாது." அவர் ஒன்றும் பேசாமல் தண்ணீரை வேண்டி மொடு மொடென்று குடித்துவிட்டுப் படுத்தார்.

பவளம் திண்ணையில் சேலைத்தலைப்பை விரித்து 'சிவனே!' எனப் படுத்துக்கொண்டாள்.

பாவம், தன்னிடம் வந்த காலத்தில் அவள் என்ன சுகத்தைக் கண்டிருக்கிறாள் எனக் கவலை தோன்றியது.

"மெய்யே...? இந்தக் குளிருக்குள்ளை... ஏன் வெறும் திண்ணையிலை படுக்கிறீர்...? பாயை எடுத்துப் போட்டுக்கொண்டு படுமன்!" அடங்காத இரக்கத்தோடுதான் சொன்னார். அவர் சொல்வது கேட்காததுபோல பவளம் படுத்திருந்தாள்.

அவரும் பேசவில்லை. இரக்கப்படத்தான் முடிகிறது. அவர்களது தேவைகளையெல்லாம் பூரணமாகக் கொடுக்க முடியாத தனது இயலாமையை எண்ணி வருந்தினார். பிறகு சொன்னார்: "நாளைக்கு எப்படியாவது ஒரு வழியைப் பாப்பம்." ஒரு ஆறுதலுக்காகவாவது அப்படிச் சொல்ல வேண்டியிருந்தது. ஆனால் நாளைக்கு என்ன செய்யப்போகிறார் என்பது கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

நித்திரை வர மறுத்தது. நாளைக்கு என்ன செய்யலாம்? எங்கே போகலாம்? யாரைப் பிடிக்கலாம்? மனைவியும், குழந்தைகளும்கூட உறங்காமலிருக்கிற அசுகை தெரிகிறது. என்னவென்று புரியாத வேதனை மனதை அலைத்தது. ஒரு வேலை கிடைத்துவிடுமென்று நம்பிக்கையில் அவரும் அலையாத இடமில்லை. கார் சாரதியாக முப்பது வருடங்களாகக் காலத்தைக் கடத்தியவர். கடைசியாக ஓடிய இடத்தில் கணக்குத் தீர்க்கப்பட்டு ஒரு மாதத்திற்கு மேலாகிறது. பெற்றோல் விலை ஏறியதும், இனிக் கட்டுப்படியாகாது என முதலாளி வாகனத்தை விற்கப் போகிறாராம்.

நன்கு அனுபவமுள்ள கார் டிறைவர்கள் தேவை எனப் பத்திரிகையில் விளம்பரப்படுத்துகிறார்கள் - நேரில் வரவும்! குழந்தை குட்டிகளையம், பொறுப்புகளையும் மறந்து கொழும்பிற்குப் போகமுடியாது. என்னப்பா, யாழ்ப்பாணத்தில் அப்படியொரு பணக்காரன் இல்லாமற் போய்விட்டானா எனக் காரணமற்ற எரிச்சலும் ஏற்பட்டது. ஒரு வேலை கிடைக்கும்வரை என்று சொல்லிக்கொண்டு பெண்சாதி பிள்ளைகளின் காதில், கழுத்தில் தப்பியொட்டிக் கிடந்தவற்றையும் விற்றுச் சுட்டுச் 'சரிக்கட்டிய' நாட்களும் போய்விட்டன. பல நினைவுகளோடும் விடியப் புறமாகத்தான் உறங்கியிருக்க வேண்டும். மீண்டும் விடிய தன் பிள்ளைகளின் முகத்திலே விழிக்கக்கூடக் கூச்சமடைந்தவராய் நேரத்தோடு போய்விட எழுந்தார்.

ஆறுமுகம் வெளியே போக ஆயத்தமாக வந்த பொழுது, பவளம் ஏற்கனவே எழுந்து வீடு வாசலைக் கூட்டிச் சுத்தம் செய்துவிட்டு நிற்பதைக் கண்டார். அன்றுதொட்டே அவளிடம் உள்ள பழக்கம் இது. நிலம் விடிவதற்கு முன்னரே எழுந்து பாத்திரங்களைத் துலக்கி, வீடுவாசலைத் துப்புரவு செய்து அவளும் தூய்மையாக...

அதற்கு மேல் அவரால் நினைத்துப்பார்க்க முடியவில்லை. (அதற்குப் பிறகு அவள் கைச்சுறுக்காகச் சமைத்து கணவனுக்கும் பிள்ளைகளுக்கும் சாப்பிடக் கொடுப்பாள்.)

வெறும் தேயிலைச் சாயத்தை கொண்டுவந்து அவரிடம் கொடுத்தாள் பவளம். சூடாக இருந்ததால் அவ்வளவு கசப்புத் தெரியவில்லை.

"எப்பிடியும் பத்துப் பதினொரு மணிக்கு முதல் ஏதாவது பார்த்துக்கொண்டு வாறன்" எனச் சமாதானம்

கூறிவிட்டு நடந்தார் ஆறுமுகம். அவள் சேலைத்தலைப்பில் முடிந்து வைத்திருந்த ஒரு ரூபாய்க் குற்றியை அவிழ்த்து அவரிடம் கொடுத்தாள்!

"இந்தாங்கோ... நேற்று முழுக்கச் சாப்பிட்டிருக்க மாட்டியள்... முதல்லை ஏதாவது சாப்பிட்டிட்டு போற இடத்துக்குப் போங்கோ!"

அவர் ஏன், ஏது என்று ஒன்றுமே கேட்காமல் காசை வேண்டிக்கொண்டு போனார்.

வேலையொன்று இல்லாமல் கணவன் அலைவதையும் குடும்ப நிலைமையையும் பொறுக்காமல் நேர்த்திக்கடனாக இந்த ஒரு ரூபாயை நினைத்து வைத்திருந்தாள். "அப்பனே! அவருக்கு கெதியிலை; ஒரு வேலை கிடைக்கவேணும்." இன்றைக்கு மனது கேளாமல் அதையும் எடுத்துக் கொடுத்துவிட்டாள். 'எனக்கு அவர்தான் கடவுள், எல்லாம்!' என மனதுக்குச் சமாதானமும் சொல்லிக்கொண்டாள்.

அவரைப் போகவிட்டு அழுவாரைப் போலப் பார்த்துக்கொண்டு நின்றாள் பவளம், "ஏன்தான் இந்தக் கண்கெட்ட கடவுள் இப்பிடி மனிசனைப் போட்டு அலைக்குதோ!"

மூத்த பெண் கமலா எழுந்து அம்மாவைத் தேடிக்கொண்டு வாசலுக்கு வந்தாள். பிள்ளைகளுக்கு நஞ்சு கொடுத்துவிட்டுத் தாங்களும் சாகிற கதையை இரவு அம்மா சொன்னபொழுது அவளும் கேட்டுக்கொண்டே படுத்திருந்தாள். அம்மா அப்படி ஏதாவது ஏறுக்குமாறாய் செய்து விடுவாளோ என்ற பயம்.

"ஆரையம்மா பாத்துக்கொண்டு நிக்கிறாய்?"

"நான் ஆரைப் பாக்கிறது...? கொய்யாவைத்தான் அனுப்பிப் போட்டு நிக்கிறன் மோனை."

"இப்ப இதிலை யோசிச்சுக் கொண்டு நின்று என்ன செய்யிறது...? எங்களைப் படைச்ச கடவுள் ஒரு வழியையும் காட்டாமல் விடப் போறாரே... வாணை! உள்ளுக்குப் போவம்!"

தம்பிமார் பாடசாலைக்குப் போக ஆயத்தமான பொழுது கமலா தாயிடம் சொன்னாள்.

"வீட்டிலை இருக்கிற நாங்கள் சும்மா இருக்கலாம்... பள்ளிக்குப்போற பெடியள் என்னெண்டணை பசி கிடக்கேலும்?"

அம்மாதான் என்ன செய்வாள்?

"எடேய், ராசா! சின்னத்தம்பி கடையிலை ஓடிப்போய் ரெண்டு றாத்தல் பாண் கேட்டுப் பாரப்பு...! பின்னேரம் ஐயா வந்தவுடனை காசு தரலாமெண்டு"

"எனக்குத் தெரியாது போ...! இவ்வளவு நாளும் வேண்டின காசு குடுக்கயில்லை... அவன் அங்கை ஆக்களுக்கு முன்னாலை தாறுமாறாய்ப் பேசிறான்."

"என்ரை குஞ்செல்லே! போட்டுவாடி... பிறகு அப்புவவைக்குத்தானே பசிக்கும்?"

"பசி கிடந்து செத்தாலும் பறவாயில்லை... அவனிட்டைப் போய் உந்தப் பேச்சுக் கேக்கமாட்டன்!"

"இவன் உரிச்சுப் படைச்சுத் தேப்பன்தான்... சரியான ரோசக்காறன்" என ஒருவித பெருமையுணர்வோடு சொன்னாள் அம்மா. அவனுக்கு அடுத்தவனைக் கூப்பிட்டு அனுப்பினாள் கமலா. யார் சொல்லாவிட்டாலும் போய்க் கேட்கின்ற நிலையிற்தான் அவன் இருந்தான்.

ஆனால் போனவன் தோல்வியோடு திரும்பி வந்தான்.

"நான் எவ்வளவோ கேட்டுப் பாத்தன்.. அவன் தரேலாதெண்டிட்டான்... குடுக்க வேண்டிய கடனைக் குடுத்துப்போட்டு பிறகு வரட்டாம்... ஆக்களுக்கு முன்னாலை பெரிய லோ எல்லாம் பேசினான். இனி உன்ரை கடைப்பக்கம் வரமாட்டன் எண்டு சொல்லிப் போட்டுத்தான் வந்தனான்." அவன் உணர்ச்சி வசப்பட்டுப் போயிருந்தான். 'பாவம், பிள்ளை பசிக்கொடுமையிலை அவனோடை சண்டை பிடிச்சிருக்குப்போலை' என அம்மா நினைத்துக்கொண்டாள்.

"உதுக்குத்தான் அப்பவே சொன்னனான்... போக வேண்டாமென்று!" என வெடித்துக்கொண்டு புறப்பட்டுப் போனான் மூத்தமகன்.

"போட்டு வாங்கோடி ராசா... மத்தியானம் ஐயா ஏதேன் கொண்டு வந்திடுவார்... சமைச்சு வைக்கிறன்."

இனி, விடிய எழுந்த நேரம் முதலே சிணுங்கிக் கொண்டிருக்கும் சின்னவனைச் சமாளித்தாக வேண்டும்.

★★★

சந்தியில் இன்னும் சனநடமாட்டம் அதிகரிக்கவில்லை. சில கடைகளும் திறக்கப்படவில்லை. தேநீர்க் கடை முருகேசு மாத்திரம் கடையைத் திறந்து தண்ணீர் தெளித்து வாழைக் குலையை எடுத்து வெளியே தொங்கவிட்டுக் கொண்டிருந்தான். வீட்டிலிருந்து வெளியேறி வந்த ஆறுமுகம் மேற்கொண்டு என்ன செய்வது என்று புரியாமல் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டு நின்றார். இதே சந்தியிற்தான் முன்னர் அவர் கார் வைத்து ஓடியவர். அதனால் இவ்விடத்தில் உள்ளவர்கள், கடை வைத்திருப்பவர்கள் எல்லாம் அவருக்குப் பழக்கம். பழைய ட்றைவர்மார்களில் இன்னும் இரண்டொருவர் கார் வைத்திருக்கிறார்கள். என்றாலும் உழைப்புக் குறைவுதானாம் - எப்பொழுதாவது இருந்துவிட்டுத்தான் ஒரு சவாரி கொத்தும்.

கடை திறக்க வந்த சலூன்காரப் பெடியன் ஆறுமுகத்தின் கோலத்தைக் கண்டு "என்னண்ணை இந்தப் பக்கம் மறந்து போச்சோ?" என்றான். கஷ்டப்பட்டு அவனுக்கு ஒரு சிரிப்பை வெளிப்படுத்திக் காட்டினார். "எங்கை தம்பி நேரம் கிடைக்குது?" ஆனால் இப்பொழுது கொஞ்ச நாட்களாக அவர் எந்த நேரமும் இங்கு வந்து 'சும்மா' நிற்கிறாரே! பல நாட்களாகச் 'சேவ்' எடுக்கப்படாததால் முட்களாகக் குற்றிவளருகிற தாடி! நாடியைச் சொறிந்தவாறு வீதியை வெறித்தார்.

பாடசாலைக்குப் போகின்ற சிறுவர், சிறுமியர்கள்! அவருக்கு அந்தப் பாக்கியம் கூடக் கிடைக்கவில்லை. பதினேழு வயசாயிருக்கும் பொழுதே அவரோடு சேர்ந்த இரண்டு சகோதரிகளையும் இரு சகோதரர்களையும் தாயையும் அவரது பொறுப்பில் விட்டு விட்டுத் தந்தை

காலமாகினார். ஆறுமுகம் படிப்பை இடைநிறுத்தி உழைப்பாளியாக மாற வேண்டியிருந்தது. கதிரவேலுவின் லொறியில் கிளீனராகச் சேர்ந்து, கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் ஓடிய காலங்களில் சாரத்தியம் பழகி, லொறிச் சாரதியாக இரவு பகல் பாராது உழைத்து உழைத்து, ஓரளவு கடனும்பட்டு ஒரு காருக்குச் சொந்தக்காரனாகி சகோதரிகளை ஒவ்வொருத்தனின் கையில் ஒப்படைத்து, தம்பிமாரைப் படிப்பித்து ஆளாக்கி - அப்பொழுதெல்லாம் அம்மா சொல்லுவாள்.

"தம்பி.. இந்தக் குடும்பத்துக்காக இந்த வயசிலையே... உழைச்சு உழைச்சு ஓடாய்ப் போறாய்... கடவுள் உன்னைக் கைவிடமாட்டார்... பின்னடிக்கு நல்லாய் இருப்பாய்!" ஓர் ஆசீர்வாதம்போல தனது மன ஆறுதலுக்காகவோ அல்லது அவரது மன ஆறுதலுக்காகவோதான் அப்படிச் சொன்னாளா என்பதும் தெரியாது. அந்த அம்மாவே அவரைக் கைவிட்டு இறைவனடி சேர்ந்தபின்னர் இறைவனுக்கு அவர்பால் என்ன கவலை?

இப்பொழுது குடும்ப சமேதராகி கொழும்பு வாழ்க்கை நடத்துகிற தம்பிமார்களும் வருவது குறைவு. அரசாங்க உத்தியோககாறர் - பல தொல்லைகள் இருக்கும். ஒரு நல்லநாள் பெருநாளில் அக்கா, தங்கை, தம்பிமார் எல்லோரும் வந்து நிற்பார்கள். எவ்வளவு கலகலப்பாயிருக்கும்! அந்த நாட்களின் இனிமையை நினைத்து ஏங்கினார். எவ்வளவு சுமையென்றாலும் மனதை அழுத்தாத சுகம் இருந்தது. இப்பொழுது, "அண்ணை பாவம்...! கஷ்டப்பட்டுப் போச்சுது.... நெடுகலும் நாங்கள் போய்த் தொல்லை குடுக்கக் கூடாது!" என்ற பெரிய மனசு அவர்களுக்கு!

கார்க்காரச் சண்முகம் - அவரிடம் கார் பழகியவன் ரௌனுக்குப் போகிறான் போலிருக்கிறது... அவரைக் கண்டதும் ஸிலோ பண்ணி வெளியே தலையை நீட்டி "என்னண்ணை ரௌனுக்கோ?" என்று கேட்டான். குருவுக்குக் கொடுக்கிற மரியாதை! அவர் "இல்லை" எனச் சொல்லிவிட்டு நின்றார். சொந்தமாக இருந்த காரையும் தனது கடைசித் தங்கையின் திருமணத்தின் போது விற்றது எவ்வளவு மடத்தனம் என எண்ணினார்.

தன்னிடம் இப்பொழுது எதுவுமே இல்லை எனவும் நினைத்துக்கொண்டார். இப்படி ஒரு கஷ்டம் அவருக்கு ஒருநாளும் வந்ததில்லை. இல்லையென்று சொல்லாமல் எத்தனை பேருக்கு அள்ளிக் கொடுத்த கை வரண்டு போய்விட்டது. எப்பொழுதுமே அவர் தனக்காக எதையும் சேர்த்தவரல்ல. நிறைய இல்லாமலே உழைப்பதையெல்லாம் கொடுத்தவர்! அவரிடம் கொடுப்பதற்கு ஒன்றுமில்லை யென்றதும் விலகிவிட்ட உறவுகள்!

விருத்தெரிந்த காலம் முதலே தனக்கு வாழ்க்கை ஒரு சவாலாக அமைந்துவிட்டதை நினைத்துப் பார்த்தார். ஒரு போராளியாகவே வாழ்க்கையை எதிர்கொண்ட நெஞ்சுரம் வேறு யாருக்கு வரும் எனத் தன்னை எண்ணிப் பெருமையும் அடைந்தார். இப்பொழுது சோர்ந்துபோய் விட்டேனா அல்லது தோல்வியா எனப் பயம் கொண்டு, அடுத்த கணமே, இது தோல்வியல்ல தற்காலிகமான சிறு தடங்கலே என மனதைத் தேற்றிக்கொண்டார்.

வீதியில் நடமாட்டம் அதிகரித்துவிட்டது. வாகனங்கள், சைக்கிள்காரரர், சம்பாதிக்கப் போகின்ற அலுவலர்கள், ஆசிரியர்கள், இன்னும் கூட்டம் கூட்டமாகப் போகிற பாடசாலைப் பிள்ளைகள் - 'கடவுளே! பிள்ளையள் சாப்பிடாமற்தான் போகுதோ என்னவோ?'

தான் இப்பொழுது இறைவனைப் பற்றியெல்லாம் நினைக்கத் தொடங்கியிருக்கிறேன் என்பது அவருக்கு அதிசயத்தை அளித்தது. நண்பர்களோடு சேர்ந்து எந்தக் கவலையும் இல்லாமல் உழைப்பு ஒன்றையே தாரக மந்திரமாகக் கொண்டு வாழ்ந்து திரிந்த நாட்கள்! அந்த இளமைக் காலங்கள் - கோபால், மணி, சுந்தரம், முத்துராசா...

கோபாலும் மணியும் கார் சாரதிகள். கோபால் சொந்தமாகக் கார் வைத்திருந்தான். மணி சம்பளத்துக்கு ஓடியவன். சுந்தரம் தேநீர் கடையில் நின்றவன். நன்றாக ரீ போடுவான். நல்ல பாட்டுக்காரன் (என்று ஒரு நினைவு!). எல்லோருமாகச் சேர்ந்து சினிமா செக்கன்ட் ஷோவிற்குப் போவார்கள். அதற்குத்தான் நேரம் ஒத்துவரும். அடுத்தநாள் சுந்தரம் பாடிக்காட்டுவான். ஆறுமுகம் 'சபாஷ்' போடுவார். அது ஏளனமா? அல்லது புகழ்ச்சியா என்று புரியாமல் தன்னை மறந்து பாடுவான் அவன். முத்துராசா விழுந்து விழுந்து சிரிப்பான்.

முத்துராசாவிற்கு அப்பொழுது ஒரு முயற்சியும் இல்லை. வறிய குடும்பத்துப் பெடியன். நோய்க்காரத் தந்தை. அன்றாடம் சாப்பாட்டுக்கே இல்லாத குறைபாடு அவனை அவர்களோடு சேர்த்து வைத்தது. அவனென்றால் அவர்களது புண்ணியத்தில் ஏதாவது போட்டுக் கொள்வான். வீட்டிலே பட்டினிதான் - ஆறுமுகத்திற்கு ஒரு 'ஐடியா' தோன்றியது.

அதன்படி, ஒரு சுபநாளில் யாழ்ப்பாண நகரத்தில் முத்துராசாவிற்குச் சொந்தமாக ஒரு 'ரீறூம்' திறக்கப்பட்டது. பணமாகவும் வேறு வகையிலும் எல்லா உதவிகளையும் நண்பர்களின் ஒத்தாசையோடு ஆறுமுகம்

செய்து வைத்தார். இன்றைக்கு அது ஒரு 'ரீறூம்' அல்ல! தங்குமிட வசதிகள், அறுசுவை உணவுகள் வழங்கும் பெரிய ஹோட்டலாக வளர்ச்சியடைந்திருக்கிறது.

மின்னலைப் போல ஒர் உணர்வு தட்டியது. முத்துராசாவிடம் சென்றால் என்ன?

அந்த நினைவு வந்ததுமே பெரிய சந்தோஷமடைந்தவராய் நடக்கத் தொடங்கினார். பிரச்சினைகளெல்லாம் தீர்ந்துவிட்டதுபோல மனசு பறந்தது. புதிய உற்சாகம் பிறந்துவிட்டது. அவர் ஓடியே போயிருப்பார். மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என நடக்க வேண்டியிருந்தது.

'என்ரை கெட்டகாலத்துக்கு... முத்துராசா இருக்கிறானோ... இல்லையோ தெரியாது... கடவுளே அவன் இருக்கவேணும்!' என மனது பிரார்த்தனை செய்தது.

ஹோட்டல் வாசலில் முத்துராசாவின் கார் நின்றது. 'அப்பாடா! ஆள் இருக்கிறான்!' வாசல் வரை சென்று சற்றுப் பின்வாங்கி நின்றார் ஆறுமுகம். எந்த முகத்தை வைத்துக்கொண்டு கேட்பது? எப்பவுமே கைநீட்டி அறியாத சுபாவம்.

வெறும் கஞ்சித்தண்ணியோடு கிடக்கின்ற குழந்தைகளின் நினைவு சட்டென்று அவரை உந்தித் தள்ளியது.

காசு மேசையில் முத்துராசா ராசாவென இருந்தான். (மன்னிக்கவும்... இருந்தார்) ஒருமையிலா, பன்மையிலா சம்பாஷிக்கலாம் என்ற சங்கடம் ஏற்பட்டது. முன்பென்றால் ஒருமை. அவன் தனி ஆளாக இருந்தான்.

இப்பொழுது பொருள், பண்டம், சொத்து எனப் பெருகிப் பன்மையாக இருக்கிறார்.

வியர்க்க விறுவிறுக்க வந்து நிற்கிற ஆறுமுகத்தைக் கண்டு முத்துராசாவின் முகத்தில் மலர்ச்சி ஏற்பட்டது. அல்லது அந்த முகத்தில் இயற்கையாக உள்ள மலர்ச்சியோ தெரியாது.

"என்ன ஆறுமுகம் இந்தப் பக்கம்?"

"ஒன்றுமில்லை... சும்மாதான்..."

உணவருந்திவிட்டு வெளியேறுகிற சிலர் பணம் செலுத்துவதற்காக இவர் ஒதுங்கி நின்றார், பிறகு கேட்டார்:

"ஒரு முக்கியமான அலுவலாத்தான் வந்தனான்... கடைசியாய் ஓடின இடத்தாலை... நிண்டும் ஒரு மாதத்துக்கு மேலையாகுது... வேறை இடமும் கிடைச்சபாடில்லை... கையிலை மடியிலை இருந்ததுகளும் கரைஞ்சுபோச்சு... வீட்டிலையெண்டால் பெரிய கஷ்டம்... ஆரிட்டையும் கைநீட்டிப் போகவும் விருப்பமில்லை... ஒண்டுக்கும் வழியில்லாமல்தான் இஞ்சை வந்தனான்..."

முத்துராசாவின் முகம் இதைக்கேட்டு இருட்சி அடைந்தது. "கவலையோ?" ஆறுமுகமே தொடர்ந்து பேசினார்.

".... ஒரு நூறு ரூபாயெண்டாலும் தந்தால் பெரிய உதவியாயிருக்கும்!"

முத்துராசா சமாதானமாகச் சிரித்தார்.

"இதுதானே...? நீ முதல்லை உள்ளுக்குப் போய் ஒரு ரீ குடிச்சிட்டு வாவன்... களைச்சுப்போய் நிக்கிறாய்" என்றவாறு உட்புறம் திரும்பி ஒரு 'ரீ க்கு ஓடர் கொடுத்தார்.

ஆறுமுகத்தின் கண்கள் பனித்தன. அது உதவி என்று கேட்டு வந்தபொழுது மனிசத் தனத்தோடு தன்னைக் கௌரவிக்கின்ற முத்துராசாவின் பெருந்தன்மையை நினைத்தா? அல்லது பெண்சாதி பிள்ளைகள் வயிறு குளிர இன்றைக்குச் சாப்பிடப் போகிறார்கள் என்ற சந்தோஷத்திலா என்று புரியவில்லை.

தேநீரைக் குடித்ததும் அரைவாசி உயிர் வந்தது போலிருந்தது.

முத்துராசாவிற்கு முன்னால் போய் வலிந்து சிரிப்பை வெளிப்படுத்தினார் ஆறுமுகம்.

"என்ன ஆறுமுகம்... நிலைமை விளங்காத மாதிரிக் கதைக்கிறாய்...? நூறு ரூபாய்க்கு... இப்ப நினைச்சவுடனே நான் எங்கை போறது...? நீ வந்து நின்ற கோலத்தைப் பாத்திட்டுத்தான்... என்னென்று சொல்லுறதெண்டு தெரியாமல் ரீயைக் குடிச்சிட்டு வா எண்டனான்..."

அவர் ஆளாக்கிவிட்ட பழைய முத்துராசாவா பேசுகிறான்? 'இவனிட்டைப் போய்த் தேத்தண்ணியை வேண்டிக் குடிச்சனே' என்ற தாழ்வுணர்வு மனதை அழுத்தியபொழுது, மனைவி கொடுத்துவிட்ட ஒரு ரூபாய் நினைவில் வந்து தலையை நிமிர்த்தியது.

"இந்தா... தேத்தண்ணிக் காசை எடு!" என்று காசைக் கொடுத்தார். காலையில் இரக்கத்தோடு வழியனுப்பி வைத்த அந்தப் புண்ணியவதியின் தோற்றம், அவளது துணை நெஞ்சிற் தைரியத்தைக் கொடுத்தது.

*(சிரித்திரன், 1980)*

# சுகங்களும் சுமைகளும்



தலைக்கு மேலே சுழற்சி.

தயவு தாட்சண்யமில்லாமல் கொளுத்துகின்ற வெயிலையும் பொருட்படுத்தாமல் மத்தியானம் சாப்பாட்டுக்காக 'முருகன் கபேக்'குச் சென்று வந்ததால் ஏற்பட்ட உடலின் அயற்சியைப் போக்குகின்ற காற்றின் சுகமான விசுறல் - மின்விசிறியின் சிரமதானம். கதிரவேலுவின் மனதில் யாருக்கென்று புரியாத நன்றியுணர்வும் அற்பப் பெருமிதமும் ஏற்பட்டது. 'கௌவ்ன்மேன்ட் சேவன்றாய் இருக்கிறதிலையும் ஒரு சுகம் இருக்கத்தான் செய்யிது.' பெரிய மனித தோரணையுடன் கால்களை நீட்டி நிமிர்ந்து கதிரையின் சார்மனையில் தலையைப் பதித்து மின் விசிறியை சொகுசாக அனுபவித்தான். அயற்சியைப் போக்குவதற்காக காற்றை அதிகமாக உள்ளிழுத்தபொழுது, அது பெருமூச்சாக வெளிப்பட்டது.

'அரசாங்க உத்தியோகத்தனாய் இருந்து கண்ட பலன் இதுதான்' - மீண்டும் சலிப்படைகின்ற மனது. இது அடிக்கடி மனதை அரிக்கின்ற வியாதிதானென்றாலும், அதிகாலையில் கிடைத்த மிஸிஸ் அருள்நாயகத்தின் 'முளுவியளத்திற்குப்' பிறகு சற்றுக் கடுமைப்படுத்தி விட்டது.

மாதா மாதம் ஐந்தாம் திகதிக்கு முன்னர் அறை வாடகையான ரூபா ஐம்பதை மனுசிக்குப் பசியாற வேண்டும். அது தவறினால் மனுசியின் கண்ணிற் படவே தேவையில்லை. கண்களிற் படாமல் கழன்று விடவேண்டும்

என்று இரகசியமான திட்டத்துடன் அதிகாலையிலேயே எழுந்தான் கதிரவேலு. அவசர அவசரமாக கருமங்களை முடித்துக்கொண்டு வெளியேறிய பொழுதுதான் திட்டமெல்லாம் தவிடுபொடியாகிவிட்டதை உணர முடிந்தது. வாசற் கதவருகில் மகராசி 'விளக்குமாறும் கையுமாகக்' காட்சியளித்துக் கொண்டிருந்தாள்.

அம்மாவைக் காணாதவன் போல கதிரவேலு நழுவிக் கொண்டிருந்த பொழுது...

"மிஸ்டர் கதிரவேலு" - மிஸிஸ் அருள்நாயகத்தின் அழைப்புதான். அந்தக் குரலுக்கு எவ்வளவு சக்தி! மந்திரத்தாற் கட்டுண்டவைபோல அவனது கால்கள் சட்டென நின்றன.

"இன்றைக்கு என்ன திகதி?" கேட்கப்பட்ட தொனி அதட்டல் நிறைந்ததாயிருந்தது. பதில் தெரியாத ஒரு மொக்கு மாணவனைப் போல இவன் மௌனம் சாதித்தான். "பதினெட்டாம் திகதியாச்சுது... இன்னும் காசு தரவில்லை?" எசமானியின் குரலையும் அவளுடைய சன்னதமான பார்வையையும் கண்டு பக்கத்தில் நின்ற சடைநாய் (செல்லக் குஞ்சு!) 'வாள் வாள்' எனக் கத்தல் போட்டு தனது செஞ்சோற்றுக் கடனைச் செலுத்தத் தொடங்கியது.

கதிரவேலு தனது சமாதானப் பேச்சு வார்த்தையை ஆரம்பித்தான்.

"எனக்கு எந்த நியாயங்களும் தேவையில்லை..." அடிக்காத குறையாக, அம்மா அடித்துக் கூறினாள். கடமைப்பட்டவன் போல இவன் கட்டுப்பட்டு நின்றான்.

"... நீங்களெல்லாம் வெக்கமில்லாமல் லோங்ஸ்ஸைப் போட்டுக் கொண்டு திரியிறீங்களே?" அதற்குமேல் இவனுக்கு எதுவுமே கேட்கவில்லை.

"மிஸ்டர் கதிரவேலு...! இன்றைக்கு ஒரு முடிவு தெரியவேணும்... எத்தனையோ பேர் அறைகேட்டு வருகினம்... நான் உங்களுக்குப் புண்ணியத்துக்கு இடம் தரேலாது."

இவன் சோர்வுடன் நடக்கத் தொடங்கினான்.

'இன்டைக்கு என்ன பாடுபட்டாவது ஆரிட்டையேன் வேண்டிக்கொண்டு வந்து மனிசியின்ரை மூஞ்சையிலை எறிஞ்சு போட்டுத்தான் மற்றவேலை பார்க்கிறது...'

'எத்தினை வருசமாய் இருக்கிறன்... நாலு வருசத்துக்கு மேலையிருக்கும்... இன்னும் இவளுக்கு என்னிலை நம்பிக்கையில்லையே... ஒரு மனேஸ் தெரியாத சனங்கள்... மனிசன்ரை கஷ்டநஷ்டம் விளங்காத சனியன்கள்... மனிசனைத் தேவையில்லை... காசுதான் முக்கியம்!'

'பெரிய திறமான அறையே...! நானெண்டபடியால் இருக்கிறன்...! ரெண்டு கட்டில் போட இடம் காணாது... அதுக்குள்ளை ரெண்டு பேரை இருத்தி ஆளுக்கு அம்பது ரூபா கறக்கிறாள்.... வாடைக்கு விட்டிருக்கிற ஐஞ்சு அறையிலையும் நாங்கள் எடுக்கிற ஒரு மாதச் சம்பளம் கிடைச்சிடும்..!

முகத்திலை அடிச்சமாதிரி இந்த அறையை விட்டிட்டுப் போயிடலாம்... விட்டிட்டும் எங்கை போறது?

வெள்ளவத்தையிலை ஒரு அறை எடுக்கிறதெண்டால் லேசுப்பட்ட காரியமே..."

சீ...! என்ன கேள்வி கேட்டாள்! இந்த பெல் பொட்டம், சப்பாத்து எல்லாம் சும்மா பேருக்குத்தானே! உண்மையிலேயே இதையெல்லாம் கழட்டி எறிஞ்சு போட்டுத்தான் நடக்கவேணும்... கிளீன் சூட்.. எம்ரி பொக்கற்!

- மன வெதுவெதுப்புடன் காலைச் சாப்பாட்டையும் மறந்து அலுவலகத்தையடைந்து தனது கதிரையில் தஞ்சமடைந்தான். மாலை நாலுமணி வரைக்கும்தான் அந்தக் கதிரையும் தஞ்சமளிக்கும். அதற்குப் பின்னர் எந்த முகத்துடன் அறைக்குப் போவது?

ஒவ்வொரு மாதமும் 'சலறி அட்வான்ஸ்' எடுத்தவுடன் வாடைக்காசைக் கொடுத்துவிடுவது வழக்கம். இம்முறை சம்பள முற்பணத்தை எடுத்துக்கொண்டு ஊருக்குப் போய்வந்த குற்றத்துக்காக மனிசத் தன்மையில்லாத ஒருத்திக்கு முன்னால் தலையைக் குனிந்து கொண்டு நிற்கவேண்டியேற்பட்டு விட்டது.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் ஒரு சுபநாளில் கதிரவேலுவுக்குத் திருமணம் நடந்தேறியது. பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட திருமணம்! கொழும்பிலே உத்தியோககாறனாய் இருக்கின்ற மாப்பிள்ளைக்குச் சீதனங்கள், சீர்வரிசை கொண்டாட்டங்கள் எல்லாம் வெகு தடல் புடல்! தான் இதற்கெல்லாம் தகுதியுடையவன்தானா என நினைக்கத் தோன்றுகின்ற அளவுக்குப் புது மாப்பிள்ளைக்கு ஒரு ராசாவைப் போல வரவேற்பு உபசாரங்கள், எக்கச்சக்கம்!

'சுவீப் அடிச்ச மாதிரித்தான்... பொம்பிளையும் நல்ல வடிவு... சீதனமும் பிழையில்லை' என கதிரவேலு மகிழ்ச்சிக் கடலில் மூழ்க ஆரம்பித்தான். ஆனால் தகப்பனுக்குக் கிடைத்த 'டொனேசன்' அவரது கடன் தொல்லைகளைப் போக்குகின்ற பணியில் கரைந்தது. இவனுடைய பெயரில் பொருள் பண்டமாகவும் காசாகவும் இருந்த தொகையில் கை வைக்க முடியாது. கொழும்பிலே கொழுத்த சம்பளம் வாங்குகின்ற ஒரு மாப்பிள்ளை (அப்படித்தான் பெண் வீட்டாருக்குச் சொல்லப்பட்டது!) சுய கௌரவத்தையும் மறந்து சீதனப் பணத்தைத் தொடலாமா? அதுதான் கைக்கெட்டவில்லை. அழகான மனைவியையாவது கொழும்புக்கு அழைத்து வரலாமென்றால்... கொழும்பிலே வீடு எடுப்பது குதிரைக்கொம்பு தேடுவதுபோல. அப்படியே ஒரு வீடு கிடைத்தாலும் அது முழு உழைப்பையும் விழுங்குகிற வாடகையைக் கேட்கிறது.

கட்டிய மனைவியை ஊரிலே விட்டு இங்கு எத்தனை நாட்களுக்குக் கடைச்சாப்பாட்டை நம்பிக் கொண்டிருக்க முடியும்? அதனால் ஊருக்குப் போக வேண்டுமென்ற பொல்லாத ஆசை இந்தப் புது மாப்பிள்ளைக்கு அடிக்கடி ஏற்படுகிறது. இளம் மனைவியைப் பார்க்கவென்று வெளிக்கிட்ட பின்னர் வெறுங்கையுடன் போக மனம் வருமா?

சம்பள முற்பணத்தை எடுத்துக்கொண்டு (வீட்டுச் சொந்தக்காரியின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு) மனைவியை மகிழ்விக்கின்ற பண்டங்களுடன் 'றெயின்' எடுத்தாயிற்று. (மனைவியை மகிழ்விக்கின்ற பொருட்களில் மாமா, மாமிக்கும் ஏதாவது வேண்டியாக வேண்டும்! 'மருமோன் எங்கள்ளை நல்ல பட்சம்!' என அவர்கள்

சொல்வதை அவள் வந்து, இவருடைய காதுகளில் போடுவதைக் காது குளிரக் கேட்கலாம். பாவம் அம்மா, பெற்றுப் போட்டு ஊணுறக்கமின்றி வளர்த்து ஆளாக்கிவிட்ட குற்றத்துக்காக அவள் மனம் மகிழ என்ன செய்திருக்கிறான்? அன்றைக்கும் இல்லை, இன்றைக்கும் இல்லை.)

ஊருக்கு வந்தாலே ஒரு புது உலகம் போல எல்லாப் பிரச்சினைகளுமே மறந்து விடுகிறது... விருந்து கொண்டாட்டங்கள், சினிமா இத்தியாதி! கைகளின் வரட்சியை மனைவிக்குக் கூடக் காட்ட விரும்பாமல் (பெரிய இடத்துச் சம்பந்தம்) ஊரிலே 'பிஸ்னஸ்' செய்கின்ற நண்பர்களிடம் 'றோலிங்'! அனுமதி பெற்றுக்கொண்டு வந்த 'லீவு' நாட்கள் முடிவடைந்ததும் அலுவலகத்துக்கு ஒரு 'சிக் - பெக் லீவ் - கதிரவேலு.'

இப்படியாக ஒரு சொர்க்கலோக சஞ்சாரத்தை முடித்துக்கொண்டு பதினேழாம் திகதி இரவு பூனையைப் போல வந்து அறையில் நுழைந்தாயிற்று!

"வாடகைக் காசைக் குடுக்க வக்கில்லை... மனிசியிட்டைப் போட்டாரோ... வரட்டுக்கும்!" என வழிமேல் விழி வைத்துப் பார்த்துக்கொண்டு நின்ற அருள்நாயகம் (மிஸிஸ்) அசுகை அறிந்தவுடன் அடுத்தநாள் அதிகாலையிலேயே எழுந்து கையும் களவுமாகப் பிடிப்பதற்கு வாசற்கதவருகில் வந்து நின்ற சங்கதி இந்தப் பூனைக்குத் தெரியாது. அப்பாவியைப் போல வந்து அம்மாவின் புலிப் பாய்ச்சலில் மாட்டிக் கொண்டது.

அலுவலகத்துக்கு சக ஊழியர்கள் வந்து கொண்டிருந்தார்கள். ஓடுமீன் ஓட உறுமீன் வரும்

வரைக்கும் இவன் வாடியிருந்தான். மத்தியானம் வரைக்கும் எந்த மீனும் அகப்படவில்லை. இவனிடம் உச்சி விளையாடிய மீன்கள் எப்படி அகப்படும்?

கூடவேலை செய்கின்ற பரமலிங்கம் மதியச் சாப்பாட்டுக்குப் போய்விட்டு வருவதைக் கண்டதும் 'இவரிட்டைக் கேட்டுப் பார்த்தாலென்ன?' என்ற எண்ணம். கதிரையில் வந்து அமர்ந்து விரலிடுக்குகளில் பொடியை எடுத்து, மூக்கில் வைத்து பெரிய ஓசையுடன் உறிஞ்சி அதன் தொடர்ச்சியாக வெளிப்படுகின்ற தும்மல்களை கைலேஞ்சியினால் தடுத்தாட் கொள்கிற தனது வழக்கமான சடங்கை ஆரம்பித்தார் பரமலிங்கம்.

'மனுசன்... வைச்சிருந்தால் தரும்... மறுப்புச் சொல்லாது... முந்தி ஒருநாளும் கேக்கயில்லைத்தானே!' சிலவேளை இல்லையெண்டிட்டால்... எவ்வளவு பரிசு கேடு...! அங்கை போய் அவளுக்கு முன்னாலை தலை குனிஞ்சுகொண்டு நிக்கிறதைவிட இது பரவாயில்லை... ஆக்களும் இல்லைத்தானே... கேட்டுப்பாப்பம்...'

"என்ன தம்பி... கதிரவேலு... நல்லாய் யோசிக்கிறாய்... மனிசியைப் பிரிஞ்சு வந்த கவலையோ?" அவனுடைய மனதைச் சீண்டிவிட்டதாக நினைத்துக் கொண்டு அட்டகாசமாகச் சிரித்தார் பரமலிங்கம். இவன் பொடி வைத்தான்.

"இல்லை அண்ணை... உங்களுக்குச் சொன்னாலென்ன சிநேகிதப் பொடியனொருத்தன் இப்ப சாப்பாட்டுக் கடையிலை கண்டாப்போலை கேட்டான்... ஏதோ அவசர தேவையாம்... அம்பது ரூபா வேணுமாம்... நானும் ஊருக்குப் போனாப்போலை கையிலை கிடந்த

காசெல்லாம் சிலவழிச்சுப் போட்டு வந்திட்டன்... இருந்தாப் போலை அவசரத்துக்கு பாங்கிலை இருந்து எடுக்கேலுமே...? பின்னேரம் எப்பிடியும் தாறனெண்டு சொல்லிப் போட்டு வந்திட்டன்... உங்களிட்டை இருந்தால்..."

பரமலிங்கம் மீண்டும் தன் உடல் குலுங்கச் சிரித்தார்.

"என்ன தம்பி... பகிடி விடுறியே...? இருந்தால் உனக்கு இல்லையெண்டு சொல்லுவேனே..." தொடர்ந்தும் அவர் சொன்ன நியாயங்கள் இவனுக்குக் கேட்கவில்லை.

"சீ! என்ன மானம் கெட்ட சீவியம்... போயும் போயும் இந்த மனிசனிட்டைக் கேட்டேனே..."

மதிய இடைவேளை நேரம் முடிந்துவிட்டது. மீண்டும் அலுவல்கள் ஆரம்பித்தன. கதிரவேலும் சில விபரத்தாள்களை எடுத்து மேசைமேல் வைத்தான், கடமைக்காக. விசிறுகின்ற காற்றுடன் பறந்துவிடத் துடிக்கின்ற தாள்கள் சுலபமான வாழ்க்கையை விரும்பும் மனிதனின் மனநிலையை உணர்த்தின. தாள்கள் பறந்து விடாதவாறு ஒரு பாரத்தை எடுத்து வைத்தான். காற்றோடு சேர்ந்து தாள்கள் படபடத்தாலும், அவற்றின் சக்திக்கு மீறிய சுமையைமீற முடியவில்லை.

பிற்பகல் இரண்டு மணியைப்போல பீயோன் பொடியன் புஞ்சிபண்டா வந்து, கதிரவேலுவை யாரோ தேடி வந்திருப்பதாகக் கூறினான். 'யாராக இருக்கும்?' என்ற யோசனையுடன் எழுந்து நடந்தபொழுது நெஞ்சில் 'ரைப்றைட்டரின்' தட்டல்கள்.

"எட பாஸ்கரனே...! என்ன இருந்தாப்போலை வந்திருக்கிறாய்?" சம்பிரதாயத்துக்காக முகத்தில் ஒரு

சந்தோஷ உணர்வைக் காட்டியாயிற்று. இனி 'இருந்தாப் போலை வந்து நிற்கிறான்.... என்னவோ... ஏதோ!' "நாளைக்கு ஒரு இன்ரவியூ. நேற்றுப் பின்னேரம் போலைதான் தந்தி கிடைச்சுது... அதுதான் வந்தனான்!" பாஸ்கரன் மகிழ்ச்சியோடு சொன்னான். கொழும்பு உத்தியோககாரனாகப் போகின்ற உற்சாகம்.

வந்திருப்பவன் கதிரவேலு மணம் கொண்ட மனைவியின் சகோதரன். கனம்பண்ணி அனுப்பவேண்டிய கடமை. 'கையிலை ஒரு சதத்துக்கும் வழியில்லாமல் நிக்கிறன்... இவனும் வந்து நிக்கிறான்... இப்ப எங்கை கொள்ளைக்குப் போறது?' மனதை அரிக்கின்ற வெட்கம் கலந்த பய உணர்வு.

பாஸ்கரன் எடுப்பான உடையுடன் மிடுக்காக நின்றான். 'பசை'யுள்ள இடத்துப் பிள்ளை. வெறும் கையாக வந்திருக்கமாட்டான் என்ற நம்பிக்கை சற்று தெம்பளித்தது.

"... அக்கா உங்களுக்கு ஏதோ சாப்பாடு தந்துவிட்டவ!" மச்சானுடைய மாறாட்டத்தை பாஸ்கரன் கவனித்துவிட்டானோ என்னவோ, அவரை மகிழ்விக்க எண்ணிப்போலும் அக்கா தந்தனுப்பிய 'ஸ்பெசலை' நினைவூட்டினான். சகதர்மினி நினைவுக்கு வந்ததும் கதிரவேலுவுக்கு ஒரு தலைகால் புரியாத சந்தோஷம். 'பாவம் எவ்வளவு கரிசனையோடை செய்து அனுப்பிவிட்டு இருக்கிறாள்.'

"சரி பாஸ்கரன்... இதிலை இருந்துகொள்... நான் ஷோட் லீவ் போட்டிட்டு வாறன்."

கதிரவேலுவுக்கு இந்த நேரம் புதுயோசனை ஒன்று தோன்றியது. பாஸ்கரன் சிலவுக்குக் காசு கொண்டு

வந்திருப்பான்... அவனிட்டை வேண்டி வாடகைக் காசைக் குடுத்திட்டு... நாளைக்கு எப்பிடியாவது ஆரிட்டையேன் மாறி இவனுக்குக் கொடுக்கலாம்... அடுத்த கணமே, 'சீ அவன் என்னைப் பற்றி என்ன நினைப்பான்?' என்ற கௌரவப் போராட்டம்.

அலுவலக 'ரைப்பிஸ்ட்' மிஸ் மெண்டிஸ் இவனைக் கண்டதும் புன்முறுவல் பூத்தாள். அவளிடம் எப்பொழுதுமே இதற்குக் குறைவிருக்காது - புன்னகை மலர்த்துவதற்குத் தவறாத பண்பாடு. இப்பொழுது அவளது சிரிப்பைக் கண்டதும் எரிச்சல் ஏற்பட்டது. பின்னர்தான் 'இவளிட்டையும் ஒருக்கால் கேட்டுப் பார்த்தாலென்ன?' என்ற எண்ணம் தோன்றியதும் வலிந்து சிரித்துக் கொண்டான்.

"மிஸ்..." அவள் பார்வையைக் கேள்வியாக்கினாள். இவன் பல்லவியைத் தொடங்கினான். இப்பொழுது பல்லவியில் சிறிது மாற்றம் ஊரிலிருந்து சடுதியாக மைத்துனன் வந்து நிற்பதால் உடனடியாக காசு தேவைப் படுகிறதென்றும் இந்த நேரத்தில் பாங்கில் காசு எடுக்க முடியாமலிருக்கின்றதென்றும்... ஐம்பது ரூபா தந்துவினால் பெரிய காரியமென்று சாரப்படக் கூறினான்.

இவனுடைய சங்கடத்தை அனுதாபத்துடன் உணர்ந்துகொண்ட மிஸ் மெண்டிஸ், சினேகிதி சுவர்ணாவிடம் சென்று கதைத்து ஐம்பது ரூபா பெற்று வந்து கொடுத்தாள்.

"மிஸ், என்னால் உங்களுக்குத் தேவையில்லாத சிரமம்!" இவன் அசடு வழிந்தான். அவளது புன்னகை, 'பரவாயில்லை' என்றது.

'அப்பாடா!' பெரியதொரு பாரம் தலையைவிட்டு இறங்கிய சுகம்.

பாஸ்கரனை அழைத்துக்கொண்டு நேரடியாக 'எக்கவுண்ட்' கடைக்குப் போனான் கதிரவேலு. வந்தவனிற்கு ஒரு ரீயாவது வேண்டிக் கொடுக்கவேண்டும்.

தேநீரை அருந்திக் கொண்டிருந்தபொழுது கதிரவேலு சொன்னான் : "பாஸ்கரன்...! பாய்க்கை இஞ்சை கடையிலை வைப்பம்... பிறகு இரவைக்கு அறைக்குக் கொண்டு போகலாம்."

அறைக்கு 'விசிற்றேஸ்' எவரையும் அழைத்து வரக்கூடாதென்பது மிஸிஸ் அருள்நாயகத்தின் கடுமையான கட்டளை.

பாஸ்கரன் புரியாமல் கேட்டான் : "ஏன் எங்கையாவது போக வேண்டியிருக்கோ?"

"இல்லை... றூம் மேற்றிட்டைத்தான் திறப்பு இருக்குது... அவன் நிப்பானோ தெரியாது... இல்லாட்டி அலைய வேண்டி வரும். இஞ்சை வைப்பம். பிறகு வந்து எடுக்கலாம்தானே?"

பயணப்பையுடன் அறைக்குச் செல்வது, தங்குவதற்கு யாரோ வருகிறார்கள் என்பதைச் சுலபமாகப் புரிய வைத்துவிடும். இரவில் வீட்டுக்காரர் உறங்கிய பின்னர் தந்திரமாகக் கொண்டுபோகலாம் என்பது கதிரவேலுவின் திட்டம்.

பாஸ்கரனுக்கு 'சப்'பென்று போய்விட்டது. அவனைப் பொறுத்தவரையில் இரண்டு முக்கியமான விஷயங்களுக்காக இப்பொழுது அறைக்குச் சென்றாக

வேண்டும். ஒன்று மச்சானுக்கு அக்கா ஆசையோடு செய்து தந்துவிட்ட பலகாரத்தைச் சமர்ப்பித்து அவருடைய மகிழ்ச்சியில் பங்குகொண்டு நல்லபெயர் எடுக்கவேண்டும். அடுத்தது, புகையிரதப் பயணத்தால் உடல் வியர்த்துக் களைத்துவிட்டதால் நன்றாக ஒரு குளிப்பு எடுக்கவேண்டும்.

"அதுக்கென்ன...? இது பெரிய பாரமே...? போய் பார்ப்பம்... இல்லாட்டி திருப்பிக்கொண்டு வரலாம்தானே?"

"இல்லை... ஏன் கரைச்சலை! வைச்சிட்டுப் பிறகு போவம்" கதிரவேலு பரிதாபமாக மறுத்தான்.

"இல்ல மச்சான்...? போட்டு வருவம்... உங்கடை அறையையும் பார்க்கலாம்... நான் ஒருக்காய்க் குளிக்கவும் வேணும்!" பாஸ்கரனது விஷயம் புரியாத பிடிவாதம்.

அடுத்த குண்டு... அவன் குளிக்க வேண்டுமாம்.... இனிச் சரணடைய வேண்டியதுதான்.

"இல்லை... பாஸ்கரன்... அங்கை வீட்டுக்காரி சொல்லி இருக்கிறாள்... விசிற்றேஸ் ஒருத்தரையும் கூட்டி வரக்கூடாதெண்டு! இப்ப போனால் விளங்கியிடும்... பிறகு அவள் பத்திரகாளிதான்... அதுதான்... இரவைக்கு அவையள் படுத்தாப்பிறகு போவம் எண்டனான்."

பாஸ்கரனுக்கு கவலை பொங்கியது. மைத்துனரின் நிலை புரியாமல் வற்புறுத்திவிட்டதையுணர்ந்து வேதனைப்பட்டான்.

"அப்ப சரி... இஞ்சை வைப்பம்."

இப்பொழுது கதிரவேலுவுக்குக் கவலையாயிருந்தது. பயணக் களைப்புடன் பாஸ்கரன் நிற்கிறான். அவனுக்கு

முகம் கழுவுவதற்காவது வசதி செய்து கொடுக்க முடியாவிடில் தான் என்ன மனிசன் என நினைத்தான்.

"பாஸ்கரன்... அப்பிடியெண்டால் பாய்க்கை இஞ்சை வைச்சிட்டுப் போவம்... சத்தமில்லாமல் போய் முகத்தைக் கழுவியிட்டு வந்திடலாம்."

"வேண்டாம் போறது பிரச்சினை யெண்டால்... பிறகு என்னத்துக்கு?"

"பரவாயில்லை... பாய்க்கை வைச்சிட்டுத்தானே போறம்... அவையளுக்கு விளங்காது."

வீட்டினுள் இருவரும் நுழைந்தபொழுது ஒரு புதிய முகமும் வருவதைக் கண்ட பியூட்டி (நாய்) 'இங்கிலீசில்' குரைத்துக் கொண்டு ஓடிவந்தது.

வீட்டின் கோடிப்பக்கமாகச் சென்று அறைக்கதவைத் திறந்தான் கதிரவேலு. உள்ளே சென்று கட்டிலைக்காட்டி பாஸ்கரனை அமர வைத்தான்.

"பாஸ்கரன்...! இருந்துகொள்... முகம் கழுவத்தண்ணி எடுத்துக்கொண்டு வாறன்."

தனக்காக அத்தான் கஷ்டப்படுவது இவனுக்கு சம்மதமில்லை. "ஏன்!... பாத்றூமுக்குப் போய்க் கழுவுவம்."

"அது கொமன் பாத்றூம்... வீட்டுக்குள்ளாலைதான் போகவேணும்... அவையள் கண்டால் வில்லங்கம்... தண்ணியை இஞ்சை எடுத்துக்கொண்டு வாறன்."

இவனது தலை ஏதோ நியதிக்குட்பட்டது போல அசைந்து சம்மதித்தது.

குடிநீருக்காகப் பாவிக்கின்ற கூசாவை எடுத்துச்சென்று தண்ணீர் நிரப்பிக்கொண்டு வந்தான் கதிரவேலு. “தண்ணி எடுத்துத்தர வேறை ஒண்டும் இல்லை... நான் ஊத்துறன்... கழுவு” என்றவாறே அறைக்கு வெளியே கூட்டிச் சென்றான். உடையை மாற்றுவதற்குக் கூட வசதியில்லாமற் போனது பாஸ்கரனுக்குப் பெரிய மனக்குறை சேட்டைக் கழற்றி வைத்துவிட்டு தண்ணீரை ஏந்தி முகத்தைக் கழுவினான்.

“நாளைக்கு விடியப்புறத்தோடை ஒருத்தரும் எழும்பமுதல் எழும்பினால் குளிக்கலாம்.” தனது விருந்தோம்பலில் உள்ள குறைபாட்டை உணர்ந்து கதிரவேலு சமாளிப்பாகக் கூறினான்.

பாஸ்கரன் சிரிப்பை உதிர்த்து மைத்துனரைச் சமாதானப்படுத்தினான். தனது தலைவிதியையா அல்லது அவரது தலைவிதியையா எண்ணி நோவது என்பது புரியவில்லை.

“கொழும்புச் சீவியமெண்டால் இப்பிடித்தான்... எதிலையும் ஒரு சகிப்புத்தன்மை இருக்கவேணும்” என உபதேசித்தவாறே சீப்பையும் பவுடரையும் நீட்டினான் கதிரவேலு.

அறையைவிட்டு வெளியேறி காலி வீதியில் வந்து ஏறும்வரை அடுத்து என்ன செய்யலாம் என்று ஒரு திட்டமும் இல்லை.

“பாஸ்கரன்... நீ எங்கையேன் போக வேண்டியிருக்கோ?”

“இல்லை.”

சற்றுநேர யோசனை. பின்னர், "அப்ப இப்பிடியே கோல்பேஸ்வரையும் நடப்பம்... பின்னேரம் தானே பொழுது போக்காயிருக்கும்." வெள்ளவத்தையிலிருந்து காலிமுகம் வரை நடந்து செல்வதென்பது கதிரவேலுவுக்கு இலகுவான காரியமல்ல. இருந்தும் நிலைமையைச் சமாளிக்க இதைவிட்டால் வேறு வழியும் இல்லை.

இருவருமாக நடக்கத் தொடங்கினார்கள். கடைகளில் கண்ணாடிகளினுள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள விற்பனைப் பொருட்களையும், கடைகளையும் ஆவலோடு பார்த்துக்கொண்டே வந்தான். பாஸ்கரன். சில இடங்களில் நின்றும் பார்த்தான். ஓர் இடத்தில் அவன் கேட்டான் :

"மச்சான். நல்ல வடிவான சேட்டு, என்ன?"

"ஓ...! நல்லாய்த்தான் இருக்கு!"

"என்ன விலையாயிருக்கும்?"

"கொன்றோல் பிறைஸ்தான்... நாப்பத்தைஞ்சு ரூபா!"

"என்ரை... சைசிலை இருக்குதோ... தெரியாது?"

"வேணுமெண்டால் கேட்டுப் பாப்பம்!"

கடையினுள் நுழைந்து விசாரித்தபொழுது அவர்கள் கேட்ட அளவில் பல அழகான நிறங்களில் சேட்டுக்கள் மேஜைக்கு வந்தன.

பாஸ்கரனுக்குக் கொள்ளை ஆசை.

"யாழ்ப்பாணத்திலையெண்டால்... இப்பிடி எடுக்கேலாது."

"விருப்பமெண்டால்... எடன்!"

பாஸ்கரன் ஒரு சேட்டை எடுத்துக்கொண்டான்.

"அவசரத்திலை வந்ததாலை மேலதிகமாய் காசு கொண்டு வரயில்லை... உங்களிட்டை இருந்தால் குடுங்கோ... போனவுடனை அனுப்பி விடுறன்."

கதிரவேலுவின் தலை சுழற்சியடைவது போல... "ஓ...! அதுக்கென்ன?" கை மானத்துக்குப் பயந்து 'பொக்கட்'டினுள் நுழைந்து ஐம்பது ரூபா நோட்டை இழுத்தது.

கடைக்காரன் கொடுத்த மிகுதி ஐந்து ரூபாயை கதிரவேலு வேண்டிய பொழுது, 'இரவைக்கு நேரம் சென்ற பிறகு அறைக்குப் போறதெண்டால் செக்கண்ட் ஷோ படத்துக்குப் போக வேணுமே' என்ற கனதியான நினைவு நெஞ்சில் ஏறிக்கொண்டது.

*(சிரித்திரன், 1978)*



# ஏகபத்தினி விரதம்



வானத்தில் நட்சத்திரங்கள் பூத்துவிட்டனவா? இரவு வந்துவிட்டது. ஓட்டை விழுந்த மேகம், பொய்யான மினுக்கங்கள்.

ஜன்னற் கம்பிகளின் வெளியே நிலா சிரிக்கின்றது. மயக்குகின்ற சிரிப்பு. விடிவதற்கு முன்னர் மறைந்து போய்விடும். ஜன்னற் கம்பிகள்... உள்ளேயும் ஒரு சிறைத் தன்மையை உணர்த்துகின்றன.

அவளும் இந்த இதயத்தினுள் சிறைப்பட்டிருந்தாள். அவளுடைய நினைவு வந்த பின்னர் இந்த வானத்தையும் நிலாவையும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அந்த நிலவுக்கு முன்னால் அவள் மிதந்து வருவாள். அப்படியே ஜன்னற் கம்பிகளை ஊடறுத்து நுழைந்துகொண்டு இந்தக் கண்களினுள்ளும் வந்து விடுவாள் - கண்கள்தான் இதயத்தின் கதவுகளோ? இதயத்தில் அவள் நினைவுகள் ஏறுகின்றபொழுது ஓர் இதமான சுமை. அது சுமையா, அல்லது சுகமா?

முகத்தைப் புதைத்துக்கொண்டு குப்புறப் படுப்பதற்காக ஒரு பக்கமாகச் சரிந்தபொழுது.. ('கிறீச்' - கட்டில் தனது வேதனையை வெளிப்படுத்துகிறது. இப்படி எத்தனைபேரைச் சுமந்திருக்கும்?) அழுக்குத் தலையணை முத்தம் பெறுகின்ற அதிர்ஷ்டத்தைத் தட்டிக் கொள்கிறது. அநியாயமாக அவளுடைய சொந்தம் இந்த அழுக்குத் தலையணைக்குக் கிட்டிவிட்டது.

அட, இந்த மலிவான ஹோட்டலில் மெல்லிய காற்றுகூட வந்து உடலைத் தழுவிக் கொள்கிறதே! அதிசயமான சங்கதி!

வாழ்க்கையில் அதிசயங்களுக்குக் குறைவில்லை. ஜயதிலக, நாணயக்கார, சிவபாதம், நசூர்டின் எல்லோரும் மாலையில் அறையைவிட்டு வெளியேறும்போது சிரித்துக்கொண்டே போனார்கள் - மேய்ச்சலுக்கு! இலங்கையிலிருந்து கிளம்பும்பொழுதே அவர்களுடைய திட்டம் இது. இரண்டு வருடங்களுக்கு முன்னர் முதல்முறையாக பாகிஸ்தானுக்குச் சென்றபொழுதும் இப்படி இரண்டோ மூன்று தினங்கள் புதுடில்லியில் தங்குமடம் போட்டுத்தான் வந்தார்கள். (ஹோட்டல் தீனில் அவர்களுக்கு அவ்வளவு பிரியம்!) இரவு வெகுநேரம் கழித்து நல்ல 'கலை' யில் சிரித்துக் கும்மாளமடித்துக் கொண்டே வருவார்கள்!

இவர்கள் மட்டுமல்ல! இலங்கையிலும்கூடத்தான். கொழும்பிலே அறை நண்பர்களாக இருந்தவர்களுடைய திருகுதாளங்கள் கொஞ்சநஞ்சமா? வீட்டுச் சொந்தக்காரனுடைய கண்களில் மண்ணைத் தூவி இரவோடிரவாக எத்தனை கள்ளக் கடத்தல்கள் செய்திருக்கிறார்கள். முற்றும் துறந்த ஒரு சந்நியாசியைப் போல (முனிவர்கள் அப்படித்தான் பற்றற்று இருப்பார்களாம்!) பக்கத்தில் நடக்கின்ற கூத்துக்களைக் கண்டுகொள்ளாமல் நிஷ்டையில் இருப்பதைக் கண்டு அவர்களும் அதிசயித்திருக்கிறார்கள்.

சுமாரான இளைஞர்கள் எல்லோரும் அப்படித்தான் இருப்பார்களோ? ஆண்களெல்லோரும் ஏன் இப்படி

ஏதோ நியதிக்குட்பட்டவர்கள் போல கேடுகெட்டுப் போகிறார்கள்? பண்பான வாழ்க்கை நெறிகளை வெறுக்கிறார்கள்? சமூகத்திலுள்ள சட்டங்களுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் அவர்கள் விதிவிலக்கானவர்களா? இப்படியெல்லாம் நடந்துகொள்ள அவர்களால் எப்படி முடிகிறது? எப்படிச் சிரிக்கிறார்கள்?

அவர்களுக்கென ஒவ்வொருத்தி - ஒரு காதலி இருக்கமாட்டாளா? எந்தப் பெண்ணுமே அவர்கள் வாழ்க்கையில் குறுக்கிட்டிருக்க மாட்டாளோ? அல்லது பசித்த நேரத்தில் போடுகின்ற சாப்பாட்டைப் போல அந்த உறவுகளையும் சாதாரண விஷயங்களாகக் கருதுகின்ற மரக்கட்டைகளா இவர்கள்? இந்த அழுக்கான அறையினுள் நுழைகின்ற இதமான காற்றைப் போல ஏன் ஒருத்தி அவர்கள் மனங்களினுள் புகுந்துகொள்ள மறுக்கிறாள்?

இந்த இதயத்தினுள் புகுந்துகொண்ட அவளது நினைவு வந்தமாத்திரத்தில் மின்னலைப்போல ஓர் இன்பக் குமுறல் தோன்றும் - மல்லிகையின் நறுமணத்தை அள்ளி வருகின்ற தென்றல் தரும் இதமான சுகத்தைப்போல.

இரண்டு வருடங்களுக்கு முந்திய கதை இது. பாக்கிஸ்தானுக்குச் செல்வதற்காக அவளைப் பிரிகின்ற நேரம் - மனதை வாட்டுகின்ற பெரிய கவலை - அவளது நினைவுகள். அழகான சிரிப்பு. ஆதரவான கண்கள். அவற்றை ஒரு நாளைக்காவது தரிசிக்காமல் இருக்க முடியாதே! இனி நான்கு வருடங்கள் - அந்த சுகங்களையெல்லாம் மறந்து சந்நியாசியாகி விடவேண்டும் எனும் நினைவின் கசப்பு. நான்கு வருடங்கள் - படிப்பு முடிந்து வருகின்றபொழுது அவள் காத்திருப்பாளோ

என்னவோ... நிறைகுடம் தளும்பத் தொடங்கியது. உள்ளத்தின் கலக்கத்தை உணர்த்துகின்ற கண்களின் கலக்கம்.

"... படிப்பு முடிஞ்சு திரும்பிவர நாலு வருசங்கள் செல்லும்... அதுவரையும் எப்படித்தான் இருக்கப் போகிறேன்...? தனிமை எவ்வளவு மோசமாய் வாட்டும் எண்டு நினைக்கவே பயமாய் இருக்கு...! ஏன்தான் இந்த ஸ்கொலர்ஷிப் கிடைச்சுதோ? உன்னை விட்டுட்டு எப்படி இருக்கப் போறேன்? ஒரு நாளைக்குப் பாக்காட்டியும் எனக்குச் சாப்பாடு இறங்காது... இந்த விசித்திரத்திலை அங்கை சாப்பாடோ, நித்திரையோ இல்லாமத்தான் இருப்பன் போலையிருக்கு... நீயெண்டால் அம்மா, ஐயா. சகோதரங்களோடை இருப்பாய்... தனிமை அவ்வளவாய் தோற்றாது. சொந்த பந்தங்கள் கோயில் திருவிழாக்கள்... என்னை நினைப்பியோ தெரியாது... சிலவேளை வீட்டுக்காரர் கலியாணமும் பேசுவினம். நீயும் இவன் எங்கை இனிவந்து என்னைக் கட்டப்போறான். எண்ட நினைவோடை ஓமெண்டிடுவாய்... நான் வந்து வானத்தைப் பார்த்துக்கொண்டு நிக்கவேண்டியதுதான்" - முகத்திற் தழும்பி வடிகின்ற கண்ணீர்த் துளிகள்.

அவள் இரக்கத்தோடு பார்த்தாள். முகத்திலே கருமை - சோகத்தின் வாட்டம்.

"நீங்கள் ஆம்பிளை... எல்லாத்தையும் வெளிப்படையாய் சொல்லிப் போட்டியள். பொம்பிளையாய்ப் பிறந்த நாங்கள் மனதுக்குள்ளேயே எல்லாத்தையும் அடக்கி வைச்சு கவலைப்பட வேண்டியதுதான். என்ரை மனவருத்தத்தை எப்பிடிச் சொல்லுறதெண்டே தெரியயில்லை. உங்களை விட்டிட்டு

நான் இருப்பனா? ஒண்டை மாத்திரம் நிச்சயமாய்ச் சொல்லுறன் ஒரு பெண்ணைக் காதலிச்சுப் போட்டுப் பிறகு வேறையொருத்தியை கட்டுறது ஆம்பிளையளுக்குச் சுலபமாய் இருக்கலாம். ஆனால் பொம்பிளையளுக்கு அது கஷ்டம்."

அதற்குமேல் அவளால் கதைக்க முடியவில்லை. அழுகை வந்திருக்க வேண்டும். அவளாகவே வலிந்து இந்த மார்பில் சாய்ந்து கொண்டாள். நெடுநேர மௌனம். கைகள் அணைத்துக்கொண்டன. அவளுடைய சூடான கண்ணீர் நெஞ்சிலே கசிந்தது. ஒரு பெருமூச்சு வெளிப்பட்டது.

நீண்ட பிரிவின் ஆரம்பம்.

இரண்டு வருடங்கள் நீட்சியடைந்தன. அதற்கிடையில் பாகிஸ்தான் அரசியல் வானில் கருமேகங்கள் சூழத் தொடங்கின. பெருமழையைப் போல கட்சிக் குழப்பங்கள், மக்கள் போராட்டங்கள், வெளி நாட்டு மாணவர்கள் அவர்களது சொந்த நாட்டுக்கு அனுப்பப்பட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டமை ஒருவித மகிழ்ச்சியை அளித்தது. இலங்கை - சொந்தபந்தங்கள் - அவள்!

தலையணையின் அணைப்பைக் கைவிட்டு நிமிர்ந்த பொழுது மேகத்தில் ஒட்டிக்கொண்டிருந்த நட்சத்திர மொன்று தனது உறவைக் கழட்டிக்கொண்டு விழுவது போல - ஒளிப்பொட்டொன்றின் வீழ்ச்சி - அது மறைந்துவிட்டது.

அவள் இன்னும் மறையாமல் இந்த மனத்தில் ஓர் ஒளிப்பொட்டாக இருக்கின்றாள். இலங்கைக்குச்

சென்றிருக்கவே தேவையில்லை - அப்படியான ஒரு மனமுறிவு, அந்தச் சோகமான கதை.

வீட்டுக்குச் சென்றபொழுது அவள் 'ரியூற்டரி'க்குச் சென்றிருக்கிறாள் என அறிய முடிந்தது. ஆவலின் உந்துதல் அவ்விடத்தைத் தேடிப்போக வைத்தது. யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் பஸ்ஸை விட்டு இறங்குமுன்னரே அவள் இன்னொரு இளைஞனுடன் சோடி சேர்ந்து வந்த காட்சி கண்களைக் குற்றியது. மனதிலே ஒரு 'திக்'. ஒருவேளை அவளுடைய நண்பனாகவும் இருக்கலாம். அல்லது அடுத்தும் சில 'திக்' 'திக்.'

'அவள் காணக்கூடியதாக முன்னே சென்றுவிட்டால் எல்லாம் புரிந்து விடுகிறது' என்ற மனதின் சமாதானம். ஆனால் - அவள் அந்த நேரத்தில் இப்படியொரு சந்திப்பை எதிர்பார்க்கவில்லை.

முதலில் அதிர்ச்சி - பின்னர் அலட்சியம். அலட்சியமென்றால் கண்களில் கனல் பறக்கின்ற கோபம். தலையைச் 'சட்'டென மறுபுறமாக வெட்டுகின்ற புறக்கணிப்பு. நெஞ்சிலிருந்து ஒரு நட்சத்திரத்தின் வீழ்ச்சி. அதையும் பொருட்படுத்தாமல் அவள் வீட்டுக்குச் சென்றபொழுது அங்கேயும் அந்தப்புலி தன் பசுத்தோலை மாற்ற விரும்பவில்லை. தாயாரின் முன்னிலையில் காரசாரமான திட்டல்கள்.

காதலென்பது பாலுணர்வுகளின் பண்பான பிரதிபலிப்பு மாத்திரம்தானென அவள் கருதுகிறாளா? அதுதான் காதலென்றால் அதைச் சுலபமாக ஜெயதிலகாவும், சிவபாதமும் மூலை முடுக்கெல்லாம் காசை வீசி எறிந்துவிட்டுப் பெற்றுக்கொண்டு போகிறார்களே!

அவர்கள் புத்திசாலிகளா? ஆண்களில் எத்தனையோபேர் நச்சுப்பாம்புகளாக இருப்பது உண்மைதான். ஆனால் இப்படியான பெண்களை எந்தவகையில் சேர்ப்பது?

இதமாக வந்து உடலை அணைத்துக் கொள்கின்ற தென்றலைப்போல, மலர்கின்ற பருவத்திலுள்ள ஒரு மொட்டின் புனிதம்போல இதயத்தோடு இழையோடியுள்ள அந்தப் பாசத்தைச் சிதைக்க அவளுக்கு எப்படி மனம் வந்தது?

அதிர்ச்சிக்கு மருந்துபோல ஒரு தந்தி - பாகிஸ்தானில் குழப்ப நிலைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றியதும் பாடநெறியைத் தொடர்வதற்காக அழைப்பு வந்தது.

"சம்சாரம் தேடிக்கிறதிலை ரொம்ப அவதானம் வேணுங்கிறன். உங்களுக்கு இஷ்டமான பொண்ணைவிட உங்களை இஷ்டப்படுற பொண்ணைத்தான் கட்டிக்கணும். அப்படின்னாத்தான் சீவியம் சந்தோஷமாயிருக்கும்."

பக்கத்து அறையில் யாருக்கோ ஞானம் பிறந்திருக்கிறது. இவர்கள் எந்த ஊர்க்காரர்கள்? இவர்களையும் யாரோ ஒருத்தி ஏமாற்றி இருப்பாளோ? ஊர் ஏதாக இருந்தாலும் மனிதர்கள் எல்லோருடைய பிரச்சினைகளும் ஒரே மாதிரியானதுதானா?

எது எப்படி இருந்தாலும் ஒவ்வொரு இயக்கங்களையும் நிர்ணயிக்கின்ற அவளது உயிர்த்துடிப்பான நினைவுகளை அகற்ற முடியவேயில்லை. இது பெரிய குறை. இந்த மனது ஏதோ பாவம் செய்திருக்க வேண்டும். நண்பர்களைப் போல தறிகெட்டுத் திரியாமல் அவள் ஒருத்திக்காகவே இந்த மனதைப் பொத்திப் பொத்தி

வைத்திருந்ததற்கு இழுதுதானா பரிசு? படுக்கையை விட்டு எழுந்து நின்று இந்த அறையே அதிரும்படி 'ஓ'வெனக் கதறவேண்டும். அப்பொழுது இந்த மனம் வெடிக்கும். அவளுடைய நினைவுகளெல்லாம் அகன்றுவிட்டால் தலை சுகமடையும்.

ஒன்பது மணியைப் போல சிவபாதம் வந்தான்.

"என்னடாப்பா அதுக்கிடையிலை திரும்பியிட்டாய்?"

"உனக்காகத்தான்!"

"எனக்காகவோ ஏன்?"

"சாப்பாடு வேண்டித்தர!"

"எனக்கென்ன சுகமில்லை எண்டு நினைச்சியே...? உதவிக்கு வந்திருக்கிறாய்?"

"அப்படித்தான் தெரியுது... விசரா...! அவளொருத்தியை நினைச்சு ஏன்தான் இப்பிடி அழிஞ்சு போறியோ தெரியாது...? எவ்வளவு கெட்டிக்காரனாய் இருந்தனீ? உன்ரை படிப்பை வீணாக்கப்போறாய்... இதுக்கெல்லாம் வடிகால் அதுதான்..." வருத்தத்துக்குப் பரிகாரம் சொல்கின்ற வைத்தியரின் கரிசனை அவனிடம்.

இதற்குப் பரிகாரம் அதுவல்ல! நூறுவீதம் நிச்சயமாகத் தெரியும். ஆனால் அவளையே நினைத்து வாடுகின்ற இந்த மனதுக்குப் பெரிய தண்டனை கொடுக்கவேண்டும்.

சிவபாதத்தின் கையில் மாலைப் பத்திரிகை ஒன்று இருந்தது. (அன்றைய இரவு நடனங்கள் எங்கெங்கே நடைபெறுகின்றன என்ற விவரங்கள் இதில்

அடங்கியிருக்கும்.) இந்த விஷயங்களில் நல்ல 'சர்வீசு' உள்ள அவன் தகுதியான இடத்தைத் தெரிந்தெடுத்தான். 'சந்துகள் பொந்துகள்' போன்ற பல இடங்களிலெல்லாம் திரும்பி அலுப்புத்தட்ட ஆரம்பிக்கும்பொழுது ஒரு வீட்டின் முன்னால் நின்றான். தட்டப்பட்டதும் கதவு திறந்து கொண்டது. வெளியே அலங்கோல தெருவுடன் இருந்த வீடு! உள்ளே கம்பளமும் அலங்காரமும் கண்களைக் கவரும்படி இருந்தது. தனக்குத் தெரிந்த இந்தியில் "சாகிப், டான்ஸ் தெக்கினேஹ?" எனக் கேட்டான். வேறு 'கஸ்டமர்ஸூம்' இருந்தனர். நடனம் ஆரம்பித்தது. இடையில் ஒரு பணியாள் வந்தாள். அவளோடு நண்பன் கதைத்தான். பணம் கைமாறியது.

ஒரு தனி அறைக்குள் மனைவியைப் போல அந்தப் பெண் வந்தாள். கதவைச் சாத்தினாள். மெதுவாகச் சிரித்தாள். சிரிக்கவேண்டும் போலிருந்தது. ஆனால் சிரிப்பு தொண்டைக்குள் அடைத்துக் கொண்டது. வியர்வையில் சேர்ட் நனைந்தது.

அவள் விசித்திரமான பார்வையுடன் "அப்னே பஸ்ட் டைம் ஜீ?" என்றாள். வெட்கத்தால் தலை கவிழ்ந்தது. இந்த ஆண்மை எங்கே போயிற்று? தடுமாற்றம் சில உண்மைகளை ஒப்புவிக்க நிர்ப்பந்தித்தது.

அமைதியாக யாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தவள் பின்னர், "Oh, I Suppose this is going to be your first night?" எனப் பெரிதாகச் சிரித்தாள். சந்தோஷமா? அல்லது ஏளனமா?

உண்மையும் அதுதான்! பெரிய பொக்கிஷமாகக் கட்டிக்காத்து வந்த ஏகபத்தினி விரதம் முதல் முறையாக

புதுடில்லியில் வைத்துக் கலையப் போகிறது. மனதிலே ஒருவித படபடப்பு. உடலை அண்மித்துக்கொண்டு சென்றபொழுது ''தம்பி!'' என்றாள்.

ஆச்சரியத்துடன் திரும்பியபொழுது தொடர்ந்து ஆங்கிலத்திலே கதைத்தாள். ('தம்பி' என்ற ஒரு சொல்தான் தமிழில் தெரிந்திருக்கிறது.) தலைமுடியை ஆதரவுடன் கோதிவிட்டாள். முகத்தில் பனித்திருந்த வியர்வையைத் துடைத்துவிட்டாள்.

''இங்கு பசியோடு வருபவர்களுக்குச் சாப்பாடு இருக்கிறது. உங்களுக்குப் பசியில்லை. வெறி! யார் மேலேயோ வெறுப்பை வைத்துக்கொண்டு உங்களையே அழித்துக்கொள்ளப் பார்க்கிறீர்கள். உண்மையைப் பார்த்தால் அவள் உங்களைக் காதலிக்கவில்லை. நீங்கள்தான் காதலித்திருக்கிறீர்கள். அவள் இது போன்ற ஹோட்டல்களுக்குக் கூட லாயக்கில்லாதவள். இது உங்கள் வாழ்வில் ஏற்பட்ட ஒரு விபத்து. விபத்திலே காயம் ஏற்பட்டால் தங்களையே அழித்துக்கொள்வார்களா? காலப்போக்கில் இந்த வடு ஆறிவிடும். உங்களுக்காக நிச்சயம் இந்த உலகத்தில் ஒருத்தி இருக்கிறாள். துணிவு வேண்டும். கோழையாக இருக்கக் கூடாது.

ஸ்ரீலங்காவிலிருந்து எவ்வளவு நம்பிக்கையோடு உங்களை அனுப்பியிருக்கிறார்கள். சாதாரண ஒருத்திக்காக உங்கள் நாட்டுக்கு நீங்கள் அளிக்க வேண்டிய பங்கை துச்சமாக நினைத்து விட்டீர்களா? இந்த ஸ்கொலசிப் எல்லாம் பயனற்றுப் போய்விடுமே? இதற்காகத்தானா ஸ்ரீலங்காவிலுள்ள அவ்வளவு மக்களினுள்ளும் உங்களைத் தெரிவு செய்து அனுப்பினார்கள்?''

அவள் சொல்லிக்கொண்டே போனாள். ஒரு தாயின் பரிவு. இப்பொழுது மனதிலுள்ள வேதனைகளெல்லாம் கரைந்து காலியாகி காற்றிலே மிதப்பது போன்ற சுகம்.

ஒரு பெண்ணின் செய்கையினால் பெண்ணினத்தின் மேலுண்டான வெறுப்பும் அதனால் ஏற்பட்ட விரக்தியும் இன்னொரு பெண்ணின் செய்கையில் துடைக்கப்பட்டு விட்ட சுகம். உலகத்தில் மனிதர்கள் எல்லாம் கெட்டுப்போய் விட்டார்கள் என்று யார் சொன்னது?

உறவுகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒருத்தி! நாடு, இனம், மொழி, சாதி பேதங்கள் எல்லாம் எங்கே போய்விட்டன? அவளது இரக்கம் நிறைந்த பார்வை, பரிவான தேற்றுதல்.

"ரேக் இற் ஈஸி."

அவளிடமிருந்து நிறைவான மனதுடன் விடை பெற்று வெளியேறியபொழுது புதியதொரு வெறி! அது எடுத்துக்கொண்ட பணியை வெற்றிகரமாக முடித்துக் கொண்டு நாடு திரும்ப வேண்டும் என்பது.

*(வீரகேசரி, 1978)*

# ஒரு தேவதையின் குரல்



தாக்குதலுக்குப் பயந்து ஓடுகின்ற அப்பாவியைப் போல புகையிரதம் ஓடிக்கொண்டிருந்தது. அருணாசலம் உயிரைக் கையிலே பிடித்துக்கொண்டு ஒரு மூலையில் அமர்ந்திருந்தார்.

இறங்கவேண்டிய இடம் அண்மித்துக்கொண்டுவர அவரது மனதில் பதட்ட உணர்வும் அதிகரித்தது. இந்த செப்டம்பர் மாத நடுப்பகுதியிலும், அநுராதபுரத்தில் இறங்க வேண்டியேற்பட்டது, தனது கஷ்டகாலமே என எண்ணிக்கொண்டார்.

எதிர்பாராமல் நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரங்களினால் தத்தமது சொந்த இடங்களுக்கு 'ஏற்றுமதி' செய்யப்பட்ட விசித்திர அனுபவம் பெற்றவர்களில் அவரும் ஒருவர். (அவர் வேலைசெய்கின்ற சிங்களக் கிராமத்திலிருந்து கொழும்பிற்கு அரசாங்க லொறி மூலம் எடுத்துச் செல்லப்பட்டு பின்னர் அங்கிருந்து கப்பலில் ஏற்றி யாழ்ப்பாணம் அனுப்பப்பட்டவர்.) அந்த நேரத்தில் கடவுள்மாதிரி வந்து காப்பாற்றி அரச பாதுகாப்புடன் அனுப்பி வைத்தவன் அவருடைய சிங்கள நண்பன் ஒருவன்தான். மனிதர்களில் இயமன்களும் இருக்கிறார்கள்; கடவுள்களும் இருக்கிறார்கள்.

நாடு சகஜநிலைமைக்குத் திரும்பிவிட்டதால், இடம் பெயர்ந்த அரசாங்க ஊழியர்கள் தங்களது வழக்கமான அலுவல்களுக்குத் திரும்பிவிடுமாறு வானொலி அறிவிப்புச் செய்தது.

தப்பிப் பிழைத்து வீட்டிற்குவந்த நேரத்தில் 'சாப்பிடாமல் கிடந்து செத்தாலும் பரவாயில்லை... இனி அங்கை போகவேண்டாம்' என அன்புக்கட்டளையிட்ட அவரது துணைவிகூட, "இப்பிடியே நெடுகலும் இருந்தால் என்ன செய்யிறது.... சம்பளத்தையெண்டாலும் எடுத்தால் ஒரு மாதிரிச் சமாளிக்கலாம்'' என நச்சரிக்கத் தொடங்கிவிட்டாள். உண்மையிலேயே சமாளிக்க முடியாத நிலைமைதான்.

ஆரம்பத்தில் ஐந்தைப்பத்தைக் கொடுத்துதவிய அக்கம்பக்கத்தவர்களும் கையை விரிக்கத்தொடங்கி விட்டார்கள். நிலைமை சுமுகமாகும்வரை அது எவ்வளவு காலம் சென்றாலும் வேலைக்குத் திரும்புவதில்லை என அரச ஊழியர் ஆங்காங்கே கூடி முடிவெடுக்கவும், அந்தரமாபத்திற்கு உதவியவர்களும் கைவிடத் தொடங்கி விட்டார்கள்.

"என்ன...? அப்ப இனி வேலைக்குப் போகமாட்டீங்களோ...? இந்தப் பக்கத்துக்கும் மாற்றம் எடுக்கேலாதாக்கும்...? அவங்களும் என்னெண்டுதான் எல்லாரையும் மாத்திறது?'' என சிலர் அனுதாபம் தெரிவித்தார்கள்.

"வேலையைவிட்டிட்டு ஏதாவது கடையைத் தன்னியைப் போட்டுக்கொண்டு ஊரோடை இருங்கோவன்'' - இன்னும் சிலர் இப்படி இலவச ஆலோசனை வழங்கினார்கள்.

நிரந்தரமான ஒரு சேமிப்போ, வேறு வருவாய்களோ இன்றி மாதாந்த சம்பளத்தை எடுத்து (கௌரவமான) வாழ்க்கை நடத்துகிற நடுத்தர வர்க்கத்தினரில் ஒருவர்தான் அருணாசலமும்.

பலசரக்குக் கடைக்காரனுடைய கணக்கை இந்த மாதம் 'செற்றில்ட்' பண்ணமுடியவில்லை. அவனும் நிலைமை புரியாமல், "ஐயா, அந்தக் கணக்கு...?" எனக் கேட்டவாறு ஒரு மாதிரிச் சிரிக்கத் தொடங்கிவிட்டான். அது சுத்தமான சிரிப்பல்ல; அவனது கடையிலுள்ள பொருட்களைப் போலவே கலப்படம் நிறைந்தது. அந்தச் சிரிப்பை அவரால் தாங்கமுடியாது.

தொட்டம் தொட்டமாக வேண்டிய சில்லறைக் கடன்களும் பல. அறிஞ்சவன் தெரிஞ்சவனைக் கண்டு வெட்கத்தையும் விட்டுப் பல்லைக்காட்டிப் பார்த்தால் அந்த வித்தைகளும் பலனளிக்கவில்லை.

பெண்சாதியின் கழுத்தில் தப்பியொட்டிக்கிடந்த தாலிக்கொடிதான் அவரது கண்களைக் குத்தியது, மெதுவாகக் கதைவிட்டுப் பார்த்தார்... கண்மணியின் கண்கள் கலங்கிவிட்டன.

"முந்தி வைச்ச நகையளெல்லாம் வருசக் கணக்காய் மீளாமல் இருக்குது... இதையும் கொண்டுபோய் வைக்கப் போறியளோ?"

அந்தக் கண்ணீர் அவரது இதயத்தைத் தொட்டது. கவலை மேலிட்டது. 'ஒரு பாவமும் அறியாத குழந்தை குட்டிகள் நாளைக்குச் சாப்பாடு என்று கையை நீட்டும் பொழுது என்ன செய்வது?'

'எப்படியாவது வேலைக்குத் திரும்பியிடவேணும்' என முடிவெடுத்துக் கொண்டார்.

அருணாசலம் வேலை செய்கிற சிங்களக் கிராமத்திற்குப் போவதானால் அநுராதபுரத்தில் இறங்கி

கண்டி பஸ் எடுக்க வேண்டும். இந்த இடங்களெல்லாம் கலவரத்தின்போது கடுந்தாக்குதலுக்குள்ளான இடங்கள். இவரோடு வேலை செய்த செல்லத்தம்பி அந்த அதிர்ச்சியில் வேலையையே 'றிசைன்' பண்ணிவிட்டார்!

மீண்டும் அங்கு வேலைக்குப் போவதற்கு, முதல் நாட்களிற் கண்டு சம்மதம் செய்தவர்களில் கத்தசாமி மாத்திரம்தான் இப்பொழுது கூட வந்திருக்கிறார். வருவதாக ஒப்புக்கொண்ட மகேசு கடைசி நேரத்தில் காலை வாரிவிட்ட சங்கதி புகையிரதத்தில் ஏறிய பின்னர் தான் தெரியவந்தது.

"அவனும் வந்திருந்தால்.... சேர்த்து அடிவேண்டுவான்.... எங்களுக்குக் கொஞ்சமாவது குறையும்!" என புகையிரத்தினுள் 'ஜோக்' அடித்த கந்தசாமியும் அலங்க மலங்க விழித்தவாறு இருந்தார். இறங்குவதற்கு முன்னர் கடிகாரத்தைக் கழட்டி காற்சட்டைப் பைக்குள் வைத்தார்.

"அடிக்கிறவங்கள் காற்சட்டையையும் கழட்டிக் கொண்டுதான் விடுவாங்கள்!" என இரகசியமாகப் பகிடிவிட்டார் அருணாசலம்.

அந்த நகைச்சுவையை அனுபவிக்குமுன்னரே புகையிரதம் நின்றது. இதயங்களே நின்றுவிட்டது போல.

பஸ்நிலையம் வரை உயிரைக் கையிலே பிடித்துக் கொண்டுதான் நடக்க வேண்டும். மௌன விரதம் மேற்கொண்டவர்களைப் போல நடக்கத் தொடங்கினார்கள்.

கந்தசாமி சற்று விலகியே நடந்துவந்தார். அருணாசலத்தாரைப் பார்த்தால் 'அசல் தமிழன்' என

முகத்தில் அச்சடிக்கப்பட்டிருக்கிறதாம்! தன்னைப் பார்த்து யாரும் மட்டுக்கட்ட முடியாது என அந்தரங்கமாக நினைத்து மகிழ்ந்துகொண்டே நடந்தார்.

'வன்செயல்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுவிட்டார்கள்' எனப் பத்திரிகைகளில் வந்த செய்திகளை நினைத்து சற்று நிம்மதியுடன் நடந்து கொண்டிருந்தார் அருணாசலம்.

அந்த நிம்மதி நீடிக்கவில்லை. "அடோ!" என அட்டகாசமாக எங்கிருந்தோ ஒரு குரல் வந்தது. நெஞ்சில் இடிவிழ, அருணாசலத்தாரின் இரத்தம் உறைந்து விட்டது போலிருந்தது. திரும்பிப் பார்த்தார். வீதியோரத்தில் சில காடையர்கள் நின்றுகொண்டு தங்களுக்குள் யாரையோ அழைப்பதுபோலப் பாவனை செய்தார்கள். ஏதோ புதினமான பிராணிகளைப் பார்ப்பதுபோல அவர்களது கண்கள் தங்களை ஊடுருவுவதைக் கவனித்தபோது நடுக்கம் இன்னும் அதிகரித்தது.

இப்படியொரு பரிதாபமான நிலையை நினைக்க அருணாசலத்தாருக்கு பெரிய வேதனையாக இருந்தது. நாங்கள் பிறந்து வளர்ந்த இந்த மண்ணிலேயே - எங்கள் நாட்டிலேயே இப்படி உயிருக்குப் பயந்து சீவிப்பதை எண்ணி அழவேண்டும் போலிருந்தது. பூமியில் காலைப் பதித்து நடப்பதே ஏதோ பாவமான செயலைச் செய்கிறோமோ எனக் கசப்பையளித்தது. ஒரு தாயின் வயிற்றில் பிறந்த குழந்தைகளைப் போல ஏன் நாங்களெல்லாம் சகோதரத்துவமாக வாழமுடியாது? பிரச்சினைகளைப் பரந்த மனப்பான்மையுடன் அணுகித் தீர்வுகாண எல்லோருமே தயங்குவதேன்?

நெடுநேரம் காத்துநின்ற பின்னர் அவர்களுக்குரிய பஸ் கடவுளைப்போல வந்தது. உள்ளே அடைக்கலம் புகுந்தபின்னரும் வாயைத் திறக்க மனமில்லை-மௌன விரதம் நீடித்தது. அந்த இடத்திலே சம்பாசித்து தங்களை வித்தியாசப்படுத்திக் காட்டுவதற்கு இருவருமே விரும்பவில்லை போலும்.

அவர்களிருந்த இருக்கைக்குப் பின் இருக்கையில் மூன்றுபேர் - காடையர்கள்போல அருணாசலத்தாரின் கற்பனையிலிருக்கும் கோலம் கொண்டவர்கள் வந்து அமர்ந்தனர். அவர் மீண்டும் நம்பிக்கை இழந்தார். பின்னர்தான் கவனித்தார், அவர்களும் தமிழில் கதைத்துக் கொண்டிருந்தனர். இப்பொழுது தெம்புடன் திரும்பிப் பார்த்தார் அருணாசலம். அவர்களது கையில் ஒரு தமிழ் தினசரியும் இருந்தது.

இது அவருக்குப் பெரிய ஆறுதலாக இருந்தது.

அகங்காரமான இரைச்சலுடன் விரைந்து கொண்டிருந்தது பேருந்து. சில இடங்களில் நிறுத்தப்பட்டு மட்டில்லாமல் ஜனங்கள் அடைக்கப்பட்டனர். இன்னோரிடத்தில் பெண்கள் மூவர் தமது கைக்குழந்தைகளுடன் ஏறிக்கொண்டார்கள்.

தனது இயல்பான உறுமலுடன் பேருந்து கிளம்பியது. குழந்தைகளுடன் நிற்பதால் யாராவது இருப்பதற்கு இடம் தருவார்களென்ற எதிர்பார்ப்பில் இவர்களது பார்வை ஒவ்வொருவர் மேலும் படர்ந்தது. ஆனால் என்ன அதிசயம்! அங்கு இருக்கை கொண்டிருந்தவர்களில் எவரும் இவர்களைக் காணவில்லை! கந்தசாமிக்கு இந்த நேரமாகப் பார்த்து உறக்கம் பிடித்துக் கொண்டதால் முன் இருக்கையில்

தலையைச் சாய்த்துக் கொண்டார். இந்தத் தந்திரம் தெரியாத அருணாசலம் தனது முறை வருமுன்னர் யாராவது இடம் கொடுப்பார்கள் என நிம்மதியுடனிருந்தார்.

அந்தத் தாய்மார்கள் சில இருக்கைகளைக் கடந்து நெருக்கத்தில் நுழைந்தவாறு யாராவது தானம் செய்யப்போகும் இருக்கைகளை எதிர்பார்த்து வந்து கொண்டிருந்தபொழுது அந்த இளைஞர்கள் (காடையர்கள்) எழுந்து இடம் கொடுத்தார்கள். தோற்றத்தைக் கருத்திற் கொண்டு அவர்களைக் காடையர்கள் என எண்ணியிருந்தவர் அருணாசலம். இப்பொழுது அவர்கள் தன்னைவிடவே உயர்ந்துவிட்டவர்கள் போலத்தோன்றினார்கள்!

பஸ்சினது இரைச்சலையும், கண்டக்டருடைய '*ஈஸ்ஸரட்டயன்ட!*' குரலையும் மீறிக்கொண்டு சடுதியாக இன்னொரு குரல் வெடித்தது.

"*ஈஸ்ஸரட்டயனவாவோய்!*" (*முன்னுக்குப் போம் காணும்.)*

"*தம்ச யனவா ஐசே...! அபிற்ட கியன்ட ஓணனே!*" (*நீர் போம்காணும்...! எங்களுக்குச் சொல்லத் தேவையில்லை.)*

அருணாசலமும் பரிதாபமாகத் திரும்பிப் பார்த்தார். பார்த்ததுமே நெருப்பை மிதித்துவிட்டது போன்ற உணர்வு. இந்தத் தர்க்கத்தில் எதிராளியாக நிற்பவன் அந்த இளைஞர்களில் ஒருவன் - தமிழன்! ஒரு சிறுபான்மை இனம் துணிவுடன் வாய்திறந்து பேசுவதே குற்றமல்லவா!

பிரச்சினை என்னவென்று சரியாகப் புரியவில்லை. அந்த இளைஞனை முன்னுக்குப் போகுமாறு அவர் உறுமுகிறார். அவனோ தைரியமாக மறுக்கிறான்.

அருவருப்பான (அழுக்கான) தோற்றத்தோடு அவன் தன்னோடு முட்டிக்கொண்டு நிற்பது அவருக்குப் பிடிக்கவில்லை. அல்லது நேற்றோ முந்தநாளோ தான் மூட்டுமூட்டாகக் கழட்டப்பட்டவர்கள் இன்றைக்கு இவ்வளவு துணிவோடு உரசிக்கொண்டு நிற்பது பிடிக்கவில்லை என்பது சீக்கிரமாகவே புரிந்தது. இப்படியான பதற்றமான காலத்திலும் அவனுக்கிருக்கும் துணிவை எண்ணி வியப்பதா? அல்லது தவிப்பதா என்று புரியவில்லை. அவருக்கு வியர்த்தது -பயத்தில்!

"நியாயம் ஒருபக்கம் இருக்கட்டும்.. இப்ப இவன் தமிழன் என்றதுக்காகவே போட்டு உதைக்கத் தொடங்கிவிடுவாங்களே..... தொடங்கினால் அது அவனோடு மாத்திரம் நிற்காமல் எல்லாத் 'தெமள'ர்களையும் பார்த்துத்தானே நடக்கும்?"

அவர் பயந்தது போலவே ஒருவன், இவ்வளவு நடந்தபிறகும் இவங்களுடைய துணிவைப் பற்றிக் கூறி வகுப்புவாதத் தீயை மூட்டிவிட்டான். மின்வேகத்தில் அது பற்றிப்பரந்தது. பலர் சேர்ந்து கொண்டனர்.

தனித்த இளைஞனது அவலநிலையைக் கண்டதும் முன்னே நின்ற மற்ற இரு இளைஞர்களும் பாய்ந்து தங்கள் நண்பனுக்கு அருகில் வந்தனர். அத்தனைபேர் மத்தியில் அகப்பட்டு விட்டுக்கொடுக்காமல் வாதித்துக்கொண்டு நின்ற அவனுக்காக அவர்களும் குரல் கொடுத்தனர்.

அருணாசலம் திகைத்துப் போய்விட்டார். பயம் அதிகரித்தது. இனிக் கையைக்காலை மாறுகிற வைபவம் தொடங்கிவிடும்.

அந்த இளைஞர்களின் குரல்களும் உயர்ந்து கொண்டிருந்தன. ஆனால் பெரும்பான்மையாக இருக்கிற எதிராளிக்கு முன்னால் இது எம்மாத்திரம்? இந்த அமர்க்களத்தில் குழந்தைகள் அழுதன. பஸ் நிறுத்தப்படாமல் ஓடிக்கொண்டே இருந்தது.

கந்தசாமி முன்இருக்கையில் மீண்டும் சரிந்து உறங்கத் தொடங்கினார். அவருக்கு இங்கு நடப்பது ஒன்றுமே தெரியாதாம்!

நிலைமை முற்றியது! சமாதானப்படுத்துவதுபோல இரு சூரர்கள் முன்னே வந்தார்கள். "தம்சலா ஹிட்டப்பு தெனற்ட யனவா!" (நீங்கள் நின்ற இடத்துக்குப் போங்கடா!) என உதவிக்குவந்த இரு இளைஞர்களின் நெஞ்சிற் பிடித்துத் தள்ளினார்கள்.

"அபி மெதனதமாய் ஹிட்டியேற்றியே!" (நாங்கள் இதிலேதான் இருந்த நாங்கள்) என முதலில் அமர்ந்திருந்த இருக்கையைக் காட்டி அங்கே குழந்தைகளுடன் இருந்த பெண்களை எழும்புமாறு கேட்டுக்கொண்டு அவ்விடத்தில் அமரச் சென்றனர்.

இது அங்கிருந்த சில மனிதாபிமானிகளுக்குப் பிடிக்கவில்லை. "உங்களுக்கு ஒரு மனிசத்தன்மை இருக்குதா...? பிள்ளைகளுடன் இருக்கும் பெண்களை எழுப்ப எப்படி மனம் வந்தது?" என (சிங்களத்தில்) ஏசியவாறு ஒருவனது சேட்டைப் பிடித்து இழுத்தார்.

மற்றைய கைகளும் உயர்ந்தன.

இவர்கள் நாய்க்குட்டிகளைப்போல பரிதாபமாக தலையைக் குனிந்தனர் - சமாளிக்க முடியாத நிலை.

உயர்ந்த கைகள் அவர்கள் உடம்பில் விழுவதற்கு முன்னரே அவ்விடத்து இரைச்சல்களையும் ஊடறுத்துக் கொண்டு ஒரு குரல் வெடித்தது.

"எங்களுடைய சிங்கள ஆக்களும் எத்தனையோ பேர் இருந்தனீங்கள்தானே... ஒருவர்கூட எழுந்து எங்களுக்கு இடம் தரவில்லை. அந்தத் தமிழ்ப் பிள்ளைகள்தான் மனிசத் தன்மையுடன் இடம் தந்தார்கள்.... இவ்வளவு நல்லது செய்த பிள்ளைகளுக்கு நீங்களெல்லாம் செய்யிறது நியாயம்தானா?"

அவள் கோபாவேசம் கொண்டு நின்றாள். கனல் கக்குவது போலிருந்த அவள் கண்கள் பின்னர் கலங்கின. மற்ற பெண்களும் அவளுடன் சேர்ந்து கொண்டனர்.

எழுந்த கைகள் மடிந்து விழுந்தன. சூரர்களெல்லோரும் தலையைக் கீழே போட்டார்கள்.

எதிர்பாராமல் தோன்றிய அமைதியில் கந்தசாமியும் உயிர்பெற்றெழுந்தார்! அருணாசலம் அந்தப்பெண் கூறிய வார்த்தைகளை எண்ணி நன்றிப் பெருக்குடன் அவளை நோக்கினார்.

அக்கிரமங்களை அழித்தொழித்து உலகை உய்விக்கும் பத்திரகாளி தெய்வத்தைத் தரிசிக்கின்ற பக்தி நெஞ்சில் முட்டியது.

*(ஈழத்துச் சிறுகதை, மஞ்சரி, 1980)*

(இக்கதை இலங்கை - ரஷ்ய தூதுவரகத்தினால் அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட சிறுகதைப் போட்டியில் தமிழில் முதலாவதாகவும் மும்மொழிகளில் - சிங்களம், ஆங்கிலம், தமிழ் - இரண்டாவதாகவும் பரிசு பெற்று ரஷ்ய, ஆங்கில மொழிகளில் ரஷ்யாவில் பிரசுரிப்பதற்குத் தேர்வு செய்யப்பட்டது. - ஒக்டோபர் 1977)

# பாதைகள் மாறினோம்



வீட்டினுள்ளே இருக்கப் புழுங்கி அவிந்தது. கதிரையை எடுத்து வெளியே முற்றத்திற் போட்டுவிட்டு அமர்ந்தேன். முற்றத்து வேப்பமரம் காற்றை அள்ளி வீசியது. அந்தச் சுகத்தில் அப்படியே நீட்டி நிமிர்ந்து கதிரையிற் சாய்ந்தேன். மூத்தமகன் ஓடி வந்தான்.

"என்ன ஜெயந்தன்?"

"கோயிலுக்குக் கூட்டிக்கொண்டு போறனெண்டு சொன்னீங்களெல்லே?"

'கொஞ்ச நேரம் நிம்மதியாய் இருக்க விடமாட்டுதுகள்' என எரிச்சலேற்பட்டது.

அவன் தலையையும் கண்களையும் திருப்பித் திருப்பி ஒவ்வொரு சொல்லாக உச்சரித்து சொன்னவிதம் அந்த எரிச்சலைப் பறக்கடித்தது. அவனை அப்படியே கட்டியணைத்தேன். இப்படித்தான், சிலவேளைகளில் பிள்ளைகளுடன் எதற்காவது எரிந்து விழுந்துவிட்டு கொழும்புக்குச் சென்றபின்னர் கவலைப்படுவதுண்டு. அதனால் ஒவ்வொரு முறையும் லீவில் வரும்பொழுது பிள்ளைகளுடனோ, மனைவியுடனோ கடிந்து கொள்வதில்லை என எண்ணிக்கொண்டுதான் வருவேன்.

பின்ளைகள் என்றதும் பத்துப் பிள்ளை பெற்ற பின்னும் எட்டுமாதக் கதையல்ல. அளவான குடும்பத்தில் ஆனந்தம் அதிகமாம். அதனால் கட்டுப்பாடானவன் என்றும் அர்த்தமில்லை. அழகான மனைவியை வைத்துக்கொண்டு அதைப்பற்றி நினைக்கத் தைரியம் ஏது? கொழும்பிலிருந்து

இரண்டொரு நாள் லீவு கிடைத்தால் ஓடிவந்துவிட்டுப் போவதுண்டு. இந்த விசித்திரத்தில் என்ன கட்டுப்பாடு வேண்டியிருக்கிறது?

மூத்தவனுக்கு வயது நாலு. அடுத்தது இரண்டும் பெட்டைகளாகவே பிறந்துவிட்டன. அது எனக்குப் பெரிய மனக்குறை. ஆனால் கவிதா அடிக்கடி சொல்லுவாள், "அதுக்கென்ன எனக்கு உதவியாயிருப்பாளவை தானே?" என்று. இந்த விஷயத்தில் சிலவேளை எங்களுக்குள் தகராறு ஏற்படுவதுமுண்டு. அப்பொழுதெல்லாம், "நீ இஞ்சை கொண்டுவந்து குவிச்சிருக்கிற தொகையிலை இன்னுமின்னும் பெட்டையளையே பெத்துப்போடு!" என அவள் வாயை அடக்கிவிடுவேன்.

அவளுடைய முகம் 'உம்' மென்று மாறிப்போகும். சாலக்கண்ணீர் வரும். பிறகென்ன? அது சொல்ல வேண்டிய கதையில்லை. "சரி... சரி... இப்ப என்ன வந்தது. இன்னும் ரெண்டு பெடியளைப் பெத்துப் போட்டால் போச்சு...! அவங்களே உழைச்சுக் குடுப்பாங்கள்..." என நானே மீண்டும் சமாதானப்படுத்த வேண்டியிருக்கும். கவிதாவின் அழகைக் கண்டு, காதலித்து, சொத்துப்பத்து இல்லாவிட்டாலும் பரவாயில்லை, அவள்தான் வேண்டும் என்று ஒற்றைக்காலில் நின்று மணம் செய்துகொண்ட குற்றம் அவளுடையதல்லவே?

"ஐயா கூட்டிக்கொண்டு போறீங்களே?" ஜெயந்தன் தனது பிஞ்சுக் கரத்தினால் எனது முகத்தைத் திருப்பிக் கேட்டான்.

"சரி...! போய் அம்மாவைக் கொண்டு கால், கை, முகம் கழுவி வெளிக்கிடுங்கோ!"

"ஐயா, அம்மாவையும் கூட்டிக்கொண்டு போவமே...?"

"ஓம்! எல்லாரும்தான் வெளிக்கிடுங்கோ!"

ஜெயந்தன் துள்ளிக்கொண்டு ஓடினான். அம்மாவும் சேர்ந்து வரப்போவதில் இரட்டிப்பு சந்தோஷம்.

இன்றைக்கு வெள்ளிக்கிழமையானபடியால் வசதியாகப் போய்விட்டது. புதுவருடப் பிறப்போடு வந்ததால் கூடிய நாட்கள் லீவு எடுத்தேன். கூடிய செலவும் ஏற்பட்டுவிட்டது.

நிதிநிலைமையைக் கருத்திற் கொண்டுதான் இன்று கோயிலுக்குப் போகலாம் எனப் பிரகடனப்படுத்தினேன். அதுதான் தற்போதைக்கு மலிவான பொழுதுபோக்கு!

'அவனுக்கென்ன உத்தியோககாரன்' என்று ஊருக்குள்ளே பெயர். உத்தியோககாரனுடைய பொட்டுக் கேடுகளை உடைத்தாற்தானே தெரியும்! ஒரு பெருமூச்சு விட்டவாறு (அது என்னையறியாமலே வெளிப்பட்டுவிட்டது) நிமிர்ந்து உட்கார்ந்தேன்.

ஒழுங்கையில், தூரத்தில் யாரோ வருவது தெரிந்தது. வீதியிலிருந்து இறங்கும் ஒழுங்கை நேரடியாக எங்கள் வீட்டுக்குத்தான் வந்து முடிகிறது. இதனால் முற்றத்தில் நின்றால் ஒழுங்கையில் வருபவர்களைக் காண முடியும்.

'வருவது யாராக இருக்கும்? சிலவேளை என்னட்டைத்தான் ஆரேன் வருகினமோ?' என எண்ணியவாறே, 'எட! மாஸ்டர் கிழவன் போலையிருக்குது!' பார்த்துக் கொண்டிருந்தேன். தள்ளாடித்

தள்ளாடி இப்படி ஒருபக்கம் கழுத்தையும் தலையையும் சரித்துக் கொண்டுதான் அவரும் நடப்பார் - 'மாஸ்டர் கிழவன் தான்!'

'கிழவன் மத்தியானம் வந்திட்டுப் போனது' என்று கவிதா சொன்னது நினைவுக்கு வந்தது. 'இப்ப என்னட்டைத்தான் வருகுது போலை!

கிழவன் எங்களுக்குத் தூரத்து உறவுமுறை. 'தூரத்து' என்றால் அம்மாவின் அப்பாவுடைய தம்பியின்... இப்படி பல சிக்கல்களை எடுக்க வேண்டும். முன்பு வாத்தி உத்தியோகம் செய்தவர். அந்தத் திண்ணைப் பள்ளிக்கூடங்களைப் பற்றிக் கிழவன் சொல்வதைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். 'அந்தக் காலத்து எட்டாம் வகுப்பு'ப் படிச்ச மனுசன். அதற்குப் பின்னர் இந்த அரசாங்கச் சட்டங்கள் வந்துதான் தனக்கு உத்தியோகம் இல்லாமற் போனதென்று 'வாய் வாயாக' அடித்துக் கொள்ளும். கிழவன் மாஸ்டர் பட்டத்தைச் சுமப்பதற்கே இதுதான் காரணம்.

மாஸ்டருடைய சரித்திரம் சோகமானது. அதை அடிக்கடி புலம்பி அவர் அங்கலாய்க்கின்ற விதம் அதை விடச் சோகமானது. "பதைக்கப் பதைக்க என்ரை ராசாத்தியைத் தின்னக்குடுத்தன்... அது இருந்தால்... இப்பிடி என்னை அலைக்கழிஞ்சு திரிய விடுமே... அவள்தான் கண்ணை மூடினாள்... மூத்தவன் ஆரோ ஒருத்தியைக் கூட்டிக்கொண்டு ஓடினவன்... ஓடினவன்தான்... பெத்த தேப்பன் கிடந்து சாகுதெண்டு கவனிக்கிறானே... கையிலை. மடியிலை இருந்ததைப் போட்டு பெட்டையை ஒருத்தன்ரை கையிலை பிடிச்சுக் குடுத்தன்.... ஒரு தகப்பனெண்டு இருந்து இந்தக் கடமையாவது செய்யாட்டி ஊர் என்ன சொல்லும்...?

நல்லாய் வைச்சிருக்கிறானாம்... எண்டாப்போலை கையேந்திக்கொண்டு போகேலுமே... ஏதோ அதுகளாவது நல்லாயிருக்கட்டும்.''

மாஸ்டர் கிழவன் என அழைக்கப்படும் இந்தக் கிழவன் முழுக் கிழமடைய முன்னரே எங்கள் வீட்டோடு வந்து விட்டார். தனிய இருந்து கஷ்டப்படுவாரென ஐயாதான் தனது தோட்ட வேலைகளுக்கு ஒத்தாசையாக வைத்திருப்பதற்குக் கூட்டிவந்தார்.

கிழவனும் லேசுப்பட்ட ஆளில்லைதான்! மரவள்ளிக் கட்டைகள், மிளகாய்க்கன்றுகளுக்கு நீர் ஊற்றுதல், புல்லுச் செருக்குதல், மிளகாய்ப்பழம் பிடுங்கி பதமாகக் காயவைத்துப் பக்குவப்படுத்தல் போன்ற வேலைகளை அலுக்காமல் செய்யும். 'அந்தக் காலத்துச் சாப்பாட்டிலை வளர்ந்த உடம்பெல்லோ தம்பி!' என அடிக்கடி பெருமையுடன் சொல்லாவிட்டால் கிழவனுக்கு வேலையும் ஓடாது.

ஏழோ எட்டு வருடங்களுக்குப் பின்னர் கிழவனுக்கு வேலை ஓடாமற்தான் போய்விட்டது. வேளைக்கு வேளை சாப்பிட்டுவிட்டு ஒரு மூலையில் 'சிவனே' என்று விழுந்து படுத்துவிடும்.

நான் மணமுடித்து வந்தபொழுது கிழவனையும் என்னோடு கூட்டி வந்துவிட்டேன். இதனால் பெற்றோருக்கு ஒரு பாரம் குறையும் என்பது மாத்திரமல்ல; கிழவன் மேல் எனக்கு மாறாத பற்று ஏற்பட்டிருந்ததும் தான் காரணம். இரண்டு வருடங்களுக்குமேல் நான் கிழவனை ஆதரித்து வந்தேன். பின்னர் மெதுவாக என் தர்மபத்தினியின் நச்சரிப்புத் தொடங்கியது. தூரத்து

முறையிலோ அல்லது நெருங்கிய விதமாகவோ என் மனைவியின் உறவுக்காரனாய் இல்லாமற் போய்விட்டது கிழவனின் துரதிர்ஷ்டம்.

என் சீவியம் முழுதும் அவளுடன் ஒத்து வாழ்வேன் என்று கையெழுத்துப் போட்டவன் நான். பத்தினியின் சொல்லைக் கேட்காவிட்டால் பத்தினி பத்ரகாளியாக மாறவும் கூடும். எந்தக் குடும்பத்திற்தான் இது நடக்காத சங்கதி? என் குடும்பத்தில் ஆரம்பிக்குமுன்னரே நான் தந்திரமாக நடந்துகொள்ள வேண்டுமே? அப்படியொரு தந்திரத்தைக் கையாண்டு கிழவனிடம் 'சிம்பிளாக' விஷயத்தை அவிழ்த்தேன்.

கிழவனுக்குப் புரிந்துவிட்டது. ரோசக்கார மனுசன். போய்விட்டது.

"தம்பி...!"

"ஓம்...! மாஸ்டரே... வாங்கோ... வாருங்கோ... இதிலை... இஞ்சாலை இருங்கோ" - முகஸ்துதி.

கிழவன் நான் காட்டிய திண்ணைக் குந்தில் அமர்ந்து கொண்டது.

"என்ன மாஸ்டர்...? கனகாலத்துக்குப் பிறகு இந்தப் பக்கம்...? சுகமாயிருக்கிறியளே?" - சம்பிரதாயம்.

"ஓம் ராசா...! சுகத்துக்கு என்ன குறை...? கன காலமாய் தம்பியைக் காணயில்லை... பாத்திட்டுப் போகலாமெண்டு வந்தனான்..."

எனக்கு 'திக்'கென்றது. அந்தப் 'பார்த்துவிட்டுப் போவது' என்பதற்கு ஒரு தனி அர்த்தம் இருப்பதாக மனதிற்

பட்டது. வருவாய் இல்லாத கிழவன். போகும் பொழுது சும்மா விடலாமா? கையில் ஏதாவது கொடுத்துத்தானே அனுப்ப வேண்டும்? கிழவனும் அந்த நோக்கத்தோடுதான் வந்திருக்கும். எனது நிலைமையோ படுமோசம்! 'இந்தக் கிழவனும் இந்த நேரமாய் வந்து நிக்குதே!'

"மத்தியானம் வந்தனான்... தம்பி எங்கையோ போட்டுதெண்டு பிள்ளை சொன்னவள். இருந்து பாத்தன்... காணயில்லை. பிள்ளை சாப்பாடும் தந்துதான் அனுப்பினவள்."

போன கிழவன் அப்பிடியே தொலையவேண்டியது தானே? ஏன் திரும்ப வந்து கழுத்தை அறுக்குது? என்னைப் பார்க்க வேண்டுமென்று அவ்வளவு கரிசனையோ...? ஏதாவது 'சுருட்டி'க்கொண்டு போகலாமென்றுதான் வந்திருக்கும்.

"ஒருக்கால் என்ரை மோளையும் பாக்கவேணுமெண்டு ஆசையாயிருந்தது... அதுதான் தின்னவேலிப் பக்கம் போட்டுவாறன்... கடவுளேயெண்டு நல்லாயிருக்கிறாள்... ஒரு பிள்ளையும் பெத்து... அங்கை... அது நடக்கவும் தொடங்கிட்டுது!"

'கிழவனுக்கு நான் குடுக்காததாலை குறைவா? முன்பு என்னோடிருந்தபொழுது சாப்பாடும் போட்டு அவ்வப்போது கைச்சிலவுக்கும் கொடுத்திருக்கிறேன்.

கிழவன் சுருட்டுக் குடிக்கும். வெத்திலை பாக்கு எப்படியாவது கொடுப்பதென்றால் ஒரு பத்து ரூபாயாவது கொடுக்க வேண்டாமா? கன நாளைக்குப் பிறகு கண்டிருக்கிறேன்,

"என்ன தம்பி! ஏதோ யோசினையிலை இருக்குமாப் போலையிருக்கு?"

எனது பஞ்சப்பாட்டில், கிழவனோடு கதைப்பதற்கே மறந்து போயிருந்தவன் ஒரு சமாளிப்புச் சிரிப்புடன் கதைக்கிறேன்.

"ஓம் மாஸ்டர்...! தெரியாதே.. உங்களைக் கண்டவுடனை பழைய ஞாபகங்கள் வந்திட்டுது.. இப்ப எப்பிடி மாஸ்டர் உங்கடை பாடு...? மகனிட்டைப் போறனீங்களே...?

"அவனிட்டை ஆர் தம்பி போறது...? உதவாக்கரை. அவையிவையளைப் பிடிச்சு இப்ப இந்த வயோதிபர் மடத்திலை சேர்ந்திருக்கிறேன்."

என் மனதில் அரும்பும் அனுதாபம்.

"அங்கை... எப்பிடி வசதியே?"

"கடவுளேயெண்டு ஒரு குறையுமில்லைதம்பி! அந்தந்த நேரத்துக்குச் சாப்பாடு தருவினம்... இனி அயலட்டையிலை உள்ள சனங்கள் இடியப்பம் கிடியப்பம் கொண்டுவந்து விக்குங்கள். வாய்க்கு உவப்புத் தேவையெண்டால் அதிலை இடைதரம் வேண்டிச் சாப்பிடலாம்."

"அதுக்குக் கையிலை காசுமெல்லே இருக்க வேணும்...?" நானொரு சுத்த மடையன். கேட்கக் கூடாத கேள்வியைக் கேட்டுவிட்டேன்.

"ஓம் தம்பி...! இப்பிடித்தான் எங்கினையாவது வெளிக்கிட்டால், தெரிஞ்ச சனம் ரெண்டொரு ரூபாயைத் தருங்கள்..." கிழவனும் சொல்லவேண்டிய பதிலைச் சொல்லிவிட்டது.

சம்பள முற்பணம்., பண்டிகைக்கால முற்பணம் எல்லாம் எடுத்து, ஏதாவது அவசரம் வந்தாலுமென்று அதற்கு மேலாகவும் ஒரு நூறு ரூபா 'றோள'டித்துக் கொண்டுதான் வந்திருந்தேன். இந்த எட்டு நாட்களில் அது போனவழி தெரியாது. 'பொக்கெற்'டில் இருப்பது இப்பொழுது இரண்டே இரண்டு ரூபாய்தான். அதை நம்பித்தான் கோவிலுக்குப் போகின்ற 'பிளானை'யே போட்டேன். பிள்ளைகளுடன் போவதால் இனிப்பை கடலையை வேண்டிக் கொடுக்காமல் வரமுடியாது.

கிழவனுக்குக் கொடுக்காமலும் விடலாம். எனது கௌரவம்? 'உத்தியோககாரன் வந்து நிற்கிறான்?' என்ற எண்ணத்தில் கிழவன் வந்து நிற்கிறது. நான் கையை விரித்தால் நம்புமா? எப்படிச் சொல்லிப் புரியவைக்கலாம்? பேசாமல் அந்தக் கதையை எடுக்காமலே கடத்தி விடலாம். கிழவன் என்னைப் பற்றி எவ்வளவு கேவலமாக நினைக்கும்?

"தம்பியின்ரை பாடு எப்பிடி...? இப்பவும் கொழும்பிலைதானே ராசா...? கொப்பரிட்டைப் போறனியே...? அவனும் பாவம் இனி ஏலாது... நீங்கள் தானே... பிள்ளையள் கவனிக்க வேணும்?"

"பெரிய கஷ்டம்தான் மாஸ்டர்! என்ன செய்கிறது? இது முந்தின காலமே? சாமான்கள் விக்கிற விலையிலை... மனிசன் சீவிக்கேலுமே?"

"ஓமெண்டுறன்! ரெண்டு சதம் வித்த சீனி. இப்ப என்ன விலை விக்கிறாங்கள்...! முந்தியெண்டால் எங்கடை காலத்திலை பத்து ரூபாவை வைச்சுக்கொண்டு ஒரு மாதத்துக்கு ஒரு குடும்பம் சீவிக்கலாம்."

பத்து ரூபாயென்றதும்தான் நினைவுக்கு வருகிறது. நாளைக்கு ஏதாவது 'மச்சத்தைக் கிச்சத்தை' வேண்டலாமென ஒரு பத்து ரூபாயை 'பொத்திப் பொத்தி' வைத்திருக்கிறேன். அதை எடுத்துக் கொடுத்தாலென்ன?

அதற்கும் மனமிசையவில்லை. நாளை மறுதினம் நான் பயணமாவதால் நாளைக்கு இந்த 'ஸ்பெசல்' அதையும் கிழவனிடம் தாரை வார்த்துவிட்டு என்ன செய்வது? செல்வராசனிடம் இருபது ரூபாய் கைமாற்றுக் கேட்டிருந்தேன் - பயணச் செலவுக்கு. அவனும் நாளைக்குப் பின்னேரம் தான் கொண்டுவந்து தருவதாகக் கூறினான். அல்லது அவனிடமாவது கொஞ்சம் கூடக்கேட்டுப் பார்க்கலாம்.

''தம்பி! எப்ப பயணம்?''

''நாளையிண்டைக்கு மாஸ்டர்... அதுகும் இஞ்சை கொண்டுவந்த காசையெல்லாம் சிலவளிச்சுப் போட்டு வெறுங்கையோடை நிக்கிறன்... இனிப் போறதுக்கு ஆற்ரை கையை ஏந்திறதெண்டுதான் தெரியவில்லை...''

மெதுவாக எனது துடுப்பை இறக்குகிறேன்.

''வந்துவந்து போறது கஷ்டமெண்டால் பிள்ளையையும் அங்கை கூட்டிக்கொண்டு போகலாம் தானே தம்பி?''

''எங்கை மாஸ்டர் வீடு கிடைக்குது...? அதுசரி... நீங்கள் விடியத்தானே போறியள்...? நான் உதிலையொருக்கால் கோயிலடிக்குப் போட்டு வரப்போறன்.''

''இல்லைத்தம்பி... என்ரை மகள் வந்து இண்டைக்கு தன்னோடை நிண்டிட்டுப் போகச் சொன்னவள்... நாளைக்கு நான் மடத்துக்குப் போயிட வேணும்...''

நாளைக்குக் காலைவரையாவது பிரச்சினையை ஒத்திப் போடலாமென்று பார்த்தேன். அந்த எண்ணமும் காலைவாரிவிட்டது.

"...அதுகும் பெரிய கஷ்டப்பட்டுத்தான் தம்பி சேர்ந்தது... அவங்கடை றூளின்படி நடக்கவுமெல்லே வேணும்...? கோப்பாயிலை ஒரு ஆளைப்பிடிச்சு... பிறகு ஒரு டாக்குத்தரிட்டைப் போய் 'இவராலை இனி வேலை செய்யேலாது' எண்டு சேர்டிபிக்கட் எடுத்துக் குடுத்துத்தான் சேர்ந்தது..."

'பொக்கெற்'றில் இருக்கிற இரண்டு ரூபாயைக் குடுக்கலாம். 'என்னடா இவன் இதுதான் தாறான்' என்று கிழவன் நினைக்கக்கூடும். அதைவிட கோவிலுக்கு வருகின்ற பிள்ளைகளை ஏமாற்ற வேண்டிய சங்கடமும் இருக்கிறது. வயிற்றுக்கு வஞ்சகம் செய்து அந்தப் பத்து ரூபாயை எடுக்கலாம். நாளைக்கு கவிதாவின் முகத்தில் விழிக்க முடியாது.

சிலவேளை செலவுக்குக் கொடுத்த காசில் அவள் மிச்சம் பிடிச்சு வைச்சிருக்கக்கூடும். கேட்டுப் பார்க்கலாம். "கவிதா!"

"...வ்யோதிபர் மடத்திலை சேரிறதெண்டால் போலை லேசுப்பட்ட காரியமில்லை தம்பி... என்ரை பழைய கட்டிலொண்டும் ஒரு கதிரையும் மேசையும் மகள் வீட்டிலை இருந்தது. அதையெல்லாம் நாப்பத்தைந்து ரூபாய்க்கு வித்துத்தான் அலுவல் பாத்தனான்..."

கிழவனுடைய நிலைமை பெரிய பரிதாபமாகத் தோன்றியது. நான் வீட்டைவிட்டு அனுப்பியபடியாற்தானே இவ்வளவு கஷ்டமும் பட்டிருக்கிறதென்ற கவலையின் அரிப்பு

மனதில். அதற்குப் பிராயச்சித்தமாக நிறைய ஏதாவது கொடுக்கலாமென்றாலும் முடியவில்லை. வருஷப்பிறப்போடு வந்த மனிசனை வெறுங்கையோடு அனுப்பலாமா?

"கூப்பிட்டனீங்களே?" என்றவாறு கவிதா வந்தாள்.

"உன்னட்டை ஏதாவது காசு இருக்குதே கவிதா?"

"என்னட்டை ஏது...? காலமை நாலுரூபா இருந்து நீங்கள்தானே வேண்டினனீங்கள்... இப்ப ஒரு அம்பேசம் இருக்குது... கற்பூரம் கொழுத்தலாமெண்டு வைச்சிருக்கிறன்..."

கிழவன் எழுந்து போகவில்லை.

"எங்கை பிள்ளை... எங்கையோ வெளிக்கிடுமாப் போலை இருக்குது?"

"ஓமப்பு! உதிலை நல்லூரடிக்குப் போட்டு வரப்போறம்."

"ஐயா! கெதியிலை வாங்கோவன் போக!" இது ஜெயந்தன்.

"ஓம்...! இஞ்சை அப்புவோடை கதைச்சுப்போட்டுப் போவம்."

"அதுகளுக்கென்ன தெரியும் மாஸ்டர்? இஞ்சை வா, அங்கை வா எண்டு கத்துங்கள்..., எங்கடை கஷ்டம் விளங்கப் போகுதே...?"

"கவிதா...! மாஸ்டருக்குத் தேத்தண்ணி கொண்டுவாவன்!"

"ஏன் தம்பி இப்ப...? பிள்ளையின்ரை அவசரத்துக்குள்ளை..."

"வருஷத்தோடை மனிசியின்ரை ஆக்கள் வந்து நிண்டினம்... பின்னைத் தெரியாதே? வந்தவையளை ரெண்டு படமும் கூட்டிக்கொண்டு போய்க் காட்டினது... சமையல் அது இதெண்டு பெரிய செலவுதான்."

"ஓ! பின்னை... இனசனமெண்டால் சிலவைப் பார்க்கேலுமே...? நான்தான் தனிக்கட்டையாய்ப் போய் ஒருத்தரும் வேண்டாமெண்டிட்டுக் கிடக்கிறன்..."

"போனமுறை வந்து நிக்கயிக்கை இவன் ஜெயந்தனுக்குச் சரியான காய்ச்சலாப் போச்சு..." கடைக்காரக் கந்தசாமியிட்டைதான் அம்பது ரூபா மாறினன். இந்த முறை வந்தவுடனை அதைக் குடுத்திட்டுத்தான் மற்றவேலை பார்த்தது."

"ஓம் தம்பி! இல்லாட்டி அயலட்டையிலை மரியாதையே...? வேண்டினதைக் குடுத்தாத்தான் பேந்தும் அந்தரமாபத்துக்கு வேண்டலாம்."

"மனிசிக்கும் இந்தமுறை வருஷப்பிறப்புக்குச் சீலை எடுத்துத் தரயில்லையெண்டு மன்னைதான்... நான் என்ன மாஸ்டர் செய்யிறது...? எங்கையேன் கொள்ளைக்குத்தான் போகவேணும்."

மாஸ்டர் வீசுகின்ற பந்தை நான் சாதுரியமாகத் தடுத்து விளையாடிக்கொண்டு நின்றேன்.

"அதுக்காக? பேசாமல் விடுறதே தம்பி? இப்படியொரு நல்லநாள் பெருநாளிலைதானே. அதுகளும் ஆசையோடை கேட்கிறது." கிழவன் என் மனைவிக்காகப் பரிவுகொண்டது.

"இந்தாங்கோ அப்பு! தேத்தண்ணி!"

"ஏன் பிள்ளை...? சீனி இந்த விலை விக்கயிக்கை சும்மா சும்மா தேத்தண்ணியைக் குடிப்பான்..."

"எங்கை சீனி கிடைக்குது...! பனங்கட்டியோடை தான் குடியுங்கோ!"

"ஐயா...! கெதியிலை வாங்கோவன்." அடம்பிடிக்கும் குழந்தைகள்.

"ஓமடா! கத்தாமல் இரு! அப்பு போனாப் பிறகு போவம்...! நீ இப்ப கோயிலுக்குப் போற கரிசனையிலையே கத்துறாய்? ஏதேன் சொட்டைத் தீன் தின்னவெல்லோ...! அதுக்கும் இஞ்சை என்னட்டை ஏது காசு...?" கிழவனுக்கும் கேட்கக் கூடியதாக சற்று உரக்கவே ஜெயந்தனை ஏசுகிறேன்.

கிழவன் தேனீரை உறிஞ்சத் தொடங்கியதும் கவிதாவைக் கண்ணாற் சாடைகாட்டி அறையினுள் அழைத்துச் சென்று, "இப்ப மனுசனுக்கு ஏதாவது குடுத்துவிடவெல்லே வேணும்...? அந்தப் பத்து ரூபாயை எடுத்துக் குடுப்பமே?"

"உங்களுக்கென்ன விசரே...? ஒண்டையும் யோசிக்காமல் தூக்கி நீட்டுங்கோ! பெரிய கை! பிறகு நாளைக்குக் கிடந்து வத்துங்கோ! போனாலும் நல்ல சாப்பாடு இல்லாமற் கிடந்து காயுறது... இஞ்சை நிக்கயிக்கையெண்டாலும் ஏதும் நல்லதாய்ச் சாப்பிட வேண்டாமே? கிழவன் மத்தியானம் சோறு சாப்பிட்டது தானே? போதும்...! பேசாமல் விடுங்கோ!"

கட்டளை பிறந்துவிட்டது. வெளியே வந்தேன். ஜெயந்தனுடன் கதைத்துக் கொண்டிருந்த கிழவன் என்னைக் கண்டதும், "அப்ப... பிள்ளையளுக்குக்

கோயிலுக்கு நேரம் போயிடும்... வேளைக்குக் கூட்டிக்கொண்டு போ ராசா!..'' என்றவாறே எழுந்தது.


"ஓம்! மாஸ்டர் போவம்!'' நான் அலுத்துக் கொண்டேன்.

இதென்ன 'தர்ம'சங்கடம்? கிழவன் இன்னும் போகாமல் நின்று வேட்டியைச் சரிசெய்து கட்டுவதுபோல, நேரத்தைக் கடத்துகிறதே!


இடுப்பினுள் செருகியிருந்த வேட்டித் தலைப்பை இழுத்து... மடியினுள் வைத்திருந்த எதையோ கசங்கிப் போயிருந்த இரு இரண்டு ரூபாத்தாள்களை எடுத்து மிகக் கவனமாகத் தன் நடுங்குகின்ற கரத்தினால் விரித்து அதை ஜெயந்தனுடைய கையினுட் திணித்தவாறே... என்னைப் பார்த்து, "தம்பி...! பிள்ளையளுக்கு ஏதாவது வேண்டிக்குடு ராசா...! அதுகளுக்கு எங்கடை கஷ்டம் தெரியுமே?'' என்ற பொழுது ஏனோ அவருடைய கண்கள் கலங்கின.

"மாஸ்டர்! இதென்ன...?'' என்று மாத்திரம் கேட்டேன். எனது வாய் அடைத்துப் போய்விட்டது. ஆனால் எனது கண்ணீரை அடைக்க முடியவில்லை.

*(வீரகேசரி, 1978)*



# உதிரிகள் அல்ல



தொழிற்சாலையின் கஷ்டமான பகுதிகளிலெல்லாம் அவர்கள் வேலை செய்ய வேண்டும். இயந்திரங்களின் காதைச் செவிடாக்குகின்ற இரைச்சல், காற்று வாரியிறைக்கின்ற புழுதி, கடும்வெயில், மழை, பனி எல்லாம் அவர்களுக்குப் பழகிப்போய்விட்ட சங்கதி.

தொழிற்சாலை இயங்கிக் கொண்டிருக்கும் பொழுது எங்காவது ஒரு இயந்திரத்தில் கோளாறு ஏற்பட்டால் அவர்கள் உடனடியாகப் பிரசன்னமாகி திருத்தவேலைகளை மேற்கொள்ள வேண்டும். இயந்திரங்களின் மிகச் சிறிய உதிரிபாகமொன்று பழுதடைந்தாலும் அல்லது கழன்று போய்விட்டாலும் அவ்வியந்திரமும் அதனால் அத் தொழிற்சாலையும் நின்றுவிடும். உற்பத்தியைப் பாதிக்காதவாறு எந்த ஒரு திருத்த வேலைகளையும் சீக்கிரமாகச் செய்து முடிக்க வேண்டுமென்ற பொறுப்புணர்வு அவர்களது உதிரங்களோடு கலந்திருக்கிறது. தங்களுக்குச் சோறுபோட்டு வாழவைக்கிற தெய்வமாக அத்தொழிலகத்தைக் கருதி அத்தனை விசுவாசமாக உழைத்தார்கள்.

அப்புலிங்கம் ஒரு நோஞ்சான். மெலிந்த உடம்புக்காரன். சாதாரணமான வேளைகளில் அவ்வளவு உற்சாகமாகக் காணப்படமாட்டான். நூற்றுச்சொச்ச மைல்களுக்கு அப்பாலிருக்கும் பெண்சாதி பிள்ளைகளின் நினைவுதான் இப்படி மனதைப் பாதிக்கிற காரணம்.

ஆனால் வேலையென்று வந்துவிட்டால் பெரிய துணிச்சல் வந்துவிடும். சகல பிரச்சினைகளையும் மறந்து வேலையில் ஒன்றிப் போய் விடுவான். உயரமானதொரு ஏணியில் நின்று சர்க்கஸ் புரிபவனைப் போல வேலை செய்து கொண்டிருந்தவனுக்கு என்ன நேர்ந்ததோ, 'தொப்'பென்று விழுந்துவிட்டான்.

கூடவேலை செய்துகொண்டிருந்த பியரத்ன பதறிப் போனான். ஏணியைப் பிடித்திருந்த சுனில் அதை அப்படியே ஒரு பக்கம் போட்டுவிட்டு ஓடிவந்தான். 'அப்பு...! அப்பு!' என அழைத்தவாறு அப்புலிங்கத்தின் முகத்தைத் திருப்பிப் பார்த்தார்கள். அப்பு பேசாமல் சுருண்டு போய்க் கிடந்தான். கண்கள் மூடிக்கிடந்தன. வேறு வேலைகளில் ஈடுபட்டிருந்த மற்றைய தொழிலாளர்களும் அண்மையில் ஓடிவந்து குழுமினார்கள்.

சுனில், ஒரு வாகனத்தைக் கொண்டுவருவதற்காக தொழிற்சாலையின் போக்குவரத்துப் பகுதிக்குக் குடல் தெறிக்க ஓடினான். ஓடுகின்றபொழுது காரணத்தைக் கேட்பவர்களிடமெல்லாம் ஓரிரு வார்த்தைகளில் விஷயத்தைச் சொல்லிக்கொண்டு போனான். அதைக் கேட்டவர்களும் விபத்து நடந்த இடத்தை நோக்கி ஓட, அதைப் பார்த்து இன்னும் பலர் ஓடிவர, சற்று நேரத்தில் பெரிய கூட்டமே கூடிக் கொண்டிருந்தது.

பாத்திரமொன்றில் தண்ணீர் கொண்டுவந்து அப்புலிங்கத்தின் முகத்திலே தெளித்தார்கள். பியரத்னவும் இன்னொருவருமாகச் சேர்ந்து அவனை அணைத்துத் தூக்கினார்கள். அப்பொழுது அப்பு கண்விழித்து எல்லோரையும் புதினமாகப் பார்த்தான். பெரிய

அதிர்ச்சியிலிருந்து மீளமுடியாமல் தவிப்பவன் போலத் தெரிந்தது. இருபக்கமும் அணைத்தவாறு அவனை நிறுத்தினார்கள். அவன் நிற்க முடியாதவனாய் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு சோர்ந்தான்.

குழுமி நின்று அவனை எட்டி எட்டிப் பார்ப்பவர்களை இன்னொருவன் ஏசி விலக்கினான். காற்றுப்பட்டால் அவனுக்குச் சற்று ஆறுதலாக இருக்கும். பொதுவாக எல்லோருமே அவனுக்காக அனுதாபப்பட்டுக் கதைத்தார்கள். 'பாவம், அருமையான பெடியன்!' சிலர் அவனது நெருக்கமான நண்பர்களிடம் அவன் தனிஆளா அல்லது குடும்பஸ்த்தனா என விசாரித்தார்கள். இரண்டு பிள்ளைகளுக்குத் தகப்பனாகவும் இருப்பதாகப் பதில் வந்தது.

இன்னோர் இயந்திரத்தைப் பரீட்சித்துக் கொண்டிருந்த இவர்களது அதிகாரிக்குச் செய்தி எட்டியதும் அதிர்ச்சியடைந்தார். அவருக்கு, அப்புலிங்கம் விபத்தில் மாட்டிக் கொண்டது ஒரு கவலை. அது இனித் தன்னையும் ஒரு பிரச்சினையில் மாட்டப்போவது இன்னொரு கவலை.

அத்தொழிலாளி வேலைசெய்யும் பொழுது தற்காப்பு வசதிகள் வழங்கப்பட்டிருந்தனவா? அவனுக்குரிய வேலையைத் தான் செய்யுமாறு பணிக்கப்பட்டிருந்தானா என்பது பற்றியெல்லாம் இனிமேற்தான் மேலதிகாரிகள் அக்கறைப்படப் போகிறார்கள். அந்த அக்கறை கூட விசாரணைகளிலிருந்து தங்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்கிற முயற்சிதான். தொழிலாளர்களின் தேவைகளைப் பற்றி எவ்வளவு வற்புறுத்திச் சொன்னாலும் சிரத்தை கொள்ளாமல் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பேசி தங்களது

தேவைகளைச் சாதித்துக்கொண்டு போகிற மேலதிகாரிகள். இதுபோன்ற சந்தர்ப்பங்களிலும் இரண்டும்கெட்டான் நிலையிலுள்ள நடுத்தர அலுவலர்களின் தலையில் பழியைப் போட்டுவிட்டுத் தப்பித்துக் கொள்வார்கள்.

'தலைவிதி' என முணுமுணுத்தவாறு அவர் விபத்து நடந்த இடத்துக்கு ஓடினார். 'என்ன...? என்ன நடந்தது?' எனப் பதற்றம் அடங்காதவராய் கேட்டார். சிவா மஹாத்தயாவைக் கண்டதும் பியரத்னவுக்கு அழுகை பொங்கிக்கொண்டு வந்தது. விஷயத்தைக் கூறமுடியாமல் நாத் தழுதழுத்தது. சகோதரனைப் பறிகொடுக்கப் போகின்ற நேரத்தில் தந்தையைக் கண்ட மகனைப் போல உணர்ச்சி வசப்பட்டான்.

சிவாவின் தொழிலாளர்கள் அவர்மேல் நிறைய மரியாதை வைத்திருந்தார்கள். தொழிற்சாலையில் இப்படி ஓர் அதிகாரி வந்து கிடைப்பதே அபூர்வம். தொழிலாளரது பிரச்சினைகளைப் புரிந்துகொள்ளவும், அவர்களது நலனில் அக்கறைப்படவும், அவர்களோடு சுகதுக்கங்களில் கலந்து கொள்ளவும் யாருக்குத்தான் மனசு வருகிறது?

அதிகாரிகள் என்றால் தொழிலாளர்களின் வசதியீனங்களைக் கருதாமல் அவர்களிடம் சக்திக்கு மேற்பட்ட வேலை வாங்குவதையே கண்ணாகக் கொண்டு மேலிடத்தில் நல்ல பெயர்களைச் சம்பாதித்துக் கொள்பவர்கள் என இவர்கள் அர்த்தம் கொண்டிருந்தார்கள்.

இயந்திரங்களில் பெரிய திருத்தவேலைகள் நடக்கும் பொழுது மூன்று நான்கு நாட்கள் தொடர்ந்து வேலை செய்ய வேண்டும். இப்படி இரவு பகலாகத் தொடர்ச்சியாக வேலை செய்தாலும் இடையில் குளிப்பதற்கோ,

உறங்குவதற்கோ சந்தர்ப்பம் கிடைப்பதில்லை. பெண்சாதி பிள்ளைகளுக்கு ஒரு வருத்தம், துன்பம், அவசரம் என்றாற்கூட விட்டுவிலக முடியாது.

தங்களுக்குப் பணியாத தொழிலாளர்களைப் பற்றியும், போட்டி மனப்பான்மையினால் சக அலுவலர்களைப் பற்றியும் மேலிடத்துக்கு இல்லாதது பொல்லாததுகளை முறையிட்டுக் குழிபறிக்கின்ற செயல் பலருக்குக் கைவந்த கலையாயிருந்தது. தொழிற்சாலையின் முன்னேற்றத்திலும் உற்பத்திப் பெருக்கிலும் அக்கறையுள்ளவர்கள் போல 'நடிக்கின்ற' அவர்களுக்கு 'அக்ட்டிங் புறமோசன்'கள் கிடைக்கும். பதவி உயர்வுக்குத் தேவையான ஆகக்குறைந்த தகுதியேனும் இல்லாவிட்டாலும் அவர்கள் சம்பாதித்து வைத்திருக்கிற 'நல்ல பெயர்கள்' பெரிய தகுதியாகக் கருதப்பட்டன. தொழிலாளர்கள் மாடாக உழைத்த பொழுது அந்த அதிகாரிகளுக்குச் சம்பள உயர்வுகளும், பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டன. தொழிலாளர்களது உழைப்பைச் சுரண்டித் தாங்கள் உயர்ச்சியடைகின்ற சுகத்துக்காக இவர்களை மனிதாபிமானமற்ற முறையில் நடத்துவதை சாதாரணமாகக் கருதினார்கள்.

எவ்வித பொருளாதார அடிப்படையும் இல்லாத இவ் ஏழைத் தொழிலாளர்கள், மாதாந்த சம்பளத்தை மாத்திரம் நம்பியே சீவிக்க வேண்டியிருந்ததால் தங்களது குடும்பப் பொறுப்புகளை நினைத்துக்கொண்டு அடங்கிப் போனது அவர்களுக்கு வசதியாகப் போய்விட்டது.

சுனிலின் அவசரத்தை உணராததுபோல 'அம்பு லன்ஸ்' இயங்க மறுத்தது. சாரதி, பெரும் முயற்சியின்

பின்னர் 'ஓடாது!' எனக் கையை விரித்தான். இதுபோன்ற அவசர சந்தர்ப்பங்களிற் கிடைக்கின்ற வழக்கமான பதில்தான். வருடம் முழுதும் திருத்த வேலைகளை மேற்கொண்டாலும் வருத்தம் தீராத புராண காலத்து வண்டி அது. இப் பாரிய தொழிற்சாலையின் அதிகரிக்கின்ற உற்பத்தியைக் காட்டி, மேலிடத்திலிருந்து ஒவ்வோர் உயர் அதிகாரிகளுக்கும், புதிய வாகனங்களைத் தருவிக்கின்ற நிர்வாகம், ஏன் இன்னும் ஓர் அம்புலன்ஸ் வண்டியைப் புதிதாக வேண்டவில்லை? மூச்! அதைப்பற்றி யாருமே பேசக்கூடாது.

விபத்து நடந்த இடத்துக்கு வேறொரு வாகனத்தைக் கொண்டு வந்தார்கள். பியரத்ன பின் இருக்கையில் ஏறி இருக்க அப்புலிங்கத்தை அவனது மடியிற் கிடத்தினார்கள். பெரிய பிரயத்தனப்பட்டு அப்புவின் கால்களை மடக்கிவைத்துக் கதவை மூடினார்கள். சிவா மஹாத்தயாவும், சுனிலும் முன் இருக்கையில் ஏறிக் கொண்டதும் வாகனம் விரைந்தது. சம்பிரதாயப்படி தொழிற்சாலையின் வைத்திய நிலையத்திற்கு முதலில் அப்புலிங்கம் கொண்டு செல்லப்பட்டான். இப்பொழுது இருவரின் கைத்தாங்கலில் அவனால் நடக்க முடிந்தது. வைத்திய நிலையத்தினுள்ளிருந்த கட்டிலில் அவனைப் படுக்க வைத்தார்கள். வைத்திய அலுவலர் சோதனை செய்தார். வெள்ளிக்காயங்கள் ஒன்றும் இல்லை. உட்காயங்களைப் பற்றி அறியும் ஆறுதல் அவருக்கு இல்லை. 'பயப்படுவதற்கு ஒன்றும் இல்லை... துண்டு தருகிறேன். அரசாங்க ஆஸ்பத்திரியில் அனுமதியுங்கள்... இரண்டு மூன்று நாட்களில் சரியாகிவிடும்' எனத் தனது வழமையான பணியை முடித்தருளினார். அவனைக் கொண்டுபோய்

ஆஸ்பத்திரியிற் போடுவதோடு தொழிற்சாலை நிர்வாகத்தின் பணியும் முடிந்துவிடும்.

அப்புலிங்கத்தைக் கைத்தாங்கலாப் பிடித்தவாறு வாகனத்துக்குக் கொண்டு வந்தார்கள். வாகனம் நகரத்துக்குப் போவதில் வைத்திய அலுவலருக்கும் ஒரு சந்தோஷம் காத்திருந்தது. அவரது வாகனத்துக்குப் பெற்றோல் தேவை. போகின்றபொழுது தனது விடுதிக்குப் போய் பெற்றோல் கலனை எடுத்துச் சென்று நகரத்திலிருந்து ஒரு கலன் பெற்றோல் வேண்டிவருமாறு சாரதியிடம் பணித்தார். பன்னிரண்டு மைல்களுக்கு அப்பாலுள்ள நகரத்துக்கு, பெற்றோலுக்காக சொந்த வாகனத்திற் போய்வருவது கட்டுப்படியாகாத விஷயம்.

அப்புலிங்கத்தை வாகனத்துள் ஏற்றுகின்றபொழுது அவன் மீண்டும் மயக்கமடைந்தான். உயரத்திலிருந்து விழுந்த ஒருவனை சிகிச்சைக்காக எடுத்துச் செல்லும் பொழுது படுக்க வைத்துக்கொண்டு செல்லும் வசதியுள்ள அம்புலன்ஸ் போன்ற வாகனங்களைத்தான் பாவிக்க வேண்டுமென தொழிலாளர் பிரச்சினைகள் பற்றி கருத்தரங்கு நடத்திய தொழிற்சாலைப் பரிசோதகர் முன்னர் கூறியது சிவாவிற்கு நினைவு வந்தது. அதை இப்பொழுது சொன்னால் யார்தான் கவலைப்படப் போகிறார்கள்? இருக்கின்ற வாகனத்தையாவது நேர காலத்துக்கு விடலாமென்றால் ஆயிரம் தொல்லைகள். பாதுகாப்பு அணியைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் ஓடிவந்து நியாயம் கதைத்தார். விபத்தடைந்த நோயாளியோடு சகதொழிலாளி வைத்தியசாலைக்குச் செல்ல முடியாதென தொழிற்சாலை நிர்வாகம் விதித்திருக்கின்றது. அதனால் பியரத்னவை இறங்குமாறும் தங்களில் இருவர் துணைக்குச் செல்வதாகவும்

கூறினார். பியரத்னவிற்கு கோபம் நெருப்பாகப் பற்றியது. ''உங்களுக்கும் நகரத்தில் ஏதோ அலுவல் இருப்பதாற்தான் இபடிக் கரிசனைப்படுகிறீர்கள். அப்புலிங்கத்திற்கு என்ன நடந்தது? எங்கே அடிபட்டது என வைத்தியர் விசாரித்தால் என்ன பதிலைச் சொல்ல முடியும்? நிர்வாகத்தோடு கதைக்க எனக்குத் தெரியும்...'' என முகத்திலடித்ததுபோலக் கூறினான். பின்னர் ''நீ வாகனத்தை எடு!'' என சாரதியோடு எரிந்து விழுந்தான்.

வாகனம் உறுமலெடுத்து நகர்ந்தது.

வைத்தியசாலையை அடைந்ததும் சுனிலும் பியரத்னவும் அப்புலிங்கத்தை மிகவும் பக்குவமாக அணைத்து இறக்கினார்கள். ஆஸ்பத்திரி ஊழியர்களின் உதவியுடன் தள்ளு வண்டியிற் கிடத்தி வைத்தியரிடம் கொண்டு சென்றார்கள்.

அப்புலிங்கம் 'வார்ட்'டில் அனுமதிக்கப்பட்டான். அவனைச் சோதித்துப் பார்த்த வைத்தியர் உடனடியாக சேலைன் குளுக்கோஸ் ஏற்றுவதற்கு ஒழுங்குகள் செய்தார். அவனோடு யாரும் தங்கி நிற்பதற்கு அனுமதி மறுக்கப்பட்டது.

பியரத்னவிற்கு மனசு கேட்கவில்லை. அறிமுகமான ஆஸ்பத்திரி ஊழியர்களின் உதவியுடன் அப்புவிற்குப் பணிவிடை செய்வதற்காக தங்களில் ஒருவர் நிற்பதற்குரிய அனுமதியைப் பெற்றான்.

சுனிலைத் தங்கவைத்துவிட்டு தனது வீட்டுக்குச் சென்றான். பியரத்ன வெந்நீர்போத்தல், தலையணை, பெற்சீற், சீனி போன்ற பொருட்களைக் கொண்டுவந்தான்.

மாலையில் வந்த சக தொழிலாளர்கள் ஹோர்லிக்ஸ், பிஸ்கற், சிகரட் போன்றவற்றைக் கொண்டுவந்தனர். அப்புலிங்கத்தோடு யாரும் கதைக்க முடியவில்லை உறக்கத்திலிருந்தான். அவனோடு கதைகொடுத்துக் குழப்பக்கூடாது என்பது வைத்தியரின் உத்தரவு என சுனில் மற்றவர்களுக்கு விளக்கினான்.

இரவு ஏழு மணியாகிவிட்டது. காலை பத்துமணிக்கு வந்த பயணம். தொழிற்சாலைக்குப் போக வேண்டும் என்ற உணர்வு அப்பொழுதுதான் பியரத்னவிற்குத் தோன்றியது. அங்கு என்ன பாடோ தெரியாது. செய்த வேலையைப் போட்டது போட்டபடியே விட்டு வந்தது நினைவிற்கு வந்தது. சிவா மஹாத்யா வேறு யாரையாவது அவ்வேலைக்கு ஒழுங்கு செய்திருப்பார். மாலையில் அவர் வருவார் என்று எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் வரவில்லை, வந்திருந்தால் நிலைமையைக் கேட்டறிந்திருக்கலாம்.

சுனிலிடம் விஷயத்தைக் கூறிவிட்டு பியரத்ன தொழிற்சாலைக்குச் சென்றான். அங்கு பெரிய அதிர்ச்சி காத்திருந்தது.

வாசலிலேயே பார்த்திருந்த பாதுகாப்பு அதிகாரி இவனைத் தொழிற்சாலைப் பெரியவரிடம் கூட்டிச் சென்றார். தொழிற்சாலையில் தொழிலாளரை சேர்ப்பதிலும் நிறுத்துவதிலும் மட்டும் பெரியவராகக் கணிக்கப்படும் அவர் நாயை விரட்டுவதுபோல இவனை ஏசினார் - 'கெற் அவுட்.'

அவன் வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டான்.

செய்துகொண்டிருந்த வேலையை அரைகுறையாக, விட்டு யாருடைய அனுமதியுமின்றி வெளியே சென்றது

குற்றம். தொழிற்சாலையில் நடக்கும் மற்றைய சம்பவங்களோடு ஒப்பிடும்பொழுது இதுவும் ஓர் அற்ப விஷயம்தான். சிவா மஹாத்தயாவினாலும் சமாளிக்க முடியாத ஒரு நிலையாகப் போயிருக்கும் என அவனால் நிச்சயமாக நம்பமுடிந்தது.

வெளியே வந்தான். உடலிலிருந்து தசைப் பகுதியைப் பிய்த்தெடுப்பது போன்ற வேதனைத் துடிப்பு. மனைவி, பிள்ளை குட்டிகள்... வைத்தியசாலை சுனில்? பாவம், அவனுக்கும் இந்தக் கதிதானா? பிரக்ஞையற்ற நிலையிற் கிடக்கும் அப்புலிங்கம்...

பியரத்ன வைத்தியசாலையை நோக்கி நடக்கத் தொடங்கினான். தொழிற்சாலையில் அதிகாரத்தில் உள்ளவர்களின் சதிராட்டங்களில் வெளியேற்றப்பட்ட எத்தனையோ தொழிலாளர்களுள் ஒருவனாகத் தானும் சேர்க்கப்பட்டதில் ஒரு தெம்பு. அவர்களெல்லாம் இன்றைக்குச் சாப்பாட்டுக்கு வழியில்லாமலா இருக்கிறார்கள்? அவர்கள் தெரிந்து வைத்திருக்கிற தொழில் - தெய்வம் போல் மதிக்கிற தொழிலுக்கு அவர்கள் எங்கிருந்தாலும் சாப்பாடு போடுகிற சக்தி இருக்கிறது.

ஆனால், இப்பாரிய தொழிற்சாலையின் முதுகெலும்பாக இருக்கின்ற தொழிலாளர்கள் வெளியேற்றப்படுவதால் தொழிற்சாலைக்கு ஏற்படுகின்ற இழப்பைப் பற்றி யார்தான் கவலைப்படப் போகிறார்கள் என நினைத்துக்கொண்டே நடந்தான்.

*(மல்லிகை, 1979)*

# நன்றியுள்ள மிருகங்கள்



ஒரு நாய்க்காகக் கவலைப்படுகிறவன் யாராவது இந்த உலகத்தில் இருப்பானா? இருப்பான். யார் அந்தப் பெரிய மனிசன்? நான்தான். (பெரிய மனிசன் தான், வயது ஐம்பத்தாறு, ஓய்வு பெற்ற உத்தியோகத்தன்..) எனது கதைக்குப் பிறகு வரலாம். இப்பொழுது இந்த நாயைப் பற்றி! அதாவது இவ்வீட்டில் அடியும் உதையும் பட்டுக் கொண்டு தனது வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கிறதே. அந்த அற்ப சீவனைப் பற்றி.

இந்த நாயைக் குட்டியாக வீட்டிற்குக் கொண்டு வந்ததே நான்தான். அதை நான் கொண்டுவந்து சேர்த்த பொழுது பார்க்க வேண்டுமே! வெள்ளையாக நல்ல சடைக்குட்டி. பார்த்தால்... அப்படியே தூக்கிக்கொள்ள வேண்டும் போலிருக்கும். பிள்ளைகள் (எனது மருமக்கள்) ஒருவர் மாறி ஒருவராக அதைத் தாலாட்டுவார்கள். இரவில் அவர்களின் கட்டிலில் ஏறி அது சொகுசாக உறங்கும். அவ்வளவு செல்லமாக வளர்த்த குட்டி. இப்பொழுது பாவம். உடுக்கத் துணிகூட இல்லாத ஒரு வறிய நோயாளியைப் போலப் படுத்திருக்கிறது.

படுத்திருக்கிறதா? ஏதோ சத்தம்... ஓ! நாய்தான் குளறுகிறது. நன்றாக வேண்டிக் கட்டியிருக்கும்; அது தான் இந்தக் கத்தல் போடுகிறது.

"உஞ்சு! உஞ்சு!" கூப்பிட்டதும் ஒழுங்கான பிள்ளையைப் போல ஓடிவந்து கட்டிலின் கீழ் சுருண்டு படுத்து விடுகிறது.

சாப்பாட்டு நேரமென்றால் இப்படித்தான் அவர்களது வாயைப்பார்த்து வீணீர் வடித்துக் கொண்டிருக்கும். பிறகு என்ன? விறகுக் கட்டையால் குடுத்திருப்பார்கள். தொண்டை கிழியக் கத்தல் போட்டுவிட்டு தலையைப் பதித்து வாலை ஆட்டி மன்னிப்புக் கோரியவாறு அங்கேயே படுத்திருக்கும். (வெட்கம் கெட்ட ஜென்மம்) ஆனால் அது மன்னிக்க முடியாத குற்றமாயிற்றே? பாத்திரத்தில் தண்ணீரைக் கொண்டுவந்து முகத்தில் ஊற்றியிருப்பார்கள். அல்லது நெருப்புக் கொள்ளியால் குறி வைத்திருப்பார்கள். இது, ஒரு காலைத் தூக்கி நொண்டியவாறே எனக்குக் கிட்ட ஓடிவரும் - முறைப்பாடு. நான் அதன் தலையைத் தடவிக் கொடுப்பேன். ஆறுதல் சொன்னதும் அப்படியே கட்டிலின் கீழ் படுத்துவிடும். சிலவேளைகளில் அடிபடுமுன்னரே இது காலைத் தூக்கிக்கொண்டு சாலத்துக்கு ஓடிவருவதைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கும்.

சிறுவயதிலே படித்த 'ஒரு நாயின் சுயசரிதை!' நினைவிற்கு வருகிறது. (கவனியுங்கள்... படித்திருக்கிறேன்!) படிப்பென்றால் ஐயாவுக்குத் தண்ணிபட்ட பாடு. அப்பொழுது பள்ளிக்கூடத்தையும் எங்கள் ஊரையும் ஒரு கலக்குக் கலக்கியவன் நான். ஆனால் கலக்கத் தெரிந்தவர்களுக்குக் கதியில்லை போலும். எனது கல்வியைத் தொடரும் வாய்ப்பில்லாமல் அப்பு தலையைப் போட்ட சங்கதி அடுத்து வருகிறது.

அப்பு பிள்ளைகளைப் பெற்றுப் போட்டார். பொருள் பண்டத்தை சேமித்து வைக்கவில்லை. ஐந்து பெண்களைப் பெற்றால் அரசனும் ஆண்டியாவானாம். எங்கள் தரவளிக்கு இரண்டு போதாதா? அப்புவுக்கு

ஆண்டியாகிற பலன் கிடைக்கவில்லை. ஒருநாள் இருளப்போகின்ற நேரத்தில் கண்களை மூடினார்.

தங்கைகளின் ஒப்பாரி, 'எங்களையெல்லாம் தவிக்கவிட்டுப் போயிட்டீங்களே!' (ஒரு சந்தேகம்; எங்கள் என்பதிற் சுயநலம் தொனிக்கிறதோ?) மூத்தவன் நான் இருக்கிறேன் மலையைப் போல, தவிக்கவிடலாமா? என் சகோதர பாக்கியங்களை ஒவ்வொருத்தனின் கையில் பிடித்துக் கொடுத்துவிட்டுத்தான் எனது பாட்டைப் பார்ப்பதென்று அன்றைக்குச் சபதமெடுத்துக் கொண்டேன். (மகன் தந்தைக்காற்றும் உதவி!)

வேலை தேடுவதற்கு ஒரு படலம் தேவையில்லாமற் போய்விட்டது. எங்கள் நிலைக்கு இரங்கிய தந்தையின் நண்பரொருவர் தனது கடைகளில் கணக்கு எழுதுகிற வேலையைத் தந்தார். பிறகுதான் தெரிந்தது, அது அவரது வருமானத்தைப் பற்றி 'கணக்கு விடுகிற' வேலை என்று! ஆனால் எனது வருமானத்துக்கு அவர் கணக்கு விடத் தொடங்கினார். அவ்வேலையில் இருந்துகொண்டே அரச வெற்றிடங்கள் பலவற்றிற்கு விண்ணப்பித்து காலப்போக்கில் ஓர் அரசாங்க லிகிதராக மாறிவிட்டேன்.

மாப்பிள்ளை தேடும் படலத்தில் இறங்கி, செருப்புத்தேய அலைந்து இரண்டு திருமணங்களையும், ஒப்பேற்றியபொழுது எனது கைகளும், மடியும் வரண்டுவிட்டன. சீர் கொடுத்ததில் கடன் பளு வேறு. வாழ்க்கையின் மிகுதி உழைப்பெல்லாம் அதைச் சீர் செய்யத் தான் சரிவரும் போலிருந்தது. எனது திருமணத்தை நிச்சயிக்கப் பெரியோர்கள் இல்லாத புண்ணியத்தினாலும்

பருவம் கடந்துவிட்ட காரணத்தினாலும் பிரமச்சாரியாகவே வாழ்க்கையைத் தொடரலாம் என முடிவு செய்தேன்.

மீண்டும் நாயின் குளறல். ரோசம் கெட்ட சவம். எப்படி வேண்டிக்கட்டினாலும் புத்தி வராது. நான் கூப்பிட்டபொழுது வந்து கட்டிலின்கீழ் படுத்துவிட்டு எனக்குத் தெரியாமலே நழுவிப்போயிருக்கிறது.

மனசு கேட்கவில்லை, "உஞ்சு! உஞ்சு!" - என்ன இருந்தாலும் அதற்கு நான்தானே துணை! (அல்லது எனக்கு அது துணையோ?)

"மாமாவின்ரை பிறண்ட்தானே? அதுதான் அதுக்கு அடிச்சவுடனை அவருக்குக் கோபம் வருகுது... ஆவாவென்று கூப்பிடுகிறார்." - குசினியிலிருந்து வெளிப்படுகின்ற குரலையடுத்து கலகலச் சிரிப்புகள். மருமக்களின் கேலிப் பேச்சு. 'நக்கல்' எனக்கா அல்லது நாய்க்கா என்று புரியவில்லை.

அது வாழ்ந்த வாழ்வுக்கு இப்படியும் ஒரு நிலை என எழுதப்பட்டிருக்கிறது போலும்! ஊருக்கு அதுதான் ராஜா! சண்டித்தனமாக ஊர்மேயப் போகும். சாப்பாட்டு நேரத்துக்கே வீட்டுக்கு வருவது அருமை. அதற்கு ஊரெல்லாம் சாப்பாடு இருந்தது. இப்பொழுது பாவம். கிழடு தட்டிவிட்டது. அதனாலோ, என்னவோ காது கேட்பதும் குறைவு. எத்தனை தரம் கூப்பிட்டு விட்டேன். "உஞ்சு! உஞ்சு!!" அது அசைந்தால் தானே?

அதற்குள்ளே சனியன் பிடித்த இருமல் வந்து பிடித்துக்கொண்டது. இருமல் பிடித்தால் ஒரு முடிவே இல்லை. நெஞ்சும் தொண்டையும் பச்சை இறைச்சியாக

வலியெடுக்கின்றன. படுக்கையிலே எழுந்திருந்து நெஞ்சை பலமாக அழுத்திப் பார்த்தாலும் சுகமில்லை. இருமலை நிறுத்தும் முயற்சியாகக் காறல் எடுத்துத் துப்பினேன். அது எனது சகோதர பாக்கியத்துக்குப் பிடிக்கவில்லை.

"அண்ணை உதென்ன வேலை செய்யிறாய்? பிள்ளையள் பிளங்கிற இடத்திலை சும்மா சும்மா துப்பாதை!" ('அண்ணை' என அழைத்ததே பெரிய காரியம் எனத் திருப்தியடைந்தேன்... 'அது இது' என அஃறிணையிற் தான் என்னைக் குறிப்பிடுவது வழக்கம்.)

தொண்டையைக் கொஞ்சம் நனைத்தால் சரிவரும் போலிருந்தது. சுடுதண்ணீர் குடித்தால் நல்லது. எனக்காக அந்த அளவுக்குக் கரிசனைப்பட யார் இருக்கிறார்கள்? பச்சைத் தண்ணீராவது குடிக்கலாமென்ற நினைவில் விறாந்தையில் விளையாடிக் கொண்டிருந்த தங்கச்சியின் கடைக்குட்டியைக் கேட்டேன்.

"தம்பி ராசா... இஞ்சை வாணை...! உனக்குப் புண்ணியம் கிடைக்கும்... இந்தப் பேணியிலை கொஞ்சம் தண்ணி எடுத்தாணை" என ஆதரவாகக் கேட்டவாறே எனது பேணியை நீட்டினேன். (எனக்கென ஒரு மூக்குப் பேணி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பணிவன்போடு கதைத்தாற்றான் எனது கோரிக்கைகளுக்குத் தற்செயலான செவிசாய்ப்பாவது இருக்கும். அதை எனது அனுபவத்திற் கண்டிருக்கிறேன். ஆனால், இப்போது அந்த அதிசயமும் நடக்கவில்லை. அவன் துள்ளிக்கொண்டு எழுந்து தனது உடலை முதுகுப்பக்கமாக எனக்குத் திருப்பி 'ருவிஸ்ட்' ஆடுவதுபோல ஒரு நெளிப்புக் காட்டிவிட்டு ஓடினான். இனி இப்படித்தான் போவோர் வருவோரை எல்லாம் இரந்து இரந்து வரம் கிடைக்கும்வரை காத்திருக்க வேண்டும்.

என்னைக் கண்டதும் 'மாமா' என வாய் நிறைய அழைத்துக்கொண்டு வருகின்ற குழந்தைகளா இவர்கள்? முன்னர் அப்படி ஒரு நடப்பு இருந்தது.

அலுவலகம், நண்பர் குழாம், அறைவாழ்க்கை, சாப்பாட்டுக்கடை என வீடுவாசலின்றிச் சுற்றித் திரிந்தாலும் இடைக்கிடை ஒரு மாறுதலுக்காக இங்குதான் வருவேன். எனது மற்ற தங்கைக்குப் பிள்ளைகள் இல்லை. அதனாலோ அல்லது அவளது அந்தக் கவலையைத் தாங்க முடியாமலோ நான் அங்கு செல்வது குறைவு. குழந்தைகள் என்றால் எனக்கு உயிர். எனது சகல பிரச்சினைகளையும் கவலைகளையும் மறக்கடித்து மகிழ்விக்கின்ற சக்தி இந்தப் பிள்ளைகளின் சிரிப்புக்கு இருந்தது. வருகின்றபொழுது விளையாட்டுப் பொருட்கள் தின் பண்டங்கள் என அள்ளிக் கொண்டு வருவேன். அவர்களோடு நானும் ஒரு குழந்தையாகி விடுவேன்.

தங்கச்சிக்கு நான் தேடிவைத்த மாப்பிள்ளையின் உத்தியோகம் பெரிய வருமானம் இல்லாதது. பிள்ளை குட்டிகளோடு அவர்கள் படுகிற கஷ்டத்தைக் காண மனது பொறுக்காமல் அவ்வப்போது பணமாகவும் உதவியிருக்கிறேன். பிள்ளைகளில் இருந்து பெரியவர்கள் வரை என்மேல் உயிரையே வைத்திருந்த இரகசியங்கள் இவைதானா?

மாப்பிள்ளைக்கு என்மேல் அலாதிப் பற்று இருந்தது. 'கொண்ணருக்குச் சாப்பாடு குடுத்தனியோ?' 'கொண்ணரைக் கவனிச்சியோ?' 'அந்தாள் பாவம்...! தனிக்கட்டை. நாங்கள் தான் ஒரு குறையுமில்லாமல் பார்க்கவேணும்.' இந்தக் கரிசனை வார்த்தைகளெல்லாம் என் காதுபடும் பொழுது எப்படி மனசு குளிர்ந்து போகும்!

இப்பொழுது, "இந்தாளுக்கு மதியில்லையோ...? சுருட்டைக் குடிச்சுக் குடிச்சு இருந்த இடத்திலேயே துப்பி வைக்குது... பிள்ளையள் பிளங்கிற இடம்."

"யெஸ்... டடி...! மாமாவாலை பெரிய கரைச்சல் தான்... என்னட்டை வாற பிரண்ட்ஸெல்லாம் கேக்கிறாங்க... அந்த மனிசன் ஆர் என்று. எப்படிச் சமாளிக்கிறதென்றே தெரியவில்லை... இப்பிடிக் கிளீன் இல்லாமல் குப்பை மாதிரிக் கிடந்தால் எங்களுக்குத்தானே வெக்கம்?"

நான் தூக்கி வளர்த்த குழந்தை என் நெஞ்சில் கால்களைப் பதித்து வளர்ந்த பெண், பெற்றோருடைய மூத்த கும(ா)ரி சொல்கிறது! இப்படி வார்த்தைகளால் நெஞ்சில் அடிக்கிற வலி இயற்கையாக நெஞ்சைப் பிய்த்துக்கொண்டு வருகிற இருமலைவிட மோசமானது.

குளித்து முழுகி துப்புரவாக இருக்க வேண்டுமென்ற விருப்பம் எனக்கு இல்லையோ? மாற்றி உடுக்கத் துணிகள் வேண்டுமே? குளிர் நீரிற்கு உடல் இடம் தர மறுக்கிறது. நோய் முற்றினால் மருந்து வேண்டித்தரவும், கவனிக்கவும் மனுசரில்லை. இருமல் வரும்பொழுது ஒதுக்காகப் போய்த் துப்பலாமென்றால் இருந்த இடத்தைவிட்டு எழுந்து நடப்பதே கொல்லக் கொண்டு போவது போலிருக்கிறது.

"போதாக்குறைக்கு அந்தக் குட்டைநாயையும் கூப்பிட்டுத் தன்னோடை வைச்சிருக்கு. எப்படிச் சொல்லியும் 'அது'க்குப் புத்தி வருகுதில்லை." என் சகோதர பாக்கியம்தான்.

"என்ன சவத்துக்கு வந்து இஞ்சை கிடந்து இழுபடுகுது... எங்கையாவது கோயில்லை... மடங்களிலை... போய்க் கிடக்க வேண்டியதுதானே..." இது அவர்.

"டடி... ஒன்று செய்தாலென்ன...? வீட்டுக்குப் பின்பக்கமாய் மாமாவுக்கு ஒரு கொட்டில் போட்டுக் குடுத்தால்... நாயும் அவரோடை போயிடும் தானே?"

"அது நல்ல யோசினைதான்!"

நாயின் அவலமான அலறல் கேட்கிறது.

அப்பிடியும் நடந்து போய்விடுமோ? பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டு விட்டது. இனி, ஏகமானதாக நிறைவேற்றியும் விடுவார்கள். எனது பிரச்சினையில் கரிசனைப் படாமல் அவர்கள் எல்லோருமே கையை உயர்த்துவதற்குத் தயார்தான். என்மூலம் அவர்களது வாழ்க்கை வளம் பெற்றது என்பதை எங்கே நினைத்துப் பார்க்கப் போகிறார்கள்? பெரும்பான்மையான மனித சுபாவம்! இப்பொழுது நான் படுத்திருக்கும் உள் விறாந்தையிலேயே இரவில் பனித்தொல்லை தாங்க முடியாது கஷ்டப்படுகிறேன். கோடியிலே ஒரு கொட்டிலென்றால் எப்படி இருக்கும்? நாலு பக்கமும் அடைப்புகள் இல்லாத ஒரு கூடாரமாக இருக்குமோ? எப்படியாவது போகட்டும். அந்தப் பிரச்சினையை இப்போதைக்கு விடுவோம்.

ஒரு விஷயம்! என்னைப் பற்றிய பிரச்சினைகளை ஓரளவு எனக்கும் கேட்கக்கூடியதாக அவர்கள் கதைப்பதிலிருந்து அதைக் கேட்டென்றாலும் எங்கேயாவது போய்த் தொலையட்டும் எனக் கருதுகிறார்களோ என்ற சந்தேகமும் எழுகிறது. அல்லது எல்லாவற்றையுமே இப்படிக் கரவாக நினைப்பது, நான் தனிமனிதன் என்ற தாழ்வு மனப்பான்மையினாலோ? எப்படியாயினும் மற்றவர்களுக்குத் தொல்லை கொடுக்காமல்

வீட்டைவிட்டுப் போய்விடுவதுதான் சரி என முடிவு கட்டினேன்.

பிள்ளைகள் பாடசாலைக்குச் சென்றபின்னர் கோயிலுக்குப் போய்வருவதாகத் தங்கச்சியிடம் கூறிவிட்டு எனது கைத்தடியைத் துணைக்கு எடுத்துக்கொண்டு நடக்கத் தொடங்கினேன். நாய் வாசல்வரை வந்து ஊளையிட்டு அழுதது. கொஞ்ச தூரம் பாதையிலும் ஓடிவந்தது. பிறகு அதுவும் போய்விட்டது!

கோயில் வாசலில் இரண்டு நாட்கள் தவம். வயிற்றுப் பாட்டுக்காக மற்றவனிடம் கை நீட்ட வேண்டிய நிலை இங்கும் இருந்தது. ஆனால் இது வீட்டு நிலைமையை விடக் கேவலம். போகிறவனெல்லாம் ஒரு மாதிரியாகப் பார்க்கிறான். "இந்த ஆளுக்கு என்ன குறை...? உழைத்துச் சாப்பிட முடியாதா...? கொள்ளையா பிடிச்சிட்டுது?" நியாயமான கேள்வி! எனது உருப்படியைப் பார்த்தால் யாரும் அப்படித்தான் சொல்லுவான். ஆனால் உடல் நோய் இடம் தராத சங்கதி தெரியவராது. மனதிலே தனிமையின் பயம் படிப்படியாக படபடக்கத் தொடங்கியது. இதற்குள்ளே ஒரு காணக்கிடைக்காத அற்புதக் காட்சியும் கிடைத்தது.

ஒரு வயோதிகத் தம்பதி கோயிலுக்கு வந்திருந்தனர். கோயில் சந்நிதானத்தில் சடுதியாக அந்த ஆளுக்கு மார்புவலி வந்துவிட்டது. நெஞ்சைப் பிடித்துக் கொண்டு நிலத்தில் விழுந்துவிட்டான். அந்த நேரத்தில் உதவிக்கும் யாருமில்லை. கிழவி பட்டுவிட்ட பாட்டைப் பார்க்க வேண்டுமே! செய்வதறியாத திகைப்பு, தவிப்பு. கணவனைத் தனது மடியிலே தூக்கி அணைத்து மார்பை வருடத்

தொடங்கினாள். அவளது கண்ணீர் அவனது உயிரை மீட்டுக் கொண்டிருந்தது. என்ன அற்புதம்!

எனது நெஞ்சு நிறைந்துவிட்டது, ஒரு மனிதனுக்கு இதுதான் வேண்டும். இப்படி ஒரு துணை. நான் விட்ட மாபெரும் தவறு மனதிலே பட்டது. ஒரு துணையைத் தேடாமல் விட்டுவிட்டேன்! அதற்கு ஈடான ஆதரவு வேறு எங்கே இருக்கிறது? காலம் கடந்துதானே எனக்கும் இந்த ஞானம் பிறந்திருக்கிறது. ஒருவருக்கு ஒருவர் துணையாக வாழ்வதற்கு ஒன்றில் ஒன்று தங்கியிருக்கும் இயல்புள்ள இரண்டு உள்ளங்கள் தேவைப்படுகிறது. இப்பொழுது எனது வயது ஒரு பிரச்சினையல்ல. பெண்ணைத் தரப் போகிறவர்களுக்கும் அது ஒரு பிரச்சினையாக இருக்காது - நான் ஒரு உத்தியோக்காரனாக இருந்திருந்தால்! மூன்று வருடங்களுக்கு முன்னராவது இந்த எண்ணம் தோன்றியிருந்தால் எனது உத்தியோகத்தைக் காட்டியே கலியாணச் சந்தையில் ஒரு கலக்குக் கலக்கியிருப்பேன்! உடல் ஒத்துழைக்காத காரணத்துக்காக அப்பொழுது வேலையிலிருந்து ஒய்வு பெற்றுவிட்டதுதான் நான் செய்த மடத்தனம். இனிக் கவலைப்பட்டும் என்ன பயன்?

என்னைப் புறக்கணிப்பது போலத் தோன்றிய தங்கச்சியின் செய்கைகளும் இப்பொழுது அவ்வளவு பாரதூரமானதாகத் தெரியவில்லை. அவளால் அப்படித் தான் இருக்கமுடியும். அவளுக்கு அவள் கணவனும் குழந்தைகளும்தானே உலகம்? இப்படி யாரும் இல்லாத இடத்தில் இருப்பதைவிட வீட்டிலே போய் ஏச்சுப் பேச்சுக்களைப் பொருட்படுத்தாமல் எப்படியாவது கிடப்பது மேல் எனத் தோன்றியது.

மீண்டும் பழைய குருடனாகக் கதவைத் திறந்து கொண்டு வீட்டுக்குள் நுழைந்தேன். முதலில் வரவேற்றது நாய்தான்! அதன் மகிழ்ச்சி! ஏதோ பல நாட்களுக்குப் பின் தூரப்பயணத்தால் வந்தவனை வரவேற்கிற குதூகலம். வாலை ஆட்டித் துள்ளித்துள்ளி உடலிற் பாய்ந்து கால்களால் தடவி, ஊளையிட்டு அழுது வீட்டுக்குள் அழைத்து வந்தது. "எங்கையண்ணை ரெண்டு நாட்களாய் போயிருந்தனீ?" என்று தங்கச்சி கேட்டாள். அதுகூட மாதாமாதம் பென்சனாக எனக்குக் கிடைக்கிற சொற்ப தொகையைக் கருத்திற் கொண்ட கரிசனையோ?

கட்டிலில் விழுந்தேன். நாயும் பக்கத்தில் சுருண்டு படுத்துக்கொண்டது.

சில நாட்களுக்குள்ளேயே பழைய பிரச்சினை தொடங்கியது - தூது வந்தது மூத்த மருமகள். ஆதரவான சிரிப்பு. "மாமா, ஒன்று சொல்லுறன் கோபிக்காதையுங்கோ.. இந்த நாயை எப்பிடிக் கலைச்சாலும் போகுதே இல்லை... உங்களை விடமாட்டன் எண்டு நிக்குது... நீங்கள் படுத்திருக்கிறபடியாத்தான் நெடுகலும் விறாந்தைக்கு வருகுது. என்ரை பிரண்ட்ஸ் வாற நேரமெல்லாம்... இந்தக் குட்டை நாயைப் பார்த்துப் பகிடி பண்ணுதுகள்... எனக்கு வெக்கமாயிருக்கு... ஆனபடியால் மாமா... கோபிக்காதையுங்கோ, நாளையிலை இருந்து... கோடிப் பக்கம் ஒரு கொட்டில் போட்டிருக்கிறம்... அதிலை போய்ப் படுங்கோ!"

"சரியம்மா...! என்னாலை உங்களுக்குத் தொல்லை வேண்டாம்... நான் போறன்!" என்று மாத்திரம் சொன்னேன் அழாக்குறையாக.

"இல்லை மாமா...! உங்களுக்காக இல்லை... இந்த நாய்க்காகத்தான்..."

இரவு முழுவதும் உறக்கமே இல்லை. இந்த இடத்தைவிட்டுப் போவது பெரிய கவலையாக இருந்தது.

இப்படி விறாந்தையில் கிடந்தால் பிள்ளைகளின் துடியாட்டங்களைப் பார்த்துக்கொண்டே 'பிராக்காக'க் கிடக்கலாம். கோடிக்குப் போய்விட்டால் ஒரே தனிமைதானே? இப்பொழுது இருக்கிற ஓரளவு கவனிப்பாவது அற்றுப் போய்விடுமோ என்னவோ?

காலைச் சாப்பாட்டு நேரம் முடிந்த பின்னர் பிள்ளைகளுக்கும் விடுமுறை நாளாதலால் எல்லோருமாகச் சேர்ந்து எங்களை அப்புறப்படுத்துகிற பணியில் இறங்கினார்கள். முதலில் எனது பழைய கட்டிலைக் கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும். இதற்குள் "எங்கை நாயின்ரை சிலமனைக் காணவில்லை?" என்ற பேச்சும் அடிபட்டது. உண்மைதான், காலையிலிருந்தே நாயைக் காணவில்லை. எங்கேயாவது ஓடியிருக்குமோ?

என்னை இறக்கித் திண்ணையில் இருக்கச் சொல்லி விட்டு கட்டிலைத் தூக்கினார்கள். அங்கே, அது பாவம் செத்துப் போய்க் கிடக்கிறது!

அப்பாடா தொல்லை விட்டது போ! இதுதான் மனிச மனம்! நாய் செத்துப் போய் கிடப்பதைக் கண்டதும் தோன்றிய இரக்கத்தையும் மீறிக்கொண்டு ஒரு நிம்மதி தோன்றியதே. அது இனி என்னை அப்புறப்படுத்த மாட்டார்கள் என்ற சந்தோஷம்தான். இந்தப் புத்தி மனிசனுக்கு இல்லாமல் வேறு எதற்கு வரும்?

எப்படியாயினும் கோடிக்குப் போக வேண்டிய அவசியம் இல்லாமற் போய்விட்டதே - அது பெரிய காரியம்தான்! ஆனால் அதுகூட தப்புக் கணக்காகப் போய்விட்டது. நாயின் சடலத்தை அப்புறப்படுத்தப் போகிறார்கள் என நினைத்தேன். அதற்கு முதலே எனது கயிற்றுக் கட்டிலைத் தூக்கிக்கொண்டு கோடிப் பக்கமாகப் போகிறார்கள்! அடுத்தது நிச்சயமாக நானாகத்தான் இருக்கும்.

*(சிரித்திரன், 1979)*



# கனிகின்ற பருவத்தில்



காத்திருத்தல் என்பது அவனைப் பொறுத்தவரை பொறுக்க முடியாத விஷயம். ஆனால் சில வேளைகளில் மனதைச் சோதிப்பதுபோல, தவிர்க்க முடியாத காத்திருத்தல்கள் ஏற்பட்டு விடுகின்றன. அப்பொழுதெல்லாம் தனது அப்போதைய தேவையை மறந்து இயற்கையோடு ஒன்றிப்போய் மனதை இதப்படுத்திக் கொள்வான்.

மதியம் கொழும்பிலிருந்து கிளம்புகிற புகையிரதம், மழை காரணத்தினாற்போலும் வழக்கத்தைவிடத் தாமதமாகவே அனுராதபுரம் வந்து சேர்ந்தது. அதுவரை காத்திருந்தவர்கள் சொற்பநேர இடத்துக்காக முண்டியடித்து இடித்துக்கொண்டு ஏறினார்கள். அந்த அமளி முடிந்தபிறகு அவன் ஏறினான். இருக்க இடமில்லாததால் நின்றான். வெளியே மழை பெய்து கொண்டிருந்தாலும் சனவெக்கையில் வியர்க்கத் தொடங்கியது. வடக்கிலிருந்து கொழும்பு செல்கிற புகையிரதமும் தாமதமாகவே வருகிறதாம். 'குறோசிங்' கிற்காக இது காத்திருக்க வேண்டும். வியர்வையையும் சனவெக்கையையும் சகித்துக் கொள்கிற ஆற்றலில்லாதவனாய் இறங்கி மேடைக்கு வந்தான்.

மழையைக் கண்டு சுவரோரமாக ஒதுங்கியிருக்கிற மனிதர்களின் அடக்கத்தையும், ரெயினிலிருந்து குதித்து தண்ணீர் எடுப்பதற்காக போத்தலோடு ஓடுகிற சிலரையும் பார்த்துக்கொண்டு நின்றான். பின்னர் தற்செயலாகத் திரும்பியபொழுது புகையிரதத்துள்ளிருந்து அவள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான்.

ஓர் அழகிய ரோசாமலரைப் போல அவளது முகம் தோற்றமளித்தது. அவன் கவனிப்பதைக் கண்டதும் அவள்

பார்வையைத் திருப்பினாள் - அவளது தடுமாற்றத்திலிருந்து- அவள் தன்னைச் சற்று நேரமாகவே பார்த்துக் கொண்டிருந்திருக்கிறாள் என நினைத்தான். எதற்காக அப்படிப் பார்த்திருக்க வேண்டும் என எண்ணியபொழுது ஒரு வேளை மீண்டும் பார்ப்பாளோ என்ற சபலமும் தோன்றியது. அவள் திரும்பவும் பார்த்தாள். தான் இன்னும் அவ்ளையே பார்த்துக் கொண்டிருக்கும் ரகசியத்தை அவள் அறியக்கூடாது என அவசரமாக வேறு பக்கம் திரும்பினான்.

மழையில் நனைந்துகொண்டு நிற்கிற செம்மறியாட்டைப் போல புகையிரதம் சூடு சுரணையில்லாமல் நிற்கிறது. மழைநீர் கூரையிலிருந்து வழிந்து ரெயிலின் மேல் விழுந்து சிறிய பூச்சிகளைப் போலத் தெறித்துப் பறக்கிறது. பூட்டப்பட்ட கண்ணாடியில் முத்துமணிகளாக உருள்கிறது... தூரத்தே உரத்துப் பெய்து கொண்டு ஒரே புகைமூட்டமாகத் தெரிகிறது. ஆவியாக மேலே செல்கிற நீர் ஒரு 'ஷவரை'த் திறந்துவிட விழுகிற தூறல்களாகக் கொட்டும் அழகை வியப்பவன்போல வானத்தையே பார்த்துக் கொண்டு நின்றான்.

அப்படி நின்றபோதும், அவள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பாள் என அவனது மனது கற்பனை செய்தது. அந்த எதிர்பார்ப்போடு திரும்பினான். ஆனால் அவள் பார்க்காமலே இருந்தாள். தன்னோடு இருப்பவர்களோடு கதைத்து எதற்காகவோ சிரித்தவாறு ஒருமுறை திரும்பினாள். அந்தக்கணமே அவனுக்கு ஏமாற்றத்தை அளித்து மறுபக்கம் திரும்பினாள். தன்னைப் பார்ப்பதற்காகவே திரும்பிய அவள், கூச்சத்தினாற்தான் பார்வையை மீட்டிருக்கக்கூடும் என அவன் நினைத்தான். அதற்குப் பிறகு நெடுநேரமாகவே அவள் பார்க்கவில்லை. ஆனால் நெற்றியில் விழுகிற

கேசங்களை ஒதுக்கி, தன்னை அழகுபடுத்துகிற முயற்சியில் அவள் கூச்சத்தோடு ஈடுபட்டிருந்தாள். தனது பார்வையைத் தரிசித்த பின்னர் தான் அவளிடத்தில் இந்த மாற்றம் ஏற்பட்டிருக்கிறது என அவன் திருப்தியடைந்தான். அந்தப் பெட்டியிலேயே தனது பயணப் பையை வைத்துவிட்டு இறங்கிய புண்ணியத்தை நினைக்க இப்பொழுது மகிழ்ச்சியேற்பட்டது. இனி, யாழ்ப்பாணம் போகும்வரை பார்த்துக்கொண்டே போகலாம்!

அவள் நெடுநேரமாகப் பார்க்காமலிருப்பதால் கர்வக்காரியாக இருப்பாளோ என எண்ணினான். அல்லது தானே வீணாக எதையாவது கற்பனைசெய்து மனதை அலட்டிக் கொள்கிறேனோ என்ற சமசியமும் தோன்றியது. அவசரமாக உள்ளே ஏறி, அவளது முகத்தைப் பார்த்து ஒரு பதில் அறிந்துவிட வேண்டுமென்ற துடிப்பும் ஏற்பட்டது. அவள் இனிப் பார்ப்பாளோ அல்லது பார்க்காமலே விட்டுவிடுவாளோ எனக் குழப்பமடைந்தான். பார்க்கவே மாட்டாள் என்ற இழப்பை மனது ஏற்க மறுத்தது.

காங்கேசன் துறையிலிருந்து வருகிற புகையிரதம் இன்னும் சில நிமிடங்களில் மேடைக்கு வரும் என அறிவிக்கப்பட்டபொழுது 'அப்பாடா' எனப் பெரிய நிம்மதி தோன்றியது அவனுக்கு. இனி இந்தப் புகையிரதமும் புறப்படும். உள்ளே ஏறி அவளது முகத்துக்கு நேரே நின்று கொண்டான்.

அவள் தன்னைக் கள்ளமாகப் பார்ப்பதைக் கவனித்தான். அந்தக் கள்ளமும், அழகும், அவளது நாணமும் அவன் முன்னர் கண்டிராத விஷயங்கள்! தனது

மனசை அசைக்கிற மாதிரி இப்படியொரு சக்தி ஒரு சாதாரண பெண்ணிடம் இருக்கிறதே என ஆச்சரியப்பட்டான். மற்றவர்களின் கண்களில் மண்ணைத் தூவிக்கொண்டு அவனும் அடிக்கடி அவளைப் பார்த்தான். சொல்லி வைத்ததுபோல சந்திக்கிற கணங்களில் ஒரு பரவசம் தோன்றியது.

அவளுக்குப் பக்கத்தில் ஓர் இளைஞன் இருந்தான். அவளது சகோதரனாக இருக்கலாம். முன் இருக்கையில் அவளது பாட்டியும் இரு சிறுவர்களும் இருந்தனர். பாட்டி, எதற்காகவோ அவளை 'சாந்தா!' என அழைத்தாள். அவளது பெயர் அவனை மிகவும் கவர்ந்தது. அவளைப் போலவே அமைதியான பெயர். 'சாந்தா' என மனதுக்குள் அழுத்தமாகச் சொல்லிப் பார்த்தான். ஒரு வீட்டில் அவளோடு வாழ்க்கை நடத்துவது போலவும் அலுவலகம் முடிந்து களைப்பாக வருகிற தன்னை அன்பாக எதிர்பார்த்திருப்பது போலவும் கற்பனை வளர்ந்தது. 'ஓ எனது மனைவி சாந்தா!' என இதயம் நிறைவு கொள்ள, அவன் விழித்திருந்த நிலையிலேயே அந்த இன்பக் கனவில் மூழ்கிப் போனான். அப்படியே அவளது கையைப் பிடித்துக் கொண்டு வீட்டுக்குப் போவதாக அந்தக் கனவு சுபமடைந்தது...

சே! இதென்ன விசர்க்கதை? கல்யாணம் என்றால் சும்மாவா? அவனுக்கு இப்பொழுது என்ன வயசாகிறது? இருபத்தைந்து வயசு, ஒரு வயசா? இந்த வயசிலேயே ஒருத்தியை இழுத்துக்கொண்டு வீட்டுக்குப் போனால் அப்பா பொல்லுத் தூக்கிக் கொண்டு வரமாட்டாரா?

அவனுக்கு அக்கா ஒருத்தியும் இருக்கிறாள் - இருபத்தொன்பது வயசில். அவளும் உத்தியோகம் பார்க்கிறாள். குடும்ப நிலையைச் சீர் செய்வதற்கு அக்காவும் உழைக்க வேண்டியிருக்கிறது. அப்பாவும் கஷ்டப்பட்டு உழைத்தவர்தான். தன் குழந்தைகளை கஷ்டமில்லாமல் வளர்த்தெடுப்பதற்கு அவரது கஷ்டமான உழைப்பும் போதவில்லை. போதாததற்கு கடன், கடன், கடன். பின்னர் அன்றாடச் செலவுகளுக்கு ஈடு கொடுத்துக் கொண்டே ஈடு வைத்த வீடு வளவை மீட்க முயன்றால்... ப்ளஸ் வட்டி, வட்டி, வட்டி. அவரது சக்திக்கு அப்பாலே சென்றது கடன்சுமை. பிள்ளையை உத்தியோகத்துக்கு அனுப்பினார். மன வேதனைப்பட்டுக் கொண்டே அனுப்பினார். அவள் குடும்ப பாரத்தை ஓரளவாவது குறைத்து, தனக்கு அடுத்து வருபவளின் கையில் ஒப்படைத்து ஒதுங்குவதானால் இன்னும் ஐந்தாறு வருடங்களாவது செல்ல வேண்டும்.

அதற்குப் பிறகு, 'அழகும் நற்குணமும், பொருந்திய முப்பத்தைந்து வயது நிரம்பிய அரசாங்க உத்தியோகத்தில் மாதம் எண்ணூறு ரூபாய் வருமானம் பெறும் பெண்ணுக்கு மணமகன் தேவை. மணமகன் குடிப்பழக்கம் அற்றவராக இருத்தல் வேண்டும்' என ஒரு விளம்பரம். சீதன விவரத்தை அறிந்தோ, அறியாமலோ குறிப்பிடாமல் விடுவது விரும்பத்தக்கது. பிறகு தொடர்பு கொள்பவர்களோடு பேரம் பேசிப் பார்க்கலாம்.

ஆனால் அவளை மணக்க வரப்போகிறவனுக்கு அவளது சரித்திரத்தில் அக்கறை ஏற்பட்டுவிடும். அவள் பிறந்து வளர்ந்து போய் வந்த இடங்களிலெல்லாம் புலனாய்வு செய்து - அங்கெல்லாம் மற்றவர்களின்

வாழ்க்கையில் குழி பறிக்கவென்று நாலுபேர் இருக்காமலா போய்விடுவார்கள்? அற்லீஸ்ட், அவள் தன்னைப் பார்த்து சிரிப்பதில்லை, கதைப்பதில்லை என்ற மனக்குறையோடு ஒருவன் அவளது அலுவலகத்தில் இல்லாமலா போய் விடுவான்?

ஆக, இந்தப் பெண்ணைக் கட்டிக் கொள்வதற்கு வருகிறவன் இப்பொழுது தயாராயில்லை. இவர்களுக்கு ஒருத்தி சொந்தமாகத் தேவைப்படும்பொழுது அழகும் நற்குணமும் நிறைந்தவளாகத் தேவைப்படுகிறது! தாங்கள் வழியில் கைவிட்டு வந்த ஒருத்தி யாரையோ கைப்பிடிக்கப் போவதைப்போல தங்களையும் இன்னொருத்தி பற்றிக் கொண்டுவிடுவாள் என்ற பயமோ? ஏன், நிர்ணயிக்கிற விலையிலே தீர்க்கப்படுவதை மனது ஒப்புக் கொள்ளவில்லை.

முள்ளில் நடப்பதுபோல எவ்வளவு அவதானமாகப் பெண்கள் வாழ்கிறார்கள்! ஒருவனைப் பார்த்து வஞ்சகமில்லாமற் சிரித்துப் பழகிய (குற்றத்)திற்காகவே அவ்வாழ்க்கை பறிபோய்விடுகிறது. அவளது எதிர்பார்ப்பு களெல்லாம் ஏமாற்றமாகிவிட 'மணமகன் குடிப்பழக்கம் அற்றவராக இருத்தல் வேண்டும்' என்பதைத் 'தவிர்த்து விட்டு தாரமிழந்தவரும் விண்ணப்பிக்கலாம்' என்பதைப் புகுத்தி இன்னொரு விளம்பரம்! இது, அவள் தந்தைக்கோ, தாய்க்கோ தாங்கள் கண்மூடுவதற்கு முன் அவளது (திரு)மணத்தைப் பார்த்துவிட வேண்டுமென ஆசையேற் பட்டதனால் வந்த வினை.

அவர்களது ஆசையை நிறைவேற்றுவதற்காக அவள் இனி யாராவது ஒருத்தனுக்குக் கழுத்தை நீட்டியாக வேண்டும். அவள் இவ்வளவு காலமும் தன் வாழ்வில் கட்டிக்

காத்துவந்த இலட்சியக் கனவுகளைச் சிதைத்து எப்படியாவது இருக்கிற ஒருவனுக்கு இனித் தன் வாழ்வை அடிமைப்படுத்த வேண்டும். அவள் உழைப்பவள், படித்தவள், அழகி, பண்பானவள் என்ற காரணங்களுக்காகவாவது விட்டுக்கொடுப்பானா - வரப்போகிற தியாகி?

அவளது இரக்கமான தந்தை ஒன்றுக்கும் வழியில்லாமல் இன்னொரு கடனைப் (அற வட்டியில்) படப்போகிறார். அந்தக் குடும்பத்தில் இந்தக் கதை தொடரும்...

இப்படி ஓர் அப்பாவி அக்காவின் வாழ்க்கை மாத்திரமா பாழாகிப் போகிறது என அவன் நினைத்துப் பார்க்காத நாட்களே இல்லை. தனது வாழ்க்கைக் காலத்தில் அவன் சென்றுவந்த இடங்களில், பழகிய குடும்பங்களில், அலுவலகத்தில் எல்லாம் காணநேர்ந்த பெருமூச்சோடு நிச்சயமற்ற வாழ்க்கை வாழும் பெண்களைப் பற்றி தனித்தனியே வெவ்வேறு நேரங்களில் சிந்தித்துப் பார்த்திருக்கிறான். பெண்களின் வாழ்க்கைக்கு இப்படி ஒரு சமூக நியதி ஏற்பட்டுவிட்டதை எண்ணும்பொழுது மனிதர்கள் மீது பொல்லாத வெறுப்புத் தோன்றும். பிறகு, யார் மீது குறிப்பாகக் கோபப்படுவது என்று தெரியாமற் குழப்பமடைவான். இந்த நியதிகளையெல்லாம் உடைத்தெறிந்து ஒவ்வொரு பெண்களுக்கும் நியாயமான வாழ்க்கையை எப்படி உறுதி செய்து கொள்ளலாம் என நீண்ட நேரங்களாகப் பல நாட்கள் சிந்தித்து ஒரு தீர்வும் புத்திக்கு எட்டாமல் போகவே தன் மீதும் சினங்கொண்டிருக்கிறான். தன்னைச் சார்ந்த ஆண் வர்க்கத்தின் இந்த முறைகேடான செயல் அவர்களுக்குப்

பெருமையையல்ல பெரிய தலைகுனிவையே ஏற்படுத்தியிருக்கிறது எனப் பொருமிக் கொள்வான்.

இதற்கெல்லாம் பிராயச்சித்தமாக தானே ஒருத்தியை இலவசமாகக் கையைப் பிடித்துக்கொண்டு போவது ஒரு தீர்வாக இருக்க முடியுமா எனச் சிந்தித்திருக்கிறான். அதை ஒரு வழிகாட்டலாகக் கருதிக்கொண்டு எத்தனைபேர் வருவதற்குத் துணிவார்கள்? 'எவளோ ஒருத்தியைக் கிளப்பிக் கொண்டு ஓடிவிட்டான்' என்றுதானே வாய்கிழியக் கதைக்கப் போகிறார்கள். அப்படி ஒருத்திக்கு வாழ்வளிப்பது... (இல்லை... ஒருத்தியிடம் வாழ்வு பெறுவது என்பதே சரி) அவனைப் பொறுத்தவரை தான் சுயநலங்கொண்டு செய்யப் போகிற ஒரு செய்கையாகவே பட்டது. பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக்கொள்ள, தன்னை விடுவித்துக்கொண்டு மனதைச் சமாதானப்படுத்தி வாழத்தானா தானும் விரும்புகிறேன்? அப்படியானால் என்னதான் செய்வது? இந்தக் கேள்வியைப் பலமுறை தன்னிடமே கேட்டுப் பார்த்துவிட்டான். தன் நண்பர்களிடமெல்லாம் இவ்விஷயத்தை விவாதித்துப் பார்த்தும் இருக்கிறான். சுமாரானவர்களெல்லாம் முகஸ்துதிக்காக எதையாவது சார்பாகக் கதைத்துவிட்டு, தான் இல்லாத இடத்தில் 'அவனுக்கு விசர்' எனச்சொல்லி விட்டுப்போகிற துரோகத்தனத்தையும் எண்ணிப் பலமுறை மனம் வெதும்பியிருக்கிறான்.

ஆனால், தான் ஒரு விசர்த்தனமான முடிவைத்தான் எடுத்திருக்கிறேன் என்பது மனதை ஆக்கிரமிக்கும் பொழுது அவனிடத்தில் ஒரு புன்னகையும் வைராக்கியமும் தோன்றும். தான் கல்யாணம் செய்துகொள்ளாமல் பிரமச்சாரியாகவே இருப்பது என்பது அவனது முடிவு. ஆண்வர்க்கத்தின்

சுயநலத்திற்காக, அவன் இப்படித் தன்னை வாட்டுவதற்கு ரெடி!

வவுனியா புகையிரத நிலையத்தில் ஒருவர் இறங்கியதால் சாந்தா அமர்ந்திருக்கும் இருக்கைக்கு முன் இருக்கையில் ஓர் இடம் கிடைத்தது. இனி அவளைப் பார்க்கவே கூடாது என்ற தீர்மானத்துடன் அவ்விடத்தில் அமர்ந்து கொண்டான் அவன்.

அவளை மறப்பதற்காக சிறுவர்களின் துடினமான விளையாட்டுகளில் கவனத்தைச் செலுத்தினான். கண், அவளுக்குப் பக்கத்தில் இருக்கின்ற இளைஞனை மேயச் சென்றது.

அந்த இளைஞன் மௌனமாக இருந்தான். புகையிரதத்தின் குலுக்கத்தோடு... அவனது உடல் அவளோடு ஸ்பரிக்கிறதா? அல்லது அது தற்செயலாகத்தான் சம்பவிக்கிறதா என இவன் தலையைப் போட்டு உடைத்தான். அவனை அவளது சகோதரனாக இருக்கும் என கருதியிருந்த அவனுக்கு 'அப்படி இருக்க முடியாதோ?' என்ற சந்தேகமும் தோன்றியது. அவன் வேறு யாரோவாக இருந்தால், அவள் அனுமதிக்கின்ற ஸ்பரிசத்தை இவனது மனது தாங்கிக் கொள்ள முடியாமல் துணுக்குற்றது. அல்லது அவ(ர்க)ள் அறியாமலே நிகழ்கிற ஒரு தற்செயல் நிகழ்வுக்கு ஒன்றுமேயில்லாத ஒரு விஷயத்துக்கு, தானே விரசமாகக் கற்பனை செய்வதாக எண்ணினான். இதற்காக, அவன் தன்னை நினைத்து வெட்கமுமடைந்தான். ஒரு பெண்ணைச் சந்தேகிக்கிற, குறைபடுகிற வர்க்கத்தைத்தானே தானும் சேர்ந்திருக்கிறேன் என எண்ணிக் குறுகிப் போனான்.

அடுத்த புகையிரத நிலையத்தில் அந்த இளைஞன் ஒன்றுமே பேசாமல் இறங்கிப் போனான். அட, அவன் வேறு யாரோதான்!

இவன் மிகக் கவனமாக அவளோடு தனது கால்கள் தட்டுப்படாமல் ஒதுக்கமாக இருந்தான். ஆரம்பத்திலிருந்தே இவ்விஷயத்தில் கண்ணும் கருத்துமாகத்தான் இருந்தான். ஒரு தற்செயலான நிகழ்வுக்கேனும் அவள் தன்னை மட்டமாகக் கணித்துவிடக் கூடாது என்ற பயம் மனசிலிருந்தது.

ரெயில் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தது. சிறுவர்கள் குறும்புத்தனமாக விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களது விளையாட்டிற்கு அவள் கவனிக்கும்படியாக அவன் சிரித்தான். அவளைக் கவரவேண்டுமென்பதற்காக தேவையில்லாத நேரங்களிலும் சிரிக்க வேண்டியிருந்தது. அவனுக்கு அவளோடு கதைக்க வேண்டும் போலவுமிருந்தது.

பாட்டியோடு முதலிற் கதைத்து, சிறுவர்களோடு கதைத்து, அவர்களிடம் ஒரு நட்புரிமையை ஏற்படுத்தினான். ரொபி விற்கிற சிறுவன் வந்தபொழுது வேண்டி சிறுவர்களுக்குக் கொடுத்து அவளிடமும் (வேண்டுவாளோ, மாட்டாளோ? நீட்டியபொழுது அவள் 'வெடுக்'கென மறுபக்கம் திரும்பினாள் - 'என்ன பெண் இவள்?' - அவளது அலட்சியமான புறக்கணிப்பு இதயத்தைச் சூடாக வருத்தியது. வாழ்க்கையில் பெரிய விரக்தி அடைந்துவிட்ட ஒருவனைப் போல அவன் மனது சோர்வடைந்தது. நெடுநேரம் அவளைப் பார்க்காமலிருக்கிற வைராக்கியமும் ஏற்பட்டது. பிறகு அவள் பக்கம் திரும்ப,

அப்பொழுதெல்லாம் அவள் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை கவனித்தான். அவளது பார்வை தனது செயலுக்காக வருந்தி மன்னிப்புக் கேட்பதாக அவன் கருதிக் கொண்டான். அதையெல்லாம் அலட்சியமாகப் புறக்கணித்துக்கொண்டே மறுபக்கம் மறுபக்கமாகத் திரும்பினான். தனது அலட்சியம் அவளிடம் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தும் என நினைத்துக்கொண்டு பார்க்கிறபொழுது, 'என்னை மன்னித்து விடுங்கள்' என அவள் மன்றாட்டமாகக் கேட்பது போலிருந்தது. அந்தப் பார்வை அவன் மனதை அசைத்தது. அவள்பால் அவனுக்கு இரக்கம் ஏற்பட்டது. அதற்கு மேலும் அவளை வருத்த விரும்பாமல் அவளைப் பார்த்து ஒரு புன்முறுவல் பூத்தான்.

அவள் சிரிக்காமல் இருந்தாள். ஆனால் கோபப்படாமல் அந்தச் சிரிப்புக்குப் பதிலாகத் தலையைக் குனிந்தாள். அது அவனுக்குப் போதுமானதாக இருந்தது. அவள் திரும்பவும் தன்னைப் பார்க்கும்பொழுது கதைக்க வேண்டும் என நினைத்துக் கொண்டான். அவள் நிமிர்ந்தாள். அவனது மனசு படபடப்படைந்தது. கதைக்க வேண்டும் என்று சுலபமாக நினைத்தாயிற்று! என்ன கதைப்பது? எப்படிக் கதைப்பது? "நீங்கள்... படிக்... கிறீங்களா? அல்லது படிச்சு முடிஞ்சு வீட்டிலே... அம்மாவுக்கு உதவியாக...?"

"உங்களுக்கேன் அதெல்லாம்?" என்றாள் அவள். அவன் திடுக்குற்றுப் போனான். அவளது தோற்றத்திலும் பெயரிலும் லயித்துப் போயிருந்தவனுக்கு இந்த எதிர்மாறான செய்கை அதிர்ச்சியை அளித்தது. பின்னர்

அவளைப் பார்ப்பதையும் பிடிவாதமாய் தவிர்த்துக் கொண்டான்.

இந்த மடத்தனமான மனசு ஒன்றும் நடக்காதது போல திரும்பவும் அவளையே அசைபோடுகிறதே என அலுத்துக் கொண்டான். சரியான கர்வக்காரியாக இருப்பாளோ? இல்லை, அவள் நடந்துகொண்ட விதம்தான் சரி. பெண்கள் இப்படி இருந்தாற்றான் இந்த உலகத்தில் தப்பிப் பிழைக்கலாம். என்ன இருந்தாலும் அவள் தன்னைப் புறக்கணித்ததில் கவலையும், தன்னையும் மட்டமாகக் கருதியிருப்பாளோ என எண்ணியபொழுது வெட்க உணர்வும் மேலிட்டது.

கொடிகாமம் புகையிரத நிலையத்தில் அவர்கள் இறங்கப் போவதை அறிந்ததும் சிறிது துடிப்படைத்தான். சனநெரிசலோடு பயணப் பெட்டியையும் எடுத்துக் கொண்டு இறங்குவது சிரமமாகையால் அவர்களை இறங்குமாறும் தான் யன்னலூடு பெட்டியைத் தருவதாகவும் பாட்டியிடம் கூறினான். அதை அவளுக்கும் கேட்கக் கூடியதாகத்தான் சொன்னான். ஆனால் அவள் எதுவுமே கேட்காதவள் போல தனது பெட்டியை எடுத்துக் கொண்டு இறங்கினாள். தனது கட்டுப்பாட்டை மீறி அவளிடம் மனதைப் பறிகொடுத்த பலவீனத்தை நினைக்க தன்மீது எரிச்சல் பற்றிக்கொண்டு வந்தது.


கீழே இறங்கிவந்த அவள், யன்னலின் ஊடாக அவனை அழைத்தாள்! உள்ளே இருக்கும் இன்னொரு பெட்டியைக் காட்டி அதை எடுத்துத் தருமாறு கேட்டாள். அவன் அதை நம்பமுடியாதவனாய் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான். தன்னை உண்மையிலேயே

புறக்கணித்திருந்தால் அவள் இப்படி வலிந்து கதைத்திருக்க மாட்டாள் என்ற சந்தோஷம் தோன்றியது. அந்தப் பெட்டியை எடுத்து ஆதரவோடு அவளைப் பார்த்தவாறு கொடுத்தான். ஒரு நேர்மையான ஆணுக்குரிய பெருமிதம் தோன்றியது... அவளது கண்கள் தன்னிடம் கலந்து கொள்வதை உணர்ந்தான்.

புகையிரதம் கிளம்பியது. புகையிரதம் ஓடத் தொடங்கியதும் அவள் அவனைப் பார்த்தவாறு கையை அசைத்தாள். கண்ணிலிருந்து மறைக்கின்றவரை அவள் அப்படியே நின்றாள். அவனுக்கு அடக்கமுடியாத சோகம் பொங்கிக்கொண்டு வந்தது. 'இவ்வளவுதானா?'

மனது அமைதி குலைந்து தவித்தது. 'சாந்தா' - சற்று நேரம் இயற்கை வசப்பட்டுப்போன குற்றத்திற்காக அன்றைய இரவின் உறக்கம் பறிபோய்க் கொண்டிருப்பதை உணர்ந்தான்.

*(வீரகேசரி, 1979)*



# பொழுதுபட்டால் கிட்டாது



ஆலயமணி ஒலித்தது. சுவாமி வெளிக்கிட நேரமாகிவிட்டது.

கமலம் தனது நடையை விரைவுபடுத்தினாள். நாலு வயதுகூட நிரம்பாத மூத்த மகளைக் கையில் பிடித்துக் கொண்டு வந்தாள். இரண்டே வயது நிரம்பிய இளைய மகனைத் தூக்கிக்கொண்டு நடப்பது சற்று சுமையாகத்தான் இருந்தது.

"கெதியிலை நட தங்கச்சி... சாமி வெளிக்கிட நேரமாச்சுது... மணி கேக்குது" என மகளையும் விரைவுபடுத்தினாள். அம்மாவின் பேச்சு பிள்ளையின் காதில் விழவில்லை. பாதையோரங்களில் இருந்த விளையாட்டுச் சாமான்களையும், தின்பண்டங்களையும் விற்பனை செய்பவர்களையும் வேடிக்கை பார்த்துக்கொண்டே நடந்தாள் சிறுமி.

கமலம் கோபம் மேலிட, "பிராக்குப் பார்க்காமல் வா தங்கச்சி!" என மகளை அதட்டியவாறே நடந்தாள்.

அரசடிச் சந்தியை அண்மித்துச் சென்றபொழுது சுப்பிரமணியத்தார் தனது பெண்சாதியுடனும், நான்கு பிள்ளைகளுடனும் வந்து கொண்டிருந்தார். கமலத்தைக் கண்டதும் ஒரு புன்முறுவலை உதிர்த்துவிட்டுச் சென்றார். கமலமும் பதிலுக்குச் சிரித்துக் கொண்டாலும் மனத்திலே ஏதோ ஒரு குறை உறுத்தியது.

சுப்பிரமணியத்தார் தனது இரு புதல்வர்களையும் இரு கைகளிலும் பிடித்தவாறு நெஞ்சை நிமிர்த்திக்கொண்டு

சென்றார். அவருடைய இரு பெண்பிள்ளைகளும் அம்மாவின் கைகளைப் பிடித்துக்கொண்டு நடந்தார்கள். பிள்ளைகளும் சரி, பெற்றோரும் சரி எவ்வளவு கலகலப்பாக, சந்தோஷமாகக் கதைத்துச் சிரித்துக்கொண்டு வந்தார்கள்! அந்தக் குடும்பமே இப்படி இணைந்து செல்வது எவ்வளவு நிறைவாகவும் அழகாகவும் இருக்கிறது!

கமலமும் 'அவரை'த் திருவிழாவிற்கு வந்து நிற்குமாறுதான் எழுதினாள். ஆனால் அவரோ 'லீவு கிடைக்காதபடியால் வரமுடியவில்லை' என்று எழுதிவிட்டார். சிலவேளை கடைசித் திருவிழாவிற்கு வரக்கூடும்.

சுப்பிரமணியத்தார் பட்டுவேட்டி, சருகைச் சால்வை, தங்கச் சங்கிலி சகிதம் எடுப்பாக இருந்தார். அவருடைய மனைவிக்கோ, பிள்ளைகளுக்கோ, எந்தக் குறையையும் அவர் வைக்கவில்லை. மனைவி உயர்ந்த ரகச் சேலையும் அதற்கேற்றாற் போல் ரவிக்கையும் அணிந்து கூந்தல் நிறைந்த மலர்களுடன் தனது கணவனோடு இணைந்து சென்றதைக் கமலத்தினால் நினைத்துப் பார்க்கவே முடியவில்லை.

சிறுவர்கள் இருவருக்கும் பத்துப் பன்னிரண்டு வயது மதிக்கலாம். அழகாகப் பட்டுவேட்டி உடுத்து நெஞ்சிலே தங்கச் சங்கிலிகள் தவழ அப்பாவின் செல்லங்களாக மிடுக்குடன் சென்றார்கள். அவர்களை அடுத்த பெண்பிள்ளைகளும் இதேபோலத்தான் - எவ்வித குறையுமில்லை.

கமலம் தன் பிள்ளைகளை ஒருமுறை நோக்கினாள். இந்த விஷயத்தில் அவளுடைய பிள்ளைகளுக்கும் ஒரு

குறையும் இல்லைதான். ஆனால் சுப்பிரமணியத்தார் குடும்பத்தைக் கண்டபொழுது இவள் பொறாமைப் படுமளவுக்கு அவர்களிற் தென்பட்ட 'றிச் லுக்' தன்னிடத்தில் இல்லையே என்பது பெரிய ஏக்கமாக மனதை வருத்தியது.

கோயிலடிக்குச் சென்றதும் வீதியின் ஒரு பக்கமாகச் சென்று ஒதுங்கி நின்றுகொண்டாள் கமலம். இந்த சுப்பிரமணியத்தைத்தான் முன்பு ஒரு காலத்தில் கந்தையா புறோக்கர் இவளுக்குச் 'சம்பந்தம்' பேசிக்கொண்டு வந்தார். அப்பொழுது அதை முழுமூச்சுடன் எதிர்த்தவள் கமலத்தின் தாயார் செல்லமணிதான்.

"உதென்ன புறோக்கர் கண்டறியாத சம்பந்தமெல்லாம் பேசிக்கொண்டு வாறீர்? இவள் பிள்ளையின்ரை படிப்புக்கு அவன் எந்த மூலைக்கு?... எண்டாலும் ஒரு தராதரம் வேண்டாமே?"

"இல்லை பாருங்கோ... அப்படிச் சொல்லக் கூடாது. பொடியன் முயற்சியுள்ளவன்... வீட்டிலை உள்ள கஷ்டங்களாலை உத்தியோகத்துக்குப் போனாலும் இன்னும் படிச்சுக் கொண்டு தான் இருக்கிறான். இண்டைக் கில்லாட்டியும் ஒரு நாளைக்கு அவன் கட்டாயம் ஒரு நல்ல நிலைக்கு வருவான்..." எனப் புறோக்கர் சமாதானம் சொல்லிப் பார்த்தார்.

"உதெல்லாம் பேய்க்கதை புறோக்கர்... சுப்பிரமணியத்தின்ரை தேப்பன் இப்பவே அங்கை கடன்தனியிலை கிடந்து கஷ்டப்படுகிறார். இனி எங்கடை பிள்ளையைக் கொண்டுபோய் உழைப்பிக்கப் போகினம் போலை... அதுக்குத்தான் அந்தரப்படுகினம்..."

"நல்ல நியாயம் சொன்னியள்! அவங்கள் சகோதரங்கள் ஐஞ்சு ஆம்பிளைப் பிள்ளையள் இருக்கிறாங்கள்... தாங்கள் உழைச்சுக் கடனை அழிக்கேலாமல் உங்களிட்டை வாறாங்களே? உங்கடை இனஞ்சனந்தானே எண்டுதான் பேசிக்கொண்டு வந்தனான்" புறோக்கர் சற்று எரிச்சலுடன் சொன்னார்.

கமலத்துக்கு அம்மாவின் நியாயங்கள் சரியாகவே பட்டன.

"அவர் உழைக்கிற காசு எனக்கு ஒரு சீலை வேண்டக் காணுமோ எண்டு கேளம்மா!" என்று கேலியாகவே கேட்டாள்.

புறோக்கர் மேற்கொண்டு கதைக்கவில்லை.

"அவையள் சொந்தக்காரரர் எண்டாப்போலை அவளைக் கொண்டுபோய் அந்தப் பாழுங்கிணத்திலை தள்ளாமல் வேறையொரு நல்ல இடமாய் பேசிக்கொண்டு வாங்கோ புறோக்கர்!" என அவரை அனுப்பி வைத்தாள் செல்லமணி.

அப்பொழுது கச்சேரியில் ஒரு சாதாரண 'கிளாக்' ஆக இருந்த சுப்பிரமணியம் இப்பொழுது உதவி அரசாங்க அதிபராக உயர்ந்து விட்டார்.

கமலம் கந்தசுவாமிக் கோவில் கோபுரத்தை நிமிர்ந்து பார்த்தாள். அவளையறியாமலே, 'அப்பனே முருகா!' என மனது எதையோ யாசித்தது.

அப்பொழுது கமலம் ஒரு பட்டதாரி ஆசிரியை. இருபத்துமூன்று வயதில் பல்கலைக்கழகப் பட்டம் பெற்று

வெளியேறியவளுக்கு ஆசிரியை நியமனமும் கிடைத்தது. கமலத்துக்கும் தாய் செல்லமணிக்கும் பெருமை பிடிபடவில்லை.

கமலத்தை பட்டதாரியாக்க வேண்டுமெனப் படாதபாடுபட்டவள் செல்லமணி. சிறுவயதில் அவளுடைய திறமையைப்பபற்றி ஆசிரியர்கள் கூறும் போதெல்லாம் எப்படியும் அவளைப் படிக்க வைத்து ஆளாக்கிவிட வேண்டுமென்றுதான் கனவு காண்பாள். அவளுடைய அயரா முயற்சியில் அந்தக் கனவும் பலித்தது.

கமலத்தின் தந்தை முருகேசர் இதற்கெல்லாம் அப்பாற்பட்டவர். தானுண்டு தன் பாடுண்டு என இருந்துவிடுவார்.

'பெடியங்களே படிச்சுப் போட்டு உத்தியோகமில்லாமல் இருக்கிறாங்கள்... இவள் படிச்சு என்ன செய்யப் போறாள்...? ஒருத்தனிட்டைப் போனால் அடுப்பு மூட்டிக்கொண்டு குசினியிக்கை கிடக்க வேண்டியவள்தானே?' என்பது அவருடைய வாதம். இதனால் தந்தையின்மேல் கமலத்துக்கு சற்று வெறுப்பும்கூட.

செல்லமணி கணவனுடைய முகத்திற்கே சொல்வாள்: "இந்த மனுசன் இருந்துதான் என்ன சுகத்தைக் கண்டன்...? நான் ஒரு பொம்பிளை கிடந்து உலையுறன் அந்தாள் அம்மிக்கல்லு மாதிரி வீட்டுக்குள்ளை குந்திக் கொண்டிருக்குது!" முருகேசு சூடு சுரணையில்லாமல் இதையெல்லாம் கேட்டுக் கொண்டிருப்பார்; பழக்க தோஷம்!

கமலத்தின் திருமண விஷயத்திற்கூட முருகேசர் பின்னுக்குத்தான் நின்றார். "தாய்க்கும் மோளுக்கும் ஏத்த

மாப்பிள்ளை தேடுவதெண்டால் இனி நான் செய்தெல்லோ கொண்டு வரவேணும்.''

"அப்புசாமி'' என இளைய மகள் கும்பிட்டதைக் கண்டதும்தான் சுவாமி வீதிவலம் வந்துகொண்டிருப்பதைக் கமலமும் கவனித்தாள். மிகவும் பயபக்தியுடன் மனதை ஒரு நிலைப்படுத்தி தனது கவலைகளையெல்லாம் இறைவனிடம் முறையிட்டாள்.

'கவலைப்பட வேண்டிய காலமெல்லாம் கடந்து விட்டதே' என்ற எண்ணமும்கூடவே எழுந்து வருத்தியது.

இளம் தம்பதியர்கள் பலர், கைகோர்த்துக் கொண்டு செல்கிறார்கள். கணவனுடைய கையை மென்மையாகப் பிடித்துக்கொண்டு அவனோடு அணைந்தவாறு ஒருத்தி செல்கின்றாள். அவன் அவளுக்குத் தகுந்த துணையாக, அவளை எவ்வளவு பாதுகாப்பாக அழைத்துச் செல்கின்றான்! தனது மனைவியையும், பிள்ளைகளையும் அப்பா ஒருவர் எவ்வளவு பக்குவமாக சனத்தினுள் இடிபடாமல் கூட்டிச் செல்கிறார். பார்த்துக்கொண்டு நின்றால் இந்தக் காட்சிகள்தான் கமலத்தின் கண்களைக் குத்துகின்றன.

அவளுக்கு யார்தான் துணை? கமலம் கண்களை மூடிக் கொண்டாள். 'அப்பனே முருகா... நீ தான் எனக்குத் துணையிருக்க வேணும்!'

"காலத்தோடை பயிர்செய்ய வேணும்... இப்ப ஒவ்வொரு நொட்டை சொல்லி... வர்ற சம்பந்தங்களை யெல்லாம் தட்டிக் கழிச்சால் பின்னடிக்குத்தான் கவலைப்பட வேண்டி வரும்... இப்ப தெரியாது... எவ்வளவு காலத்துக்குத்தான் இப்பிடியே இருக்கப் போறாய்?''

கமலத்தின் அண்ணன் பரமநாதன் இப்படித்தான் முன்பு சொன்னான். அண்ணனுடைய வாதம் அப்பொழுது அவளுக்கு வேடிக்கையாக இருந்தது.

"எனக்கு ஒருத்தற்றை உதவியும் தேவையில்லை... என்ரை காலிலை நிக்க ஏலும்! நான் உழைச்சு அம்மா வின்ரை கடனை அழிச்சு... கடைசிவரைக்கும் அவவை வைச்சுக் காப்பாற்றுவன்!"

அப்பொழுது கமலத்துக்கு இருபத்தேழு வயது. அண்ணனுக்கு முப்பது வயது. பரமநாதனும் படிப்பு முடிந்து உத்தியோகம் செய்து கொண்டிருந்தான்.

அம்மா இரகசியமாக கமலத்தின் காதில் ஓதினாள்... "அவருக்கு அவசரமாயிருக்குது போலை... அதுதான் உந்தக் கதை கதைக்கிறார்."

அதைக் கேட்டு அவளும் அண்ணனுடைய முகத்தை முறிப்பது போலச் சொல்லிவிட்டாள். "உனக்கு அவசரமெண்டால் போய்முடி! என்ரை விஷயத்திலை ஒருத்தரும் தலையிடத் தேவையில்லை!"

அவனும் முடித்துக்கொண்டு போய்விட்டான்.

கந்தையா புறோக்கர் பேசிக் கொண்டுவந்த கச்சேரியடிச் சம்பந்தத்திற்தான் அண்ணனையும் முறிக்க வேண்டிவந்தது.

"கச்சேரியடியிலை ஒரு மாப்பிள்ளை இருக்கு. பெரிய உத்தியோகக்காரன்... நாலைஞ்சு பேருக்கு பெரியவனாய் இருக்கிறான்... நாப்பது, ஐம்பது பவுண் உழைக்கிறான்... இனி குடும்பக் கரைச்சல் பொறுப்பு

ஒண்டும் இல்லாத பெடியன்... பிள்ளைக்கு நல்ல தோதான மாப்பிள்ளை."

செல்லமணி தீவிரமாக யோசித்தாள். பின்னர் ஏதோ முடிவுக்கு வந்தவள் போலக் கேட்டாள் :

"புறோக்கர் ஆரைச் சொல்லுறீர்? வேலுப்பிள்ளையற்றை பெடியனையே?"

"ஓ! அங்கை உங்களுக்கு ஆக்களையும் தெரியும்! பிறகென்ன? பேசி முடிக்க வேண்டியதுதானே?"

"புறோக்கர்! ஆக்களை விளங்காமல் கதைக்கிறீர்...! உவையள் ஆர் ஆக்கள் தெரியுமே?... உவையோடை நாங்கள் எந்தக்காலத்திலை உறவாடினனாங்கள்?... வேலுப்பிள்ளை யற்றை தங்கைக்காரி ஒருத்தியெல்லே... முந்தி ஒருத்தனோடை கூடிக்கொண்டு ஓடினவள்? அவன் என்ன சாதி எண்டு தெரியுமே? அதுக்குப் பிறகுதானே... உவையளைச் சந்தி சபைக்கு வேண்டாமென்று விட்டனாங்கள்!"

"இப்படிக் கொண்டு வர்றதுக்கெல்லாம் ஒவ்வொரு குறை சொன்னால்... நான் எங்கை மாப்பிள்ளை பிடிக்கப் போறது...? இன்னும் நீங்கள் உங்கடை காலத்திலைதான் நிக்கிறீங்கள்...! பிள்ளையளின்ரை காலத்திலை உதெல்லாம் ஆர் பாக்கப் போகினம்...! குழப்பாமல் செய்து வையுங்கோ!"

"புறோக்கர்! இந்தச் செல்லமணியை உமக்குத் தெரியாது. தின்னவேலி நடராசற்றை குடிபூரலுக்குக் கச்சேரியடியார் வந்திட்டினமெண்டெல்லே... நான் எல்லாரையும் கூட்டிக்கொண்டு வெளிக்கிட்டனான். அப்பிடிக்கொத்த செல்லமணி இனி அந்த வாசற்படி

ஏறுவாள் எண்டு நினைக்கிறீரோ?'' பெருமையுடன் கூறினாள் செல்லமணி.

அம்மாவின் 'விசர் ஞாயங்களைக்' கேட்க பரமநாதனுக்கு எரிச்சலாயிருந்தது.

''வேலுப்பிள்ளையின்ரை தங்கச்சி ஆரோடை ஓடினாத்தான் உனக்கென்னணை அம்மா...? இப்ப அவற்றை மகனைத்தானே பேசப்போறியள்?'' என அம்மாவிடம் சொல்லிப் பார்த்தான்.

''உனக்கு ஒரு கோதாரியும் தெரியாது... கச்சேரியடியாரோடை சம்பந்தம் செய்தால் பிறகு உன்னை ஒரு சந்தி சபைக்கு எடுப்பினமே?''

பரமநாதனுக்கு ஆத்திரம் எல்லை மீறியது. ''எங்களை ஒருத்தரும் கூப்பிடத் தேவையில்லை! கண்டறியாத சாதிபேதம் கதைக்கிறனீங்களெல்லாம் பெரிய திறமான ஆக்களே...? அவரவற்றை நடத்தையைக் கொண்டு தான் மனிசனைக் கணிக்க வேணும்!''

''தம்பி சொல்றதும் ஞாயம்தான்'' என்றார் புறோக்கர்.

செல்லமணி சினங்கொண்டவளாக, ''அவளுக்குக் கலியாணம் முடிச்சு வைக்க எனக்குத் தெரியும்! நீங்கள் ஒருத்தரும் இதிலை தலையிடத் தேவையில்லை!'' என வெடித்தாள்.

புறோக்கருக்கு முகம் கறுத்துப் போய்விட்டது. பரமநாதனுக்கு ஆத்திரத்தில் இன்னும் முகம் சிவந்து விட்டது. நல்லகாலமாகத் தான் இந்த விவாதத்தில் பங்கு பற்றவில்லை என மகிழ்ந்து கொண்டார் முருகேசர்.

பரமநாதனுக்கு அம்மாவின் போக்குப் பிடிக்கவில்லை. தங்கையுடனாவது கதைத்துப் பார்க்கலாமென நினைத்தான்.

"கமலம்! நீயும் எவ்வளவு காலத்துக்குத்தான் அம்மாவின்ரை எண்ணத்துக்கு நிண்டு ஆடப்போறாய்? நீ படிச்சனி... நீயே சிந்திச்சு நல்ல முடிவுக்கு வர வேணும். ஏனெண்டால் இதாலை வர்ற கஷ்டநஷ்டங்களை அனுபவிக்கப் போறவள் நீதான்! அம்மா உன்னோடை நெடுகலும் இருக்கமாட்டா..."

கமலத்துக்கு அண்ணனுடைய நியாயம் ஏறவில்லை. அவள் அம்மாவின் பக்கம்தான். அம்மாவினுடைய சுயகௌரவத்தில் அவளுக்குப் பெருமையும் கூட! தனது தரத்துக்கு ஒருவிதக் குறையுமில்லாத மாப்பிள்ளைதான் தேவை என நினைத்தாள் கமலம். அப்படி ஒரு மாப்பிள்ளையை அம்மாவினாற்தான் தேர்ந்தெடுக்க முடியுமென்பதும் அவளுடைய நம்பிக்கை.

"எனக்காக ஒருத்தரும் கஷ்டப்படத் தேவையில்லை! நான் இப்பிடியே எவ்வளவு காலத்துக்கும் இருப்பன்... அம்மா சொல்லுறதும் சரிதானே?"

இதைப்போய் யாரிடம் சொல்லி அழுவதென்று அவனுக்குப் புரியவில்லை.

"இவளுக்கு உத்தியோகம் பாக்கிறனெண்ட திமிர்! இப்ப தெரியாது... பிறகுதான் கவலைப்படுவாள்" எனத் தந்தையிடம் ஏசிக்கொண்டு போய்விட்டான் பரமநாதன்.

கமலம் கவலை மேலிடத் தன் குழந்தைகளைப் பார்க்கிறாள். அவர்கள் மகிழ்ச்சியாகக் கோயில் மணலில்

விளையாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய சந்தோஷத்தில் குறுக்கிட விரும்பாமல் கவனத்தைத் திருப்பினாள்.

கமலத்தின் மூத்த மகளை மூன்று வயதுவரை தனது கட்டுப்பாட்டிலேயே வளர்த்த செல்லமணிக்கிழவியும் இறந்து ஒரு வருடமாகிவிட்டது.

கமலத்தின் கண்கள் கலங்கின. அது அம்மாவின் மறைவை நினைத்தோ அல்லது அம்மாவின் எண்ணப்படி நின்று ஆடியதனால் தனது வாழ்வு நிறைவில்லாத ஒன்றாகி விட்டதனாலோ என்று புரியவில்லை.

கமலத்துக்கு முப்பது வயது கடந்துவிட்டது. பின்னர் தான் தனது கலியாணத்தின் அவசியத்தைப் பற்றி உணரத் தொடங்கினாள்.

கணவனும் மனைவியுமாக இளம் தம்பதியர் கைகோர்த்துச் செல்வதைக் காணுகின்றபொழுது ஏற்படுகின்ற ஒருவித கிளர்ச்சிகள். தான் இன்னும் செல்வியாக இருப்பதனால் பாடசாலையில் சக ஆசிரியர்கள்; திருமணமானவர்களும் கூட, தேவையில்லாமல் வந்திருந்து அரட்டையடிக்கின்ற சம்பவங்கள், உயர் வகுப்பு மாணவர்களின் சிலேடையான பேச்சுக்கள். மாணவியரின் கேலி வார்த்தைகள்... பாதையிற் சில ஆடவரின் வித்தியாசமான பார்வைகள், 'பஸ்'சிலே பிரயாணம் செய்கின்றபோது சில வாலிபர்களின் தவறுதலான அல்லது குறும்பான ஸ்பரிசத்தினால் கிளர்கின்ற உணர்ச்சிகள்... பல இரவுகளை உறக்கமின்றியே கழியச் செய்தன. அப்படி உறக்கமில்லாத இரவுகள் அவளுக்கு ஒரு துணையின் அவசியத்தை வலியுறுத்தின. கழுத்திலே ஒரு தாலிக்கொடி

இருந்தால் அவர்களெல்லாம் இப்படி நடந்து கொள்வார்களா?

கமலத்தின் 'நச்சரிப்பு' செல்லமணிக்குப் பெரிய தலையிடியாகப் போய்விட்டது. கந்தையா புறோக்கர் கொண்டுவந்த எத்தனை சம்பந்தங்களைத்தான் அவள் ஒவ்வொரு நொட்டை சொல்லித் தட்டிக் கழித்திருக்கிறாள்.

கந்தையா புறோக்கரும் இப்பொழுது இந்தப் பக்கம் வராமல் விட்டுவிட்டார். 'கமலத்துக்கு பேசி வந்த எத்தனையோ மாப்பிள்ளைமார் இப்ப கலியாணமும் முடிச்சு பிள்ளைகுட்டியோடை இருக்கிறாங்கள்!'

கச்சேரியடி வேலுப்பிள்ளையின் மகன் சதாசிவம் இன்னும் மணமாகாமல் இருக்கிறான். செல்லமணி வேலுப்பிள்ளையின் வாசற்படி ஏறிச் சென்றாள். வேலுப்பிள்ளை கையை விரித்துவிட்டார்.

செல்லமணி இடிவிழுந்தவள் போலானாள். ஏறி இறங்காத படிகளும் இல்லை. திறக்காத கதவுகளும் இல்லை.

இப்படியே நான்கு வருடங்கள் வரையில் கழிந்து கொண்டிருந்தபொழுதுதான் 'கடவுள் செயலாக' ஒரு சம்பந்தம் வீடு தேடி வந்தது.

கச்சேரியடி சதாசிவம் தான்!

அவன் ஏற்கனவே திருமணமாகி, மூன்று வருடங்கள் முடியுமுன்னரே இரு பிள்ளைகளுக்கும் தந்தையாகி மனைவியையும் பறிகொடுத்த பின்னர் இப்பொழுது 'இரண்டாம் தாரமாக'க் கமலத்தைக் கேட்டு வந்தான்.

'ஏதோ கடவுள் விட்டவழி!' என செல்லமணியும் ஒத்துக்கொண்டாள். செல்வியாக இருந்த கமலம் தனது முப்பத்தைந்தாவது வயதில் திருமதியானாள்.

"மிஸ்ஸிஸ் சதாசிவம் நிற்கிறா?" என்றவாறே சொர்ணம்ரீச்சரும் கணவரும் அண்மையில் வந்தார்கள்.

"என்னப்பா தனிய நிற்கிறீர்?"

"ஓம் என்ன செய்கிறது?" என விரக்தியுடன் பதிலளித்தாள்.

நீண்ட காலமாகப் பிள்ளைப் பேறில்லாமல் இருந்து அண்மையிற்தான் தாய்மை அடைந்தவள் சொர்ணம். மிஸ்டர் தில்லைக்கூத்தன் எடுத்ததற்கெல்லாம் தனது மனைவியைத் தலையிலே தூக்கி வைத்துக்கொண்டு [illegible] [illegible]த்துக்கொண்டு நின்றுவிட்டு அவர்களும் விடைபெற்றனர்.

கமலம் பெருமூச்செறிந்தாள்.

சதாசிவம் அவளை மணந்து கொண்டாலும் அதனால் என்ன சுகத்தைத்தான் கண்டாள்! உண்மையான பிரியமும் பாசமும் உள்ள ஒரு கணவனாக அவர் எப்பொழுதாவது நடந்திருக்கிறாரா? ஐந்து வருடங்கள் அவருடன் வாழ்ந்துவிட்டாள். ஒரு கடமைக்காகத்தான் இவள் மனைவியாகவும் அவர் கணவனாகவும் இருக்க வேண்டியிருக்கிறது!

தினமும் குடிப்பார். 'முதலாம் தாரத்து' நினைவுகள்தான் அவரை வாட்டுகின்றன போலிருக்கிறது. (குடிவெறியில் வந்து சதா அவளைப்பற்றியே பிதற்றுவார்.) வீட்டுக்கு நேரம் கழித்தே வருவார்.

கமலத்துக்கு அழவேண்டும் போலத் தோன்றும். ஏக்கமாக இருக்கும். ஒரு புதுமணப் பெண்ணுக்குரிய ஆசைகளுடனும், ஏக்கத்துடனும்தான் கமலம் மணம் முடித்தாள்.

நேரம் தாமதித்து வீடுவந்த கணவனிடம் ஒருநாள் நேரடியாகவே கேட்டாள்.

"வீட்டிலை, நான் ஒருத்தி உங்களுக்காகக் காத்துக் கிடக்கிறது தெரியவில்லையா...? ஒவ்வொரு நாளும் இப்பிடி மதியில்லாமல் குடிச்சுப்போட்டு வந்தால் என்ன முடிவு?"

அவர் நிதானமாகச் சொன்னார் :

"கமலம் நான் எனக்கொரு மனைவி தேவையெண்டு உன்னைக் கல்யாணம் கட்டயில்லை...! இந்தப் பிள்ளையளுக்கு ஒரு அம்மா தேவையெண்டுதான் கட்டினனான்."

சனநெருக்கடி குறையவே பிள்ளைகளையும் அழைத்துக்கொண்டு கமலம் வீட்டுக்குப் புறப்படத் தொடங்கினாள்.

ஆறுமாதத்துக்கு முன்னர்தான் சதாசிவத்துக்கு மன்னாருக்கு மாற்றம் கிடைத்தது. கமலத்தையும் மன்னாருக்கு மாற்றம் கேட்டு விண்ணப்பிக்குமாறு சதாசிவம் வற்புறுத்தினார். கமலம் மறுத்துவிட்டாள்.

சதாசிவம் மன்னாருக்குச் சென்று இரண்டு மாதத்திற்குள்ளேயே தனது முதலாம் தாரத்துப் பிள்ளைகள் இரண்டிற்கும் பாடசாலையொன்றில் இடம் எடுத்து அங்கேயே அழைத்துக் கொண்டுவிட்டார்.

கமலம் தன் இருபிள்ளைகளையும் பார்த்துக் கொண்டு யாழ்ப்பாணத்திலே இருந்துவிட்டாள்.

வீதியோரத்தில் எதையோ விற்பனை செய்து கொண்டிருந்த சிறுவன் ஒருவன் 'போனால் கிடையாது...! பொழுதுபட்டால் கிட்டாது!'' என சத்தமிட்டுக் கொண்டிருந்தான்.

கமலத்தின் நெஞ்சிலும் அதே உறுத்தல்; 'பொழுதுபட்டுத்தான் போச்சுது' குழந்தைகளை அணைத்தவாறு நடந்தாள்.

*(வீரகேசரி, 1977)*



# பருக்கை



'இனிப் படுக்கலாம்' என நினைத்து, வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தை மூடினான். கட்டிலில் தலையணையை நிமிர்த்தி வைத்து சாய்ந்து படுத்தவாறே வாசித்துக் கொண்டிருந்தவன் நேரம் கடந்துவிட்ட படியாற்தான் நித்திரை கொள்ளலாம் என நினைத்தான். பத்தரைமணி ஒரு பெரிய நேரமில்லைதான். ஆனால் இப்படியான குளிர்கால இரவுகளில் நித்திரை சரியாக வருமுன்னரே போர்த்து மூடிக்கொண்டு மெத்தைச் சூட்டில் கிடப்பது நல்ல சுகமாக இருக்கும். மேஜையில் எட்டி புத்தகத்தை வைத்தான். பின்னர் தலையணையைச் சரிசெய்துகொண்டு கையை நீட்டி ரேபிள் லாம்பை அணைத்தான். படுத்திருந்து வாசிப்பதற்கு விசேடமாக ஒரு மேஜை விளக்கையும் வேண்டி வைத்திருந்தான். அறை முழுவதற்கும் பொதுவாகவும் ஒரு விளக்கு இருக்கிறது. படுக்க ஆயத்தமானதும் மேஜை விளக்கை 'ஓன்' பண்ணி விட்டு பொதுவான விளக்கை அணைத்துவிட்டு வாசிக்கலாம். பிறகு நித்திரை வரும்பொழுது கையை மெதுவாக உயர்த்தி அதையும் அணைத்துவிடலாம். எழுந்து கிழுந்து அசையத்தேவையில்லை. போர்வைக்குள்ளே போய்விட்டால் சுகம், சொகுசு...!

தும்புமெத்தை, அதற்குமேல் இரண்டு விரிப்புகள்! இதமான சூடு. கதவில்லா யன்னலூடு குபு குபுவென்று வீசுகிற குளிருக்குத் தாக்குப் பிடிக்கும் கணகணப்பு. மாதாமாதம் வாடகையை ஒழுங்காக வேண்டிக் கொள்ளும் 'போடிங்'காரனுக்கு யன்னலுக்குக் கதவுபோடும் கரிசனையில்லை.

அது ஒரு வசதிபோலவும் தோன்றியபடியால் கதவு போட்டுத் தருமாறு இவனும் வற்புறுத்தவில்லை. நிலவுக்காலங்களில் கட்டிலிற் படுத்திருந்தவாறே, நடுஇரவில் வெளியே சந்திரனைப் பார்க்கும்பொழுது நல்ல சுதியாக இருக்கும்!

படுக்கையில் கிடந்தவாறே அந்த நிலாவைத் தேடியபொழுது மனது எதற்காகவோ தவிப்பதையும் உணரமுடிந்தது. என்ன குறை?

முதலில் வாசித்துக் கொண்டிருந்தபொழுதே ஒரு வித சஞ்சலம் இருக்கத்தான் செய்தது. நீரில் மிதக்கிற ஏதோ ஒரு பொருள் அலைகளோடு கொஞ்சம் கொஞ்சமாகத் தலையைக் காட்டி மறைவது போல நெஞ்சினுள் அமிழ்ந்து கொண்டிருந்து வெளிப்பட மறுத்தது. வாசிப்பதைக் கூட இடையிடையே நிறுத்திவிட்டு யோசித்துப் பார்த்தான். பிடிபடவில்லை. போய்த் தொலைகிறது என விட்டிருந்தான்.

ஆனால் இப்பொழுது போர்வையுள் நுழைந்துவிட்ட இந்த அமைதியான இருளில் அந்தக் கவலை விசுவரூபம் எடுத்துக்கொண்டு வந்து என்னவென்று புரியாத பூதமாக நிற்கிறது. புரண்டு புரண்டு படுத்தான். என்ன? என்ன?

சில இரவுகளில் இப்படி மனது காரணம் புரியாத கவலையில் வருந்துவதுண்டு. வீட்டில் கஷ்ட நஷ்டங்கள், குடும்ப பாரத்தைச் சுமக்க முடியாத அப்பா, நினைக்கிற அளவிற்குத் தன்னால் உதவ முடியவில்லையே என்ற ஆற்றாமை, அவசரமாகக் காசு தேவை என்று தம்பி எழுதியிருப்பான் - உடனடியாகப் பிரட்ட முடியாத சங்கடம், இப்படி ஏதும் கூட இன்றைக்கு இல்லை.

மற்றவர்களிடமிருந்து தான் தனிமைப்பட்டு இருப்பதுதான் மனதை அரிக்கிறதோ என நினைத்துப் பார்த்தான்.

தனியாருக்குச் சொந்தமான இந்த 'போடிங்'கில் எட்டு அறைகள் இருக்கின்றன. பத்தொன்பது பேர் குடியிருக்கிறார்கள். இளைஞர்கள், குடும்பங்களை ஊரில் விட்டு வந்திருக்கும் நடுவயதினர்... எல்லோருமே உத்தியோக நிமித்தம் நகருக்கு வந்தவர்கள். மற்ற அறைகளில் இருவர், மூவராகத்தான் குடியிருக்கிறார்கள். அவன் மாத்திரம் தனியான அறை எடுத்திருக்கிறான். காசைச் செலுத்த விரும்பாத சிலருக்கு அது நக்கலான விஷயம். தான் என்ன மனிதர்களை வேண்டாமென்று ஒதுக்கிவிட்டு வந்திருக்கிறேனா என நினைத்தான். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பலவீனங்கள்... கூத்து கும்மாளங்கள், அகத்தில் பகையும் முகத்தில் நகையும் கொண்ட வஞ்சக உள்ளங்கள்... தனக்கொரு நீதி பிறர்க்கொரு நியாயம் பேசுகிற சுயநலமிகள்... மனசுக்கு ஒத்து வரவில்லை. அதனால் சற்று ஒதுங்கி இருக்கிறான். இல்லாவிட்டால் எல்லோருக்குமே பாவமன்னிப்பு அளிக்கின்ற தேவபிதாவாக அவனால் எப்படி மாற முடியும்?

- காரணம் அதுதான். இரவு ஏழுமணியைப் போல அறைக்கு வந்தபொழுது, பொது விறாந்தையில் சாராயம் அடித்துக் கொண்டிருந்த சக அறைவாசிகள் இவனையும் அழைத்தார்கள். இவன் மறுத்துவிட்டு வந்தது அவர்களுக்குப் பெரிய கேலியாக இருந்தது. 'இவர் பெரிய மகாத்மா...' என - அரைகுறையாகக் காதில் விழுந்தது. பிறகு நாலு அறைகளுக்குக் கேட்கக் கூடியதாகச் சிரித்தார்கள். இவனுக்கு நெஞ்சுக்குள் ஏதோ எரிந்தது.

தங்களைப்போல விட்டில் பூச்சிகளாக வந்து நெருப்பில் விழச் சொல்கிறார்களா?

அதற்காகக் கவலைப்பட வேண்டிய அவசியமேயில்லையென இப்பொழுது தோன்றியது. சஞ்சலத்தைவிட்டு நிம்மதியாகப் படுக்கலாம் என மீண்டும் போர்வைக்குள் நுழைந்தான். 'இல்லை இது வேறு ஏதோ ஒன்று' என அந்தப்பூதம் மீண்டும் விசுவரூபமெடுத்துக் கொண்டு வந்தது. 'இது என்னடா தொல்லையாகப் போய்விட்டது... கதை சொல்லுகிற வேதாளம் மாதிரி... மனதைக் கலைத்துக்கொண்டு' என சலிப்படைந்தவாறே மீண்டும் புரண்டான். எழுந்து யன்னல்கம்பிகளைப் பிடித்துக்கொண்டு நின்று யோசிக்கலாமா என எண்ணினான். போர்வையை கால்களினால் உதறி விட்டான். குளிர் வந்து உரசியது. திரும்பவும் போர்வையை இழுத்து மூடினான்.

எல்லாவற்றையும் சொகுசாக, விளக்கு ஸ்விச்சைக் கூடக் கையுக்குள்ளே கொண்டுவந்து வைத்திருக்கிற தனது சோம்பல்தனத்துக்கு சரியான தண்டனைதான் கிடைத்திருக்கிறது என எண்ணினான். படுக்கையை விட்டு எழுந்து சுவர்வரை போனால் இடுப்பு முறிந்து விடுமென்றோ, மேஜை விளக்கு வேண்டி தலைமாட்டில் வைத்திருக்கிறேன் எனச் சினமும் ஏற்பட்டது. நாளைக்கு இந்த மேஜை விளக்கிற்கு ஒரு பிரியாவிடை கொடுக்க வேண்டும். அதோடு சோம்பலுக்கும் சேர்த்து...

'சீ!' என்ன இருந்தாலும் நித்திரை வருகிறபொழுது கையை உயர்த்தி இருட்டிற்குள் நுழைகிற சுகத்தை அனுபவிக்க முடியாது. வேண்டாம் இந்த சிறிய சலுகையை மன்னித்து விடலாம்.

ஓ! அதுதான் சஞ்சலத்திற்குக் காரணமோ? எல்லோரையும் போல குடித்து வெறித்து, ஆடிப்பாடி துடினமாகத் திரியாமல் இப்படி இரவு வந்ததும் கதிரைக்கோ அல்லது கட்டிலிற்கோ சுமையாகிப் போகிற சோம்பலா? நோ! பகல் முழுதும் உழைத்து அலுத்துப் போகிற உடலுக்கும் உள்ளத்திற்கும் ஆறுதலாக இரவைப் பயன்படுத்துவது தவறான விஷயமில்லையே!

ஆனபடியால் அந்தக் காரணமும் இல்லை. அப்போ?

அவனுக்குத் தனது மனதைப் பார்க்கப் பெரிய பரிதாபமாக இருந்தது. தலையணையில் நெஞ்சைப் பதித்து அதையே அணைத்தவாறு குப்புறப்படுத்துக் கொண்டு கண்களை இறுக்க மூடினான். சரியான காரணத்தைக் கண்டுபிடிக்கத்தான் வேண்டும். இல்லாவிட்டால் தூக்கமே வரப்போவதில்லை. காலைமுதல் இரவு படுக்கைக்கு வரும்வரை சென்றுவந்த இடங்கள், சந்தித்த மனிதர்கள்... எல்லாவற்றையும் நினைக்கத் தொடங்கினான். டிக்...டிக்...டிக்... என மேஜை மணிக்கூடு எண்ணிக் கொண்டு வந்தது...

தலையினுள்ளே அமுத்திக் கொண்டிருந்த ஏதோ ஒன்று படாரென உடைந்து வெளிப்பட்டதைப் போன்ற சுகம்.

மாலையில் காண நேர்ந்த அந்தக் காட்சிதான்... அவனுடைய அந்தப் பார்வைதான்.

மாலை வாசகசாலைக்குப் போய்விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தபொழுது இருளப் போகின்ற அந்த மைம்மல் பொழுதில் அதைக் கண்டான். பஸ் நிலையத்திற்கும் அப்பால் பின் வீதியில், ஒதுக்குப்புறமான

ஒரு பெரிய பூவரசு மரத்தின் கீழ் அந்தக் குடும்பம் குடியிருக்கிற கோலம்!

தாய், தந்தையரையும் இரண்டு குழந்தைகளையும் கொண்ட அளவான குடும்பம்தான். ஆனாலும் ஆனந்தம் அதிகமில்லாத குடும்பம்! நெடுநாட்களாக அவர்கள் அங்கு வாழ்கிற தடையங்கள் தென்படுகின்றன. ஒரு பக்கத்தில் அவர்களது உடைமைகள் பழைய துணிகளில் சிறுசிறு பொதிகளாகக் கட்டப்பட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. பழைய குடைகள், குடைக் கம்பிகள், அறுந்த செருப்புக்கள்... கல்லிலே அடுப்பு, அடுப்பில் சிறிய பானையில் ஏதோ அவிகிறது. சமையல் நடக்கிறது. எரிகிற அடுப்பைக் காற்று குழப்பாமல் மறைப்பாக ஒரு தகரத் தடுப்பை வைத்திருக்கிறார்கள். பாத்திரங்களாகப் பயன்படும் தகரப்பேணிகள் பக்கத்தில் பரப்பி வைக்கப் பட்டிருக்கின்றன. குழந்தைகள் இரண்டும் பசியிற்போலும் சிணுங்கிக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. தாய் பகல்முழுதும் உழைத்த அசதியில் ஒரு பொலித்தீன் தாளின் மேல் தலைக்கு அணைவாகக் கையைக் கொடுத்துப் படுத்திருக்கிறாள். அவன் அடுப்பை எரித்து சமைத்துக் கொண்டிருக்கிறான்.

அவர்களது மரநிழல் வீட்டிற்குள் சென்ற குட்டி நாயொன்று செம்மையாக வேண்டிக் குளறிக்கொண்டு வருகிறது. இன்னுமொரு நாய் அண்மிக்கிற துணிவு இல்லாமல் எச்சரிக்கையாய் தூர நின்றாலும் ஏக்கத்தோடு அவர்களையே பார்த்தவாறு நிற்கிறது. பசி, அவனது அழைப்பை ஆவலோடு பார்த்துக் கொண்டிருக்கும் பணிவான பார்வை, அவன் 'உஞ்சு' என்று அழைத்ததுமே வாலை ஆட்டிக்கொண்டு ஓடிப் போய் தூக்கி எறிவதை சாப்பிடுவதற்குத் தயாரான மரியாதை.

அவர்கள் எப்பொழுது இங்கு வந்து குடியேறினார்களோ தெரியாது. அந்த வீதிப்பக்கம் செல்ல வேண்டிய அவசியமே இவனுக்கு இருந்ததில்லை. இன்றைக்கு சும்மா ஒரு 'நடை'க்காகத்தான் போனான்.

இப்படி உழைப்பிற்காகப் போகிற நகரங்களிலெல்லாம் எங்காவது ஓர் ஒதுக்குப்புறத்தில் சீவித்து மாள்கிற பரிதாபம். இங்கிருந்து சற்றுத் தொலைவில் தான் பொது மலசலக் கூடம் அமைந்திருக்கிறது. அந்த நாற்றம், அருவருப்பை கூடக் கருதாமல் அவர்கள் எப்படியாவது வாழ்ந்துவிட்டுப் போகிறார்களா?

அவர்களையே பார்த்துக்கொண்டு இவன் நிற்பதை அந்தக் குடும்பத்தலைவன் கண்டான். அவனது பார்வையிலும் கணப்பொழுதில் ஆவல் கலந்தது - இந்த ஐயா கூப்பிட்டு ஏதாவது தருவாரோ, புண்ணியவான்?

அவன் தன்னையே பார்த்துக் கொண்டிருப்பது இவனுக்குக் கூச்சமாக இருந்தது. அவனோடு கதைத்து ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்றுதான் மனது சொல்லியது. ஆனால், அந்தப் பள்ளத்தில் இறங்கி அவனோடு கதைத்துக் கொண்டு நின்றால் பார்க்கிற சனம் என்ன சொல்லும்? இவன் யோசித்துக்கொண்டே நின்றான். இன்னும் கொஞ்சநேரம் நின்றால் அவனே வந்து விடுவான் போலிருந்தது. அதனால் மெதுவாக நடந்து வரத் தொடங்கினான். விட்டுவருகிற போதிலும் திரும்பத் திரும்பப் பார்த்தான். அவனும் இவனையே ஏக்கத்தோடு பார்த்துக்கொண்டு - அந்த நாயைப்போல எப்பொழுது அழைப்பானோ என்ற ஆவலுடன் நின்றான். அறைக்கு வந்து வயிறு நிறையச் சாப்பிட்டு படுக்கைக்குப்

போனபொழுதுதான் அந்தப் பார்வையின் தாக்கம் நெஞ்சிலே 'சுருக்'கிடுவதை உணர முடிந்தது. அவனுக்கு ஒரு உதவியுமே செய்யாமல் வந்துவிட்டமை பெரிய தவிப்பாக மனதை அலைக்கிறது. இந்த மனச் சாந்திக்கவேனும் (சுயநலம்!) அவனுக்கு இரண்டு ரூபாயை விட்டெறிந்துவிட்டு வந்திருக்கலாம்தான்.

பிரச்சினை என்ன என்பதை அறிந்துவிட்டால் மனசு அமைதிடையும் என்றுதான் நம்பியிருந்தான். ஆனால் அதற்கு ஒரு தீர்வு இன்றி உறங்கமுடியாதென்பதை இப்பொழுது உணர்ந்தான்.

சரிதான் போகிறது. உலகத்தில் இப்படி எத்தனை பேர்கள் இருப்பார்கள். தானொருவன் நினைத்துவிட்டால் அவர்களுடைய பட்டினிக்கும் பிரச்சினைக்கும் தீர்வு காணமுடியாது என மனதுக்குச் சமாதானம் சொல்லிக் கொண்டு உறங்க நினைத்தான்.

போர்வையை இழுத்து சரி செய்தவாறு மறுபக்கம் புரண்டான். யன்னலூடு குபுகுபுவென வீசிய பனி கட்டிலைக் குளிராக்கியிருப்பதை உணர்த்தியது - 'சுருக்' - திரும்பவும் வேதாளம் விசுவரூபமெடுத்துக்கொண்டு வந்து மனதைக் கலைத்தது. 'இங்கேயே இப்படிக் குளிர்கிறதே...' அவர்கள் இப்பொழுது எப்படிப் படுத்திருப்பார்கள்.

பஸ் நிலையத்தில் வேடிக்கை விளையாட்டுக் காட்டுகிற அந்தப் பிள்ளைகளை நினைக்கப் பரிதாபமாக இருந்தது. பால்குடி மாறுமுன்னரே தங்கள் வயிற்றுப்பாட்டுக்காக தாங்களே உழைக்கிற அந்தக் குழந்தைகளுக்குப் படுப்பதற்குக்கூட ஒரு வசதியான இடம் இல்லை. வீதி ஓரத்தில், வெறும் நிலத்தில், கடும் குளிரில்,

இருக்கின்ற பழசுகளால் உடலைச் சுற்றிக்கொண்டு படுத்திருப்பார்களோ? பாவம், படுப்பதற்குக்கூட ஒரு இடம் இல்லாவிட்டால் என்ன சீவியமப்பா?

தான் அவர்களது படுக்கையைப் பற்றி யோசிக்கிறேன்; அவர்கள் தங்கள் வயிற்றைப்பற்றி யோசித்துக் கொண்டு கிடப்பார்களோ எனவும் வயிற்றெரிச்சலாயிருந்தது.

இரவு சும்மா அமைதியாகக் கிடப்பதுபோல நடிக்கிறது. இந்த இரவிலேயே எத்தனையோ மனிதர்கள் உறங்குவதற்குக் கூட ஓர் இடமில்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதையெல்லாம் மூடி மறைத்துவிட்டு நல்ல பிள்ளைக்கு நடிக்கிறது இரவு. பொல்லாத இரவு. இவ்வளவு ஓரவஞ்சனையாக நடக்கலாமா?

'இந்த விசித்திரத்தில் எனக்கொரு போர்வை!' எனப் போர்வையைக் கால்களால் உதைத்துவிட்டான். குபுகுபுவென்று வருகிற பனி நன்றாக உடலை அள்ளிக் கொண்டு போகட்டும். படுக்கை அருவருப்பைத் தருகிற விஷயமாகத் தோன்றியதும் எழுந்து யன்னற் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு நின்றான்.

போடிங் சொந்தக்காரரின் மாளிகை (அந்தப் பெரிய வீட்டை வேறு எப்படிச் சொல்வது?) முன்னே விரிந்து கிடக்கும் பரந்த பூமியில் நிமிர்ந்து நிற்கிறது. அந்த மாளிகைக்கு ஆடம்பரப் பூச்சுகள், பூச்செடிகள், நிழல்மரங்கள். இரண்டொரு மனிதர் சீவிப்பதற்கு ஏன்தானோ இந்தப் பெரிய வீடு? உலகத்தில் இப்படி எத்தனை வீடுகள் இருக்கும்? வீதி ஓரங்களையே தஞ்சமென்றிருப்பவர்களுக்கு இவை ஒரு பொருட்டாகவே தெரிவதில்லையா? அன்றாடம் காண்கிற மனிதப்

பிரபுக்களும், அவர்களது ஆடம்பர வாழ்க்கையும், கப்பல் வாகனங்களும் இவர்களது மனதிலே எவ்விதமான பாதிப்பையும் ஏற்படுத்துவதேயில்லையா?

எத்தனையோ பிரச்சினைகள் தலைக்குமேல் இருக்கின்றன. இதற்குப் போய் என்ன சவத்துக்குக் கவலைப் படவேண்டுமென எண்ணியவாறு திரும்பவும் படுக்கைக்குச் சென்றான்.

சும்மா, படுக்க வேண்டும் என நினைத்துவிட்டால் போதுமா? பூதம் விட வேண்டுமே! 'அங்கே அவர்கள் கடும் குளிரிற் கிடந்து விறைக்க நீ மெத்தை தேடிக் கொண்டிருக்கிறாயா' என்று கேட்டது!

இவன் நடுநடுங்கிப் போனான். எழுபத்தைந்து ரூபாய்க்கு ஒரு அறையை எடுத்துக்கொண்டு அதில் தான் மட்டும் குடியிருப்பது எவ்வளவு அநியாயம்? வருஷக்கணக்காக உழைத்தும் மிகவும் குறைந்தபட்ச தேவைகளைத் தானே தேடியிருக்கிறேன் என நினைத்தான். ஒரு மேஜை, ஒரு கதிரை, ஒரு கட்டில் - மெத்தை! தும்புமெத்தைத்தான். 'சியெஸ்ரா?' ஒன்று வேண்ட வேண்டுமென்ற எண்ணம் முன்பு இருந்தது. பின்னர் அந்த எண்ணத்தையும் கைவிட்டான். ஆனால் இப்பொழுது உள்ளதே அதிகம் எனத் தோன்றியது.

அதை நினைத்துக்கொண்டு சிரித்தான். தன் மனதை நினைத்தும் சிரித்தான். 'இப்ப இந்த மண்டையைப் போட்டு உடைக்காமல் படுத்துத் தூங்கு!'

'நோ' இந்த நேரத்தில் அவர்கள் எப்படித் தூங்குகிறார்கள் என்றாவது பார்த்துவிட்டு வரவேண்டும். இல்லாவிட்டால் மனசு தூக்கம் கொள்ளாது.

மாலையில் அவனைக் கண்டபொழுதே கதை கொடுத்திருந்தால் சகலத்தையும் அறிந்திருக்கலாம். இரவுகளில், மழை, பனி நாட்களில் எங்கே உறங்குவார்கள் என்பதையாவது கேட்டிருக்கலாம். பேசாமல் வந்தது மடத்தனம்.

நேரத்தைப் பார்த்துக்கொண்டு அறையைவிட்டு வெளியேறி நடந்தான்.

சில்லிடுகிற குளிர். கடமையே என விழித்துக் கொண்டு தூங்கி வழிகிற வீதி விளக்குகள். அமைதியான ஒன்றேகால் மணித்தெரு, ஊரைக் கூப்பிடும் சாமக்கோழிகள், எங்கேயோ தூரத்தில் சில நாய்களின் அழுகை - யாரை நினைத்தோ?

பஸ் நிலையத்தையும் தாண்டிச் செல்கிறபொழுது யாரோ தூரத்தில் வருவது தெரிகிறது. யாராக இருக்கும்?

அவர்கள் அண்மித்துக்கொண்டு வர... இவன் குறிப்பாகப் பார்த்தான். அவர்களே முதலில் இவனை அடையாளம் கண்டு சைக்கிளிலிருந்து குதித்தனர்.

"ஹலோ... மச்சான்" - சக அறைவாசிகளில் இருவர்.

"இந்த நேரத்தில்... எங்கை போட்டுவாறியள்?" இவன் வியப்போடு கேட்டான்.

அவர்களிடமிருந்து கள்ளச்சிரிப்பு வெளிப்பட்டது. "வேறை எங்கை...? நீ போற இடத்துக்குத்தான்... கள்ளா, எங்களுக்குப் புத்தி சொல்லிச் சொல்லி இப்ப நீ எங்கை போறாய்?" - சாராய நெடி குப்பென முகத்திலடித்தது.

'அட அநியாயமே!' என இவன் விறைத்துப் போய் நின்றான்.

"...சரி...சரி... நாங்கள் ஒருத்தருக்கும் சொல்ல மாட்டம்... நீ போட்டு வா!" அவர்கள் மீண்டும் சைக்கிளை உளக்கத் தொடங்கினர்.

பெருமூச்செறிந்தவாறு மேற்கொண்டு நடந்தான்.

ஒருநாய் - ஒரு கடைவாசலில் சாக்குக் குவியலின் மேல் படுத்திருந்தது. இவனது காலடி ஓசையில் நிமிர்ந்து பார்த்துவிட்டு மீண்டும் படுத்துக்கொண்டது. சில கட்டாக்காலி மாடுகள் தார் ரோட்டின் சூட்டிற்கு வந்து படுத்திருக்கின்றன...

இவன், அவர்களை நினைத்துக்கொண்டு கால்களை விரைவுபடுத்தினான்.

*(வீரகேசரி, 1980)*



# திருப்பங்கள்



வெளியே சைக்கிள் மணி ஒலித்தது. சற்றுநேரத்தில் வீட்டுக்காரி அவன் பெயருக்கு வந்திருந்த தந்தியொன்றைக் கொண்டுவந்து நீட்டினாள். யாழ்ப்பாணத்தில் காலையில் அடித்த தந்தி இரவு நேரம் கடந்த பின்னர்தான் கிடைத்திருக்கிறது. படபடப்போடு பிரித்தான். 'Your father expired funeral tomorrow' (உனது தகப்பனார் காலமாகிவிட்டார். ஈமைக்கிரியைகள் நாளைய தினம்) சுவர்ப் பல்லியொன்று அடித்து வைத்துச் சொல்லியது.

ரவீந்திரன் அதிர்ந்து போனான். 'ஐயா!' என்று ஏக்கப் பெருமூச்சு வெளிப்பட்டது. கால்கள் நடுக்கமெடுத்தன. பக்கத்திலிருந்த கட்டிலில் அமர்ந்தான். கண்களில் சுழற்சி... அறையிலுள்ள சகல பொருட்களும் - 'யாமிருக்கப் பயமேன்?' என அபயமளித்துக் கொண்டிருக்கும் சுவாமிப்படம் முதல் அடுக்கி வைக்கப்பட்டிருக்கும் புத்தகங்கள் ஈறாக - பார்வையிலிருந்து வெகுதூரத்திற்கு விலகிக் கொண்டிருந்தன.

அவன் நாளைக்குச் சமூகத்தில் மதிக்கப்படக் கூடிய பெரிய மனிதனாகப் போகிறான் என்றால் அது ஐயா இட்ட பிச்சைதானே?

நன்றாக நினைவிருக்கிறது. சின்ன வயதில் அவனை விடியப்புறமே எழுப்பிவிடுவார் ஐயா. 'தம்பி... படி ராசா... படி!' இவன் சினத்தோடு எழுந்து கண்களை வேண்டா வெறுப்புடன் கழுவுவான். புத்தகத்தை விரித்து வைத்துக் கொண்டு (படிக்கிறானாம்!) கைவிளக்கோடு சேர்ந்து தூங்குவான். தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருக்கும்

ஐயாவுக்கு இங்கேதான் கரிசனை. படிக்கிறானோ, என்னவோ என்ற தவிப்பு. அடிக்கடி வந்து பார்த்து, "படிக்கச் சொல்லி எழுப்பிவிட்டால்... நித்திரை கொள்கிறாய்...? பஞ்சியைப் பாராமல் படி ராசா...! நல்லாய்ப் படிச்சால்தான் முன்னுக்கு வரலாம்." அந்த ஆதரவான வார்த்தைகள் இன்றும் செவிகளில் ஒலிக்கின்றன. இனி, இப்படியெல்லாம் வழிகாட்ட யார் இருக்கிறார்கள்?

அப்பொழுதுதான் அறைக்குள் நுழைந்த நண்பன் சிவலோகநாதன் கேட்டான் : "என்ன மச்சான் விஷயம்...? ஒரு மாதிரி இருக்கிறாய்?"

கதைக்க முடியவில்லை. முயன்று கதைத்தால் அழுகை வெடிக்கும் போலிருந்தது. தந்திக் கடிதாசியை அவனிடம் நீட்டினான். விஷயத்தை அறிந்த பின்னர் ரவீந்திரனின் முகத்தையே பார்க்க முடியாதவாறு கவலை பொங்கியது நண்பனுக்கு. "இப்ப கவலைப்பட்டு என்ன செய்யிறது ரவி...? எல்லாருக்கும் ஏற்படுகிற முடிவு இதுதானே...? என்ன சுகமில்லாமல் இருந்தவரோ?"

அவன் அதற்குப் பதில் சொல்லவில்லை. நல்லாத்தானே இருந்தார். சடுதியாக என்ன நேர்ந்துவிட்டது?

கடைசியாக மூன்று மாதங்களுக்கு முன்னர் ஊருக்குச் சென்று வந்தபொழுது புகையிரத நிலையத்திற்கு வந்து வழியனுப்பி வைத்த அந்தப் பரிவான முகம் நினைவை ஆக்கிரமிக்கிறது. பிரிய மனமில்லாமல் எவ்வளவு நேரம் கதைத்துக் கொண்டிருந்தார்! "தம்பி...! கெட்ட சகவாசம் கூடாது... நல்ல குணமுள்ள பெடியளோடை சேரவேணும்... பீடி சுருட்டுக் குடிக்கிறவங்கள் உன்னையும் ஏமாத்திக்

குடிக்கப் பழக்கிப் போடுவாங்கள்... கண்டகண்ட பழக்கங்களுக்கு மனத்திலை இடம் குடுக்காமல் போன காரியத்தைக் கெட்டித்தனமாய் முடிச்சுக்கொண்டு வரவேணும்...! எங்கடை குடும்பம் இருக்கிற நிலைமை உனக்குத் தெரியும்... குடும்பம் சீரளியிறதும்... நல்லாய் வாறதும் பிள்ளையளின்ரை கையிலைதான் இருக்கு!" இப்பொழுதும் ஒரு சிறுவனுக்குப் புத்தி சொல்வது போலத்தான் அவரது நினைவு! அவர் கதைப்பதை எவ்வளவு நேரமென்றாலும் கேட்டுக் கொண்டிருக்கலாம். அவ்வளவு பாசம் நிறைந்த வார்த்தைகள். கடினமாகப் பேசத் தெரியாது. பக்குவமாகத் தடவுவது போலக் கதைப்பார்.

அவன் பயணப்படும்பொழுது, ஐயா சைக்கிளில் ஏற்றி வந்து ஸ்டேசனில் விடுவார். கொஞ்சமும் நோக விடமாட்டார். அவனுக்கு ஒரு தலையிடி காய்ச்சலென்றால் துடித்துப் போவார். பாவம், ஐயா சும்மாவா இருந்தார்? விடிந்தாற் பொழுதறிதியும் தோட்ட வேலை வேலையென்று... மண்வெட்டியும் கையுமாக... மண்ணோடு மண்ணாக.

அவன் கண்கள் கலங்கின. அழுகை பொங்கிய பொழுது சொண்டைக் கடித்துக் கட்டுப்படுத்த முயற்சித்தான்.

"இப்ப என்னெண்டு போகப்போறாய் ரவி...? மெயில் றெயினும் போயிருக்கும்." நண்பன் கேட்டான்.

"எப்பிடியாவது போகத்தானே வேணும் சிவா?"

"பஸ் இருக்குதோ தெரியாது... அப்பிடிப் போறதெண்டாலும்... இரவிரவாய் அலைக்கழிவாய் இருக்கும்... மோணிங் றெயினிலை போகலாம்தானே?"

ரவீந்திரன் சீறினான்: “வளர்த்து ஆளாக்கிவிட்ட மனிசன் செத்துப் போய்க் கிடக்குது... இஞ்சை என்னை நிம்மதியாய் படுத்து நித்திரை கொள்ளச் சொல்லுறியோ?”

ஐயாவை அவரது கயிற்றுக் கட்டிலிற் கிடத்தி யிருப்பார்கள். அம்மாவும் அக்காவும் தங்கைகளும் கட்டிலைச் சுற்றி நின்று அழுது குளறுவார்கள். அயலெல்லாம் கூடியிருந்து ஒப்பாரி வைக்கும். அந்த நிலையை உணர்ந்ததும் அவனுக்கு உடனடியாக வீட்டில் நிற்க வேண்டும் போலிருந்தது. அவர்களோடு சேர்ந்துகொண்டு தானும் குளற வேண்டும் போன்ற ஆவேசம்.

சிறுவயதிலிருந்தே ஐயா நாளும் பொழுதும் ஊட்டி வந்த உற்சாகம்தானே படிப்பில் பெரிய ஆர்வத்தையும் ஆசையையும் தூண்டியது? உயர் வகுப்பில் சகமாணவர்களுடன் போட்டி போட்டுக்கொண்டு கல்லூரி... ரியூசன் என அல்லும் பகலும் அயராத படிப்பு.

படிப்பதென்றால் சும்மாவா? எவ்வளவு செலவு. எதையுமே தனது அசுர உழைப்பினால் ஐயா தளராது எதிர் நோக்கினாரே!

இரவு வெகுநேரம்வரை அவன் படித்துக் கொண்டிருந்தால், “தம்பி... இனிக்காணும் ராசா... படு! விடிய எழும்பிப் படிக்கலாம்” - அவனது உடல் நலம் பாதிக்கப்படுமாம்! அதிகாலை இரண்டு மூன்று மணிவரை படிப்பை முடித்து அவன் படுக்கைக்குப் போகும்வரை ஐயாவும் விழித்துக் கொண்டே இருப்பார். நண்பர்களோடு சேர்ந்து படிப்பதற்காக அவன் வெளியே சென்றுவிட்டால் திரும்பும்வரை “தம்பி எங்கை போனவன்?” என அம்மாவிடம் நச்சரித்துக்கொண்டு வழியைப் பார்த்திருப்பார். எவ்வளவு

நேரம் விழித்திருந்தாலும் அடுத்த நாள் விடியப்புறமே - தோட்டவேலைக்காக - அலுக்காமல் சலிக்காமல் எழுந்து விடுவார். 'பாவம் ஐயாவைக் கதிரையில் இருத்தி வைத்து உழைத்துப் போடவேணும்' என ரவி அடிக்கடி நினைத்துக் கொள்வான். அந்த எண்ணத்தில் இப்பொழுது ஏன் இடி விழுந்தது?

இருந்தாற்போல் தலையணையில் விழுந்து முகத்தைப் புதைத்துக்கொண்டு குமுறிக் குமுறி அழத் தொடங்கினான். சிவலோகநாதன் ஓடிவந்து பக்கத்தில் அமர்ந்து அவனது தலையை நிமிர்த்தினான். ஆதரவோடு அணைத்து முகத்தைத் தடவியவாறு ஆறுதல் கூறினான் : "ரவி என்ன இது...? குழந்தைப் பிள்ளை மாதிரி...? டோன்ற் கிறை...! எழும்பு! எப்பிடியாவது இப்ப ஊருக்குப் போகலாம்."

## 2

இரவு பதினொரு மணியளவில் புறக்கோட்டை பஸ் நிலையத்திலிருந்து அநுராதபுரம் செல்கிற பஸ் கிடைத்தது. அநுராதபுரம் சென்று அங்கிருந்து யாழ்ப்பாணம் போகிற வழியைப் பார்க்கலாம் என்ற நினைவில் ஏறிக் கொண்டார்கள். நண்பனது மடியில் அழுது தீர்த்த பின்னர், பஸ்சிற்குக் காத்துநின்ற ஓரிரு மணித்தியாலங்களில் ரவீந்திரனது அதிர்ச்சி ஓரளவு குறைந்தது போலக் காணப்பட்டது. எதையாவது, தேவையானபொழுது கதைத்தான். கூடியகெதியில் வீடுபோய்ச் சேர வேண்டுமே என்ற தவிப்பு மேலோங்கியிருந்தது.

இரவுப் பயணம், சிலரைத் தூக்கம் அணைத்துக் கொண்டது. இன்னும் சிலர் பக்கத்திலிருப்பவர்களை

அணைத்துக் கொண்டிருந்தார்கள். ரவீந்திரன் பின் இருக்கையில் அமர்ந்திருந்தான். அவனுக்கு அருகில் ஒரு பெரியவர். அவர், அவனது மனநிலையை அறியாமலே சம்பாஷிக்கத் தொடங்கினார். அவர் வலிந்து கதைக்கும் பொழுது பேசாமலிருப்பது பண்பற்ற செயலாகவும் பட்டது. பல விஷயங்களையும் விடுத்து விடுத்துக் கேட்டார். சொன்னான்.

*"நீர் என்ன செய்கிறீர்?"*

*இதற்கு என்ன பதிலைச் சொல்வது? பல்கலைக்கழக மாணவன் என உள்ளதை உள்ளபடியே கூறிவிடலாமா? எப்படி முடியும்?*

இதற்கு முன்னர் ஒருநாள் கொழும்பில் அறிமுகம் ஆகிய கனவான் ஒருவரிடம் பட்ட அனுபவம் இன்னும் மறந்து போகவில்லை. அவர் இவனது 'ஏ.எல். றிசல்ட்' டைக் கேட்டார். சொன்னான். பெருமை தொனிக்க. அவர் ஏளனமாகச் சிரித்தார். 'தமிழ் ஸ்ருடன்ஸ்சுக்குப் பரீட்சைகளில் மாக்ஸ் அதிகம் போடுகிறார்களாம்!' பத்திரிகைகளில் வெளிவந்த தலையங்கச் செய்திகள். 'பெருந்தொகையான தமிழ் மாணவர்களுக்கு உயர்தர வகுப்புப் பரீட்சையில் மேலதிக புள்ளிகள்!' அவன் தங்கியிருக்கும் வீட்டுக்கார நோனா கூட அன்றைக்கு அதைத் தூக்கிப்பிடித்துக் கொண்டுவந்து கேட்டாள் : 'சரியில்லாத வேலை தானே?' அவன் அதற்குச் சமாதானம் கூறமுடியாமற் சங்கடப்பட்டான். அப்படி இன்னொரு தலைகுனிவா?

ரவி மௌனம் சாதித்தான். என்ன பதிலைச் சொல்வது? பெரியவர் திரும்பவும் கேட்டார் : "நீர் உத்தியோகம் செய்கிறீரா?" பதில் சொல்லாவிட்டால்

மனிசன் விடமாட்டார் போலிருந்தது ஏன் இப்படித் திருகுகிறார்?

'சொல்வதைச் சொல்லட்டும்' என மனதிலே திடத்தை ஏற்படுத்திக் கொண்டு உள்ளதைக் கூறினான்.

"ஒழுங்காக விடைத்தாள்களைத் திருத்தியிருந்தால் ஒருவேளை உமக்கும் யூனிவேசிற்றியில் இடம் கிடைத்திருக்காது" திட்டவட்டமான தீர்ப்பு!

அவனுக்குப் பெரிய கவலையாக இருந்தது. அல்லும் பகலும் அயராது படித்தது இப்படி ஒரு கெட்ட பெயரைச் சம்பாதிப்பதற்குத்தானா? படித்து உயர்மட்டத்திலிருக்கின்ற கனவான்களே இப்படியென்றால் பத்திரிகைச் செய்திகளைப் பார்க்கின்ற சாதாரண மக்கள் எம்மாத்திரம்? தமிழ் மாணவர்கள் கல்விமுறையில் உள்ள பலவித திட்டங்களினால் தாங்கள் பாதிக்கப்படுவதாக எதிர்ப்புக்குரல் தெரிவிப்பதை அமுக்குவதற்கு மேலிடத்திலுள்ளவர்கள் கிளப்பிவிட்ட புரளிதானே இது?

மூன்று வருடங்களுக்கு முன்னர் தரப்படுத்தல் போன்ற தடைகளைக் கடந்துதானே அவன் பல்கலைக் கழகத்திற்குள் நுழைய முடிந்தது. இப்பொழுது இப்படியொரு பழியா? இந்தப் பழியைச் சுமந்துகொண்டு எப்படி மற்றவர்கள் முகத்தில் விழிப்பது? இப்படி, படித்ததற்காக வெட்கப்பட வேண்டிய நிலைமை வேறு எந்த நாட்டிலாவது ஏற்படுமா?

இனம்புரியாத ஒருவித வேதனை மனதைக் குடைய ஆரம்பித்தது. இது ஐயா இறந்து போய்விட்ட கவலையை விடப் பெரியதாக வருத்தியது.

அந்த ஏழைத் தந்தை அவனை கல்விமானாக உயர்த்துவதற்கு எவ்வளவு கஷ்டப்பட்டார். உயிரை வெறுத்து உடலை உருக்கிக் கல்விச் செல்வத்தை அளித்த ஐயா, இப்பொழுது இருந்தால் இந்தப் பழியை எப்படித் தாங்கிக் கொள்வார்?

பயணம் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பிரயாணிகள் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள். கவலை இல்லாத மனிதர்கள். சாரதியைப் பார்க்கப் பாவமாக இருக்கிறது. இவ்வளவு பேரையும் பாதுகாப்பாகக் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டிய பொறுப்பு அவனுடையது. இந்த நடுநிசியிலும் விழிப்போடு ஓடுவதைப் பார்த்தால் அவனுக்காகவே விழித்திருக்க வேண்டும் போலிருந்தது.

## 3

ஓடிக் கொண்டிருந்த பஸ்ஸை கும்மிருட்டில் நின்று ஒருவன் மறித்தான். பஸ் சடுதியாக நிறுத்தப்பட்டது. அந்தக் குலுக்கத்தில் பலருக்கு உறக்கம் கலைந்தது. 'இவன் இப்படி நிறுத்திப்புறப்பட்டால் எத்தனை மணிக்குத்தான் போய்ச் சேருவது' - முணுமுணுப்புக்கள். அவ்வளவு அவசரமாக போகவேண்டிய ஏதோ தலைபோகிற அலுவல்கள் இருக்கிறது, அவர்களுக்கு!

சாரதி கண்ணாடியினூடாக வெளியே பார்த்து, "மொக்கத?" என்றான். பஸ்ஸை மறித்தவன் அண்மையில் வந்து விவரம் சொன்னான்.

வீதியின் குறுக்கே விழுந்து கிடக்கும் தென்னை மரத்தையும், மறுபக்கமாகப் பள்ளத்தில் பிரண்டு கிடக்கும் லொறியையும் கவனித்த பிரயாணிகள் விபத்தொன்று

நடந்திருப்பதை ஊகிக்கின்றனர். வீதியில் ஒருவன் பிரக்ஞையில்லாமற் கிடந்தான்.

தூக்கங்கள் பறந்துபோக ஒருவரை ஒருவர் முந்திக் கொண்டு வெளியே குதித்தார்கள். நொந்துபோய்க் கிடக்கிறவனுக்கு உதவி செய்வதில் இவ்வளவு ஆர்வம் இருக்கிறதே!

பிணத்தைப் போலக் கிடந்தவனைச் சூழ்ந்து கொண்டு விசாரணை ஆரம்பிக்கின்றது.

"பேச்சு மூச்சில்லாமல் கிடக்கிறானே?" - "என்ன நடந்தது?"

பஸ்சை மறித்தவன் விஷயத்தைச் சொன்னான்;

சற்று முன்னர் அடித்த பலத்த காற்றில் மரமொன்று வீதியின் குறுக்கே சாய்ந்திருக்கிறது. வேகமாக லொறியை ஓட்டிவந்த சாரதி மிக அண்மையில் வரும் வரை அதைக் கவனிக்கவில்லை. கண்டபின்னர் பாரத்தோடு வந்த லொறியின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாதளவு நெருக்கம். மரத்தோடு லொறி புமலாக அடிபட, தூக்கி வீசப்பட்டு மறுபக்கமாக பள்ளத்தில் பிரண்டுவிட்டது. சாரதி தருணத்தில் வெளியே பாய்ந்து தப்பிவிட்டான். சிறுகாயங்கள். அவனது நண்பன் கிளீனருக்கு பலமான அடி. இருளில் எல்லாமே அதிர்ச்சியாக நடந்து முடிந்துவிட்டது. சிரமத்தோடு அவனை இழுத்துத் தூக்கிவந்து வீதி ஓரத்திற் கிடத்திவிட்டு 'யாராவது வரமாட்டார்களா?' என்ற ஏக்கத்தோடு நின்றிருக்கிறான்.

'வெறியிலை வந்திருப்பான்? ஏன் ஒரு நிதானமாக ஓடக்கூடாது?' பஸ்சிலே வந்தவர்களின் அபிப்பிராயமும், அனுதாபமும். "இப்பொழுது என்ன செய்யப் போகிறாய்?"

"எப்படியாவது கொழும்புக்குக் கொண்டுசெல்வது தான் நல்லது. அங்கே எங்கள் கடையும் இருப்பதால் கவனிப்பதற்கு வசதியாயிருக்கும்" என அவன் பதிலளித்தான்.

## 4

சிங்களத்தில் எழுத, வாசிக்க அவ்வளவு தெரியாவிட்டாலும் சிங்களக் குடும்பங்களுடன் இரண்டறக் கலந்திருக்கிற புண்ணியத்தில் பேசவும் பேசுவதைப் புரிந்து கொள்ளவும் ரவீந்திரனுக்கும் நண்பனுக்கும் முடியுமாகையால் அவர்களது சம்பாஷணை விளங்கக் கூடியதாக இருந்தது. அவர்கள் கதைப்பதிலிருந்து அது முந்தல் எனும் இடத்துக்கு அண்மையான ஓர் இடம் என அறிந்து கொண்டனர். முந்தலில் ஓர் அரசினர் வைத்தியசாலை இருக்கிறதாம். ஆனால் அங்கு வைத்திய வசதிகள் குறைவு எனக் கதைத்துக் கொண்டார்கள்.

"நீ சொல்வது போல எப்படியாவது கொழும்புக்குக் கொண்டுபோவதுதான் நல்லது... எப்பிடிக் கொண்டு போகப் போகிறாய்?"

"கொழும்புக்குப் போகிற சாமான் லொறிகளில் போகலாம். இப்பொழுது ஒன்று போனது. ஆனால் அவர்கள ஏற்ற முடியாது என்று சொல்லிவிட்டார்கள்."

"ஏன்?"

"இடமில்லையாம்....! அவர்கள் தமிழ் ஆக்கள்!"

"கொஞ்சம்கூட மனிசத்தன்மை இல்லாதவர்கள்."

சிவலோகநாதனுக்கு அவர்களது இந்த அபிப்பிராயம் கொதிப்பை ஏற்படுத்தியது. "பார் மச்சான், இந்த விஷயத்தையும் துவேசமாய்த்தான் கதைக்கிறாங்கள்." என்றான்.

"ஆனால் இப்படி ஆபத்திலை கைவிட்டுப் போறதும் பிழைதானே...? இவர்களும் அவங்களைப் போலை ராவிருட்டியிலை வீதியிலை ஓடித்திரியிற தொழிலாளியள் தானே....? நாளைக்கு இதே நிலைமை அவனுக்கு நடந்தால் ஆர் பாக்கிறது?" என ரவீந்திரன் நியாயத்தைக் கூறி அவனைச் சமாதானப்படுத்தினான்.

அவர்களது குறுக்கு விசாரணை தொடர்ந்து கொண்டிருந்தது.

"வேறை லொறிகள் வராதா?"

"சாமான் லொறிகள் வரும்."

இதற்குள்ளே சிலர் எப்படி பஸ்சை மறுபக்கம் எடுக்கலாம் என்ற ஆராய்ச்சியில் இறங்கினார்கள்.

"சரி! அப்ப இனி வருகிற லொறியை மறித்துக் கொண்டு போ! நாங்கள் போகிற வழியிலை வந்தால் சொல்லி அனுப்பிவிடுறம்." ஒரு நோயாளிக்கு ஆலோசனை வழங்குகிற வைத்தியரின் கரிசனை!

தென்னைமரம் சாய்ந்து வீதியின் குறுக்கே கிடப்பதால் பஸ்சை மறுபக்கம் எடுப்பது சிரமம். கலந்தாலோசிக்கப்பட்ட பின்னர், எல்லோருமாகச் சேர்ந்து மரத்தை இன்னும் சற்று உயர்த்தினால், ஓரமாகத் திருப்பி, மறுபக்கம் எடுத்து விடலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது.

# 5

அந்த மனிதன் இறந்தவன்போலக் கிடந்தான். கண்கள் மூடிக்கிடக்கின்றன - என்றாலும் மூச்சு இருக்கிறது.

அனைவரும் ஒன்று சேர்ந்தனர், கைகள் உயர்ந்தன. சரிந்திருந்த மரம் மெதுவாக உயர்ந்தது.

"லொறியிலை போனவங்கள் தமிழர் என்றபடியால்தான் தங்களை விட்டுட்டுப் போனவங்கள் என்று அவன் சொன்னான். இவங்கள் துள்ளியடிச்சதைப் பார்த்தால் ஏதோ வெட்டிப் புடுங்கப் போறாங்களாக்கும் எண்டு நினைச்சன்... இப்ப இவங்களும் விட்டிட்டுத் தானே போகப் போறாங்கள்!" சிவலோகநாதன் சினங்கொண்டு கேட்டான்.

இப்பொழுது பஸ் மறுபக்கம் வந்துவிட்டது. 'இனிக் காலைவரை போகமுடியாது தானோ?' என ஏக்கம் படர்ந்திருந்த முகங்களெல்லாம் மலர்ச்சியடைந்தன. ஒருவரை ஒருத்தர் முந்திக்கொண்டு ஏறத் தொடங்கினர்.

"மனிசன் ஐக்கியப்பட்டால் என்னதான் முடியாது? எல்லாரும் ஒன்று சேர்ந்தபடியால்தான் இந்தப் பெரிய மரத்தையே நொடிப்பொழுதில் உயர்த்தி வாகனத்தை மறுபக்கம் எடுக்க முடிந்தது. இப்படித்தான் மனிசர் ஒருத்தருக்கொருத்தர் உதவியாயிருக்க வேணும்." முன்னர் அறிமுகமாகிய பெரியவர் ரவீந்திரனைக் கண்டதும் இப்படிக் கூறிக்கொண்டு பஸ்சில் ஏற ஓடினார்.

"ஐக்கியம், ஒற்றுமை எண்டு சொல்லுறதும் சந்தர்ப்பவாதம்தான். கெதியிலை போய்ச் சேர வேணுமெண்ட எண்ணத்திலைதான் அவங்களெல்லாம் இந்த

மரத்தைத் தூக்கிறதுக்கு ஒண்டு சேர்ந்தார்கள். இல்லாட்டி ஒருத்தரையும் பிடிச்சிருக்கேலாது.'' - பெரியவர் மேல் ஏற்பட்ட சீற்றத்தை ரவீந்திரனிடம் காட்டினான் சிவா.

அதிகம் பேசாமலிருந்த ரவீந்திரனுக்கு இப்பொழுது சிவாவை சமாதானப்படுத்த வேண்டும் போலிருந்தது.

''எந்தப் பிரச்சினையையும் வகுப்பு வாதமாக்கிறதிலை ஒரு பலனும் கிடைக்கப் போறதில்லை... தன்ரை இனத்தவன் எண்டபடியால் நிச்சயம் உதவுவான் என்று லொறிக்காரன் நினைச்சான்... ஆனால் இவங்கள் அந்தக் காரணத்துக்காக ஆவது தங்கடை அற்ப தேவைகளைக் கூட விட்டுக்கொடுக்கத் தயாராயில்லை! மனிசரிலை ஊறிப் போயிருக்கிற சுயநல உணர்வுதான் இது! சிங்களவனாயோ, தமிழனாயோ இருக்கிறதாலை எந்தவிதமாக விஷேச குணமும் தோன்றாது. மனிச வர்க்கத்திலை சுயநலம் கருதாத ஒற்றுமையுணர்வு இருந்தாத்தான் உண்மையான ஐக்கியம் பிறக்கும்.''

பஸ் 'ஸ்ராட்' செய்யப்பட்டது.

''கிட்ட இருக்கிற ஆஸ்பத்திரியிலை கொண்டு போய் முதலுதவியெண்டாலும் செய்திருக்கலாம் தானே?'' சிவலோகநாதன் அபிப்பிராயப்பட்டான்.

ஐயாவைக் கட்டிலில் கிடத்தியிருப்பார்கள். அம்மாவும் தங்கைகளும் அக்காவும் உயிரைமாய்த்துக் கொள்வதுபோலக் குளறிக்குளறி - ரவிக்கு அவர்களோடு சேர்ந்து குளறவேண்டும் போலிருந்தது.

''இனி ஏதாவது லொறி வருமோ தெரியாது!'' திரும்பவும் சிவாவின் நச்சரிப்பு. அவனால் இருப்புக் கொள்ள முடியவில்லை.

- பஸ் ஓடுகிறது!

பின்னே திரும்பிப் பார்த்தான் ரவி. இருள் - போகவா, நிற்கவா? எனத் தவித்துக் கொண்டிருக்கும் ஒரு உயிர் - அவனது அடிபட்ட உடல் - 'செத்துப் போய் விடுவானோ?'

அந்த ஏழைத்தொழிலாளியின் மகன் எங்காவது ஒரு பாவமும் அறியாமற் படித்துக் கொண்டிருப்பான். தனது தந்தையை ஒரு நாளைக்காவது சொகுசாக இருத்தி உழைத்துப் போட வேண்டும் என்று கனவு காண்பான். 'Your father expired funeral tomorrow' என ஓர் இடி விழும்.

இப்பொழுது ரவீந்திரனுக்கும் இருப்புக்கொள்ள முடியவில்லை. இருக்கையை விட்டு எழுந்தான்.

மணியை அடித்ததும் பஸ் நிறுத்தப்பட்டது. பிரயாணிகள் சினத்தோடு திரும்பிப் பார்த்தனர். நடத்துனர் கேட்டான்: "என்ன விஷயம்?"

ரவி தனக்குத் தெரிந்த சிங்களத்தில் பதில் சொன்னான்: "உயிரோடு போராடிக் கொண்டிருக்கிறவனை இப்படி விட்டுப்போறது சரிதானா?"

- சரியான கேள்வி. இனி அவர்கள் எல்லோருமே திரும்ப வேண்டும்.

*(சிரித்திரன், 1980)*

# தயவு செய்து கை போடாதீர்கள்



இரண்டு மணிக்குப் பிறகான இந்த நேரம்தான் சற்று ஓய்வாயிருக்கும் - ஓய்வு எனக்கல்ல, கடைக்குச் சாப்பிட வருபவர்கள் தொகை குறைவாயிருக்கும் என்று அர்த்தம். கதிரை மேசைகளை ஈரத்துணியினாற் துடைத்து கடையைக் கூட்டித் துப்புரவு செய்யத் தொடங்கினேன். காலையில் ஒருமுறை கடை திறப்பதற்குமுன் கூட்டினால் - பிறகு இப்பொழுது.

"வயித்தி...! என்னப்பா அனுங்கிக்கொண்டு நிக்கிறாய்...? கெதியாய் அலுவலைச் செய்து போட்டு... வடையை எடுத்தந்து அலுமாரியிலை போடன்!" - இது முதலாளி. அவரது பாணியே அதுதான் - அதட்டல். எனக்கு எரிச்சலேற்பட்டது. அவர் 'வயித்தி' என்று கூப்பிடுவதிலேயே நக்கல் இருக்கிறது. வயித்தி என்பதில் 'வயிறு' என்ற பதம் அடங்கியிருக்கிறதாம்! - முதலாளிதான் சொல்லுவார், 'நல்ல பேர் வைச்சாங்களடா உனக்கு...! வயித்தியெண்டு...! நீ சாப்பாட்டைக் குறைச்சுப் பிடிச்சியெண்டால் உந்த வயிறு குறையும்!' எனக்கு ஊதியமாக நூற்றிமுப்பது ரூபாயும் மூன்று வேளைச் சாப்பாடும் கிடைக்கிறது. தெரியாதா... அந்த மூன்று வேளைச் சாப்பாட்டுக்காகத்தான் இந்தக் கதையெல்லாம்! ஆனால் இதை ஒரு கதையாகப் பெரிசுபடுத்தக்கூடாது.

வடைகளை எடுத்துவர பின்கட்டிற்கு ஓடினேன். 'முதலாளி... பெரிய முதலாளி...' என மனசு எரிந்தது. எதையும் அவர் சொல்லுமுன்னரே செய்து நல்ல பெயர் எடுக்க வேண்டுமென்று நினைக்கிறவன் நான். அடுத்ததாக

நான் செய்ய இருந்த அலுவலே இதுதான். ஆனால், அந்த மனுசன்... ஏதோ தான் இல்லாவிட்டால் இங்கு வேலையே நடவாது என்பது போலத்தான் கத்தும்.

சமையற்காரன் மணியம், மாவைத் தட்டையாக உருட்டி நடுவிலே துழையிட்டு... அவன் வடை சுடுவதில் வலு விண்ணன்! நின்ற நிலையில் ஒவ்வொன்றாக மாவை உருட்டி உருட்டி எண்ணெயில் போட்டு நூற்றுக்கணக்கான வடைகளைச் சுட்டுத் தள்ளுவான். எவ்வளவு சுறுக்காகச் செய்தாலும் அளவு பிசகாது. ஒரு கையாற் பொத்திப் பிடிக்கக்கூடிய சைஸ். ஒரு புளுகம் வந்தால்... மணியம், ஒவ்வொரு வடையிலும் இம்மியளவு மாவைக்குறைத்து உருட்டி வடைகளின் எண்ணிக்கையைக் கூட்டுவான். பிறகு முதலாளியிடம் போய், 'இவ்வளவு மாவில் இத்தனை வடை சுட்டேன்' எனக் கூறி நல்ல பெயர் சம்பாதிப்பான். பந்தக்காரன்! இது எனக்கு எரிச்சலையூட்டினாலும் அவனோடு ஒன்றும் பேசுவதில்லை. மணியம் வயதிற் குறைவானவனானாலும் கொஞ்சம் தோற்றமான ஆம்பிளை. மட்டு மரியாதையில்லாமற் கதைப்பான். அவன் கதைப்பதைப் பார்த்தால் சிலவேளைகளில் கையைக் காலை மாறி விடுவானோ என்றும் தோன்றும்.

வடைகளைக் குவியலாகக் கண்டதும் அடி மனதில் அமிழ்ந்து போயிருக்கும் ஆசையொன்று கொதியெண்ணை யிலிட்ட அப்பளமாகப் பொங்கியெழுந்தது - வடைகள்... சின்னச் சின்ன... குண்டு குண்டான... குண்டு மணியைப் போன்ற வடைகள்...

'ஒரு நாளைக்கெண்டாலும் அதுகளுக்குக் கொண்டு போய்க் குடுக்கவேணும்' சுப்புறு நினைவில் வந்தான்.

(எனது ஒரே மகன், ஐந்து வயது. பதிவுப் பெயர் சுப்புரமணியம். இவள் கனகம் - அவனது அம்மா கூப்பிடுகிற சுகத்திற்காக... 'சுப்புறு'... ஆக்கினாள்.)

"என்னப்பா... யோசிச்சுக்கொண்டு நிக்கிறாய்...? எடுத்துக்கொண்டு போவன்!" மணியம் அடுப்புவெக்கையை என்னோடு தீர்த்தான். இவங்களுக்கு கொஞ்சமென்றாலும் அன்பு ஆதரவாகப் பேசவராதோ?

வடைகளை கூடையிற் சுமந்துகொண்டு வந்தபொழுது... மீண்டும்... 'ஒரு நாளைக்கெண்டாலும் அஞ்சாறு வடை கொண்டுபோய் அதுகளுக்குக் குடுக்கவேணும்' - மனசு... மன்றாட்டமாக... பயபக்தியாக - 'சரி... பாப்பம்!' - ஒவ்வொரு நாளும்தான் இந்த 'பாப்பம்' என்று பதில் கிடைக்கிறது எப்பொழுதுதான் பார்க்கலாம் - என்கிற மனசு.

நெடுநாளாகத்தான் இந்த ஆசை மனசைப்போட்டு அலைக்கிறது. ஒரு வடைப் பார்சலை கனகமும் சுப்புறுவும் கண்டால் கண்கள் எப்படி ஆச்சரியத்தால் விரிந்து பிரமிக்கும்! ஆனால் ஐந்தாறு வடை வேண்டுவதென்றால் சாதாரண காரியமா? இப்பொழுது வடை முன்னரை விட விலை இரண்டு மடங்காகி விட்டது. வெளியே பெற்றோலின் விலை ஏறியதால் இங்கு வடைகளின் விலையும் ஏறியது. அதற்குக் கொடுக்கிற காசிற்கு ஒரு நாளையச் சீவியத்தைக் கொண்டுபோகலாம். இந்த விசித்திரத்தில் சொட்டைத் தீன்களுக்குச் செலவு செய்வதைப் பற்றி நினைக்கத்தான் முடியுமா? 'பரவாயில்லை' என நினைத்துக்கொண்டு ஒரே ஒரு நாளைக்கு வேண்டலாம்... ஆனால், இதற்குள்ளேயே கிடக்கிறவன்... எத்தனை பேருக்கு இந்தக் கையாலே வடை

பார்சல் கொடுக்கிறவன்... காசு கொடுத்து வேண்டுவதென்றால் மனசு பின் வாங்குகிறது.

முதலாளியிடமாவது வாயை விட்டுக் கேட்கலாம். 'விடிந்தாற் பொழுதறுதியும்' அவருக்கென்றே உழைத்துக் கொடுக்கிறன். (இது கனகத்தின் குற்றச்சாட்டு) கேட்டால் இல்லையென்றா சொல்லிவிடுவார்? கனகம் அடிக்கடி ஏசுவாள் - 'உங்களுக்கு ஒரு நேரகாலம் இல்லையோ? வீடுவாசல் இல்லையோ?' - 'பெண்டில் பிள்ளையில்லையோ? - இப்படி விடிஞ்சாற் பொழுதறுதியும் அந்தக் கடையே கதியெண்டு கிடக்கிறியள்... அந்த மனிசன் உங்களுக்கு என்னத்தை அள்ளிக் கொட்டுது? அவள் மடைச்சி. அவளுக்கு என்ன தெரியும்? முதலாளி எவ்வளவோ நல்லவர். சந்தர்ப்பங்களில் சீறிச் சினந்தாலும் அவருக்கு எவ்வளவோ நல்ல மனசு இருக்கிறது. இல்லாவிட்டால் மூன்று வருடங்களுக்கும் மேலாக என்னை நிரந்தரமாக! வைத்திருப்பாரா? இந்தச் சாப்பாட்டுக் கடைக்கு வேலைக்கென வரும் பெடியள் வந்த சுவடு தெரியாமல் திரும்புகிற (அல்லது திருப்பப்படுகிற) சங்கதியெல்லாம் அவளுக்கு எப்படித் தெரியும்?

ஆனால் எனக்கென்னவோ அவரிடம் கேட்கவே மனசு வராது. அவரது கண்டிப்பான பேச்சுக்களாலும் அதட்டல்களாலும் அவரிடம் ஒருவித பயம் கலந்த மரியாதையே ஏற்படுகிறது. கையை நீட்டிச் சம்பளம் வேண்டும் மனிசனிடம் எப்படி இதையெல்லாம் போய்க் கேட்டுக்கொண்டு நிற்பது என்ற எண்ணமும்.

ஒரு நாளைக்கு எப்படியும் கேட்கத்தான் வேண்டும். இதிலே கூச்சப்பட என்ன இருக்கிறது? 'இன்றைக்குக்

கேட்கலாம், இன்றைக்குக் கேட்கலாம்' என்று ஒவ்வொரு நாளும் நினைத்துக் கொண்டாலும் அலுவல் முடிந்து போகும் நேரத்தில் அநேகமாக வடை முடிந்து போயிருக்கும். அல்லது முதலாளியின் 'மூட்' குழம்பிப் போயிருக்கும்.

கூடையிற் கொண்டுவந்த வடைகளை கடையின் முன்பக்கத்திலிருந்த கண்ணாடி அலுமாரியிற் கொட்டிய பொழுது, சில வடைகள் கால் முளைத்த கோழிக் குஞ்சுகள் போல 'கீர்ர்' ரென மறுபக்கத்திற்கு உருண்டோடின. இதைப் பார்க்கும்பொழுது தப்பிப் பிழைப்பதற்காக அவை கைகளை விட்டு ஓடிப்போவதைப் போல சிரிப்பாக இருந்தது. வருடக்கணக்காக அவற்றோடு உள்ள பரிச்சயம்தான் இப்படி, உயிருள்ள சீவன்களோடு பழகுவதைப் போன்ற உணர்வைத் தருகிறது போலும். அல்லது ஒரு பார்சலை பிள்ளைக்குக் கொண்டு போய்க் கொடுக்க வேண்டுமென்ற ஆசைதான் நாளுக்கு நாள் வளர்ந்து அப்படி அவற்றின்மேல் ஒருவித ஆசையும் இரக்கமும், பிரமையும் ஏற்படுகிறதோ என்றும் புரியவில்லை.

கண்ணாடி அலுமாரியில் கதவைப் பூட்டிவிட்டு வந்து பார்க்கும்பொழுதும், பன்றிக்குட்டிகளை அடைத்துவிட்டு வந்தது போல... அவை ஒரு பக்கமாகக் குவிந்து கிடப்பது போல... ஒரு மூலைக்கு வந்து ஒன்றையொன்று இடித்துக்கொண்டு வெளியேறத் துடிப்பது போல இரக்கமான தோற்றத்தையே அளிக்கிறது. ஆனால் முதலாளியே அவற்றில் கரிசனைப்படுவது மாதிரி கதவின் மேல் 'தயவு செய்து கை போடாதீர்கள்' என்ற வாசகம் பொறிக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கட்டுப்பாடு எனக்குப் பொருந்தாது என்பதும், கதவைத் திறந்து கைபோடும்

உரிமை எனக்கு மாத்திரம் இருப்பதும்... நினைக்கையில் ஏதோ கொம்பு முழைத்த மாதிரி உற்சாகம்!

இந்த யோசனைகளில் நின்றபொழுது முதலாளியின் அதட்டற்குரல் மீட்டது. "வயித்தி...! எங்கையப்பா ஏமலாந்திக் கொண்டு நிக்கிறாய்...? வந்த ஆக்களைக் கவனியாமல்?"

அப்பொழுதுதான் கவனித்தேன் - வந்திருப்பவர் இராமச்சந்திரன் ஐயா. அவரிடம் 'என்ன வேண்டும்?' என்று கேட்டு நேரத்தைச் சுணக்காமல் ஓடிப்போய் தட்டிலே வடைகளை எடுத்து வந்தேன். எனக்குத் தெரியும் - இப்படி ஆட்களையும் அவர்கள் வருகிற நேரத்தையும் கொண்டே அவர்களது தேவையை அனுமானிக்க. என்றாலும் ஒரு சம்பிரதாயம் போல வருபவர்களிடமெல்லாம் முகத்தை மலர்த்தி... 'ஐயாவுக்கு?' என்று கேட்க வேண்டும்.

ஆட்கள் வருகை ஓரளவு கூடிக் கொண்டிருந்தது. அலுவலகங்கள் முடிகிற நேரமாதலால், இனி சற்று அதிகமாகத்தான் இருக்கும். எல்லோரையும் முகம் கோணாமல் சுழன்று சுழன்று கவனிக்க வேண்டும். அலுவலகத்தில் மேலதிகாரிகளின் பாய்ச்சலை என்னிடத்தில் தீர்த்துவிட்டுப் போகிறவர்களும் உண்டு. அதனால் சற்றும் சுணக்கம் ஏற்படாமல் சுழல வேண்டும். இப்படி, வாடிக்கையாக வருபவர்கள், எப்போதாவது ஒருநாளைக்கு வருபவர்கள்... கிராமப்பக்கத்திலிருந்து ரெளனுக்கு அலுவலாக வரும்பொழுது சாப்பாட்டுக்கு வருபவர்கள்... எல்லோருக்கும் முகத்தைச் சுளிக்காமல் சேவை செய்ய வேண்டும்.

இதற்குள்ளே 'ரீமேக்கர்' வந்து 'சீனி இல்லை' என முறைப்பாடு செய்தான். முதலாளியிடம் சொல்லிவிட்டு பக்கத்திலுள்ள கடைக்குச் சீனி வேண்டுவதற்காக ஓடினேன். இது எனக்குச் சந்தோஷத்தைத் தருகிற விஷயம். (இதில் எனக்கு ஏதோ வெட்டு இருப்பதாக மணியம் சந்தேகப்படுவான்: ஆனால் பக்கத்துக் கடையில் கடனுக்குத்தான் சாமான் வேண்டுவது. பிறகு முதலாளிதான் கணக்குத் தீர்ப்பது. ஒரு வெட்டுக் கொத்துக்கும் இடம் கிடையாது. சக தொழிலாளர்களுள் என்னையே ஒரு பெரியவனாகக் கணித்து, முதலாளி அலுவல்களைக் கூறுவதுதான் சந்தோஷத்தைத் தருகிற விஷயம். இதனால் குசினிப் பக்கத்தை அடிக்கடி கவனித்து, முதலாளியிடம் கூறி தேவையானவற்றை நேரத்துக்கு நேரம் வேண்டிப்போடுவேன். இப்படிச் செய்வதால் இந்தச் சாப்பாட்டுக் கடையை நானே நிர்வகிப்பது போன்ற திருப்தியும் ஏற்படுகிறது.

ஆனால் மணியம் சில வேளைகளில் நேரே முதலாளியிடம் போய் 'இன்ன சாமான் வேண்டும்' என்று கூறிவிடுவான். எனது தலைமையைப் பறிப்பதற்குத்தான் அவனுக்கு இந்தக் குறுக்கால் போகிற புத்தி வருகிறது. ஆனால் யார் சொன்னாலும் முதலாளி என்னையே கூப்பிட்டனுப்புவார். இது, அவருக்கு என்மேலேயே நிறைந்த நம்பிக்கை இருக்கிறது என்பதைத்தானே காட்டுகிறது?

இதனாற்தான்... மறந்தும்கூட... கடையிலிருந்து எதையும் ஒருபோதும் சுருட்டிக்கொண்டு போனதில்லை. அது பெரிய துரோகமான செயல். உண்ட வீட்டுக்கு

இரண்டகம் செய்வது போல. சில சமயங்களில்... 'அஞ்சாறு வடையை தெரியாமல் எடுத்துக்கொண்டு போனால் என்ன' என்ற சபலமான எண்ணமும் தோன்றும். அடுத்தகணமே என்னை நினைத்துக் கூசிப்போவேன். 'சீ!, என்ன மனசப்பா இது!' என்று அடங்கிப் போவேன்.

ஒரு வடைப் பார்சலைக் கொண்டுபோய் சுப்புறுவிடம் கொடுக்க அவன் காணாததைக் கண்டவன் போல அந்தப் பார்சலைப் பிரித்து, ஆவலோடு ஆசையோடு சாப்பிடுவதை மனசார நினைத்து... நினைத்து...

எப்படியாவது ஒரு நாளைக்குக் கொண்டுபோய்க் குடுக்க வேணும்... காசைக் குடுத்தெண்டாலும் வேண்ட வேணும்... காசைக் கொடுத்துக் கேட்டால் முதலாளி, 'என்னடா...? என்னட்டையே காசு நீட்டி வேண்டிற அளவுக்கு நீ பெரிய ஆளாகியிட்டியோ?' என்று நினைக்கவும் கூடும். அதைத் தவறாக, தன்னை அவமதிப்பதாக் கருதவும் கூடும்.

ஐந்து மணியளவில் கனகேந்திரன் ஐயாவும் சிற்றம்பலம் ஐயாவும் வந்தார்கள். முதலாளியைப் பார்த்து முகஸ்துதிச் சிரிப்புடன் படியேறினார்கள்.

"என்ன...? சம்பளமெல்லாம் கூட்டியிருக்கிறாங்களாம்...!" என முதலாளி அவர்களிடம் கேட்டார் - பெரிய மகிழ்ச்சியை முகத்தில் காட்டிக் கொண்டு.

"என்னத்தை... எழுபது ரூபாவைத்தானே கூட்டியிருக்கிறாங்கள்... அது எந்த மூலைக்குக் காணும்?" எனக் கனகேந்திரம் ஐயா கூறியவாறு உள்ளே வந்து கதிரையில் அமர்ந்தார்.

என்ன... எழுபது ரூபாய் கூட்டப்படுகிறதா? தட்டிலே வடையை எடுத்துவந்து அவர்கள் முன்னால் வைத்துவிட்டு அவர்களது கதைக்குக் காது கொடுத்துக் கொண்டு நின்றேன்.

"வைத்தி...! ரெண்டு ரீ கொண்டு வா!" - வடைகளைச் சாப்பிட்டுக் கொண்டே சிற்றம்பலம் ஐயா ஓடர் தந்தார்.

"ரெண்டு... கப் ரீ!" எனது கத்தலைக் கேட்டதும் கனகேந்திரன் ஐயா காதைப் பொத்தினார். "பயப்பிட வேண்டாம்... இனிக் கத்தமாட்டன்... ஒருக்கால் கத்தினாலே அவனுக்குக் கேட்டிடும்" என்றேன். "என்ன ரீ மேக்கர் பக்கத்துக் கடையிலேயா நிக்கிறான்?" என சிற்றம்பலம் ஐயா பகிடிவிட்டார். சிரிப்பைக் காட்டினேன்.

ரீயை அவர்கள் முன் கொண்டுவந்து வைத்துவிட்டு மனதுக்குள் குமைந்து கொண்டிருந்த ஒரு சந்தேகத்தைக் கேட்டேன் :

"ஐயா...! எல்லோருக்கும்தான் சம்பளம் கூட்டுறாங்களோ... அல்லது உங்களைப் போல பெரிய உத்தியோகத்தருக்கு மட்டும்தானோ?"

"ஆர் சொன்னது எங்களுக்கு மட்டுமெண்டு...? எல்லாருக்கும்தான்...! சாதாரண ஒரு லேபரருக்கும் இது கிடைக்கும்."

ஒரு சாதாரண லேபரரா்க என்னை நினைத்துக் கணக்குப் போட்டுப் பார்த்தேன். அப்பாடி! எனது சம்பளத்தில் சரி அரைவாசியளவு சடுதியாகக் கூடுமானால்...? அதிசயமாக இல்லையா? அதைக் கற்பனை செய்து

பார்க்கவே இன்பமாக இருந்தது. அதற்குப் பிறகு நான் நினைத்தபடி வடைப்பார்சல் வேண்டலாம். கனகத்துக்கும் சுப்புறுவுக்கும் வயிறு நிறையச் சாப்பிடக் கொடுக்கலாம்... உடுதுணிகள் வேண்டிக் குடுக்கலாம். இப்பொழுது கிடைக்கும் நூற்று முப்பது... அதிலும் கழிவுகள் போக நூறு அளவில் கிடைக்கும். இதை வைத்துக்கொண்டு அன்றாடச் சீவியத்தைக் கொண்டுபோகிற ரகசியம் என்னைவிட கனகத்திற்குத்தான் தெரியும். இந்த அளவிற்காவது புருஷலட்சணத்தைக் காப்பாற்ற முடிகிறதென்றால்... அது முதலாளியின் புண்ணியம் தானே?

என் முகத்தைக் கவனித்துக் கொண்டிருந்த கணேந்திரன் ஐயா, என்ன நினைத்தாரோ... "ஏன் வைத்தி.. தனியார் துறைக்கும்தான் சம்பளம் கூட்டுறாங்களாம்... உனக்கும் கிடைக்கும்" என்றார்.

அந்தக் கணத்தில் ஒரு தலைகால் புரியாத சந்தோஷம் தோன்றியது. எனக்கு இது புதுமையாகவும் இருந்தது. உண்மையாக இருக்குமோ? பிறகு நினைத்தேன்; கணேந்திரன் ஐயா என்னோடு பகிடிதான் விடுகிறார். எனக்குச் சம்பளம் கூட்டப்படுவதென்றால் அது நம்பக்கூடிய கதையா? ஒருவேளை அப்படியும் நடந்தால்...? இந்த முறை சம்பளம் எடுக்கும்பொழுது முதலாளி அதையும் சேர்த்து இருநூறு ரூபாயாகக் கணக்குப் போட்டுத் தருவாரோ? ஓ! அப்படியென்றால் எவ்வளவு அருமை! ஒரு நாளைக்குச் சுடுகிற அவ்வளவு வடைகளையும் வேண்டிக்கொண்டு போய் வீட்டிற் படைக்கலாமே!

ஆனால்... பொய்! அப்படி ஒருபோதும் நடக்காது. அதை நினைத்து வீணே மனக்கோட்டை கட்டுவானேன்?

முன்னரும்தான் சம்பள உயர்வு... சம்பள உயர்வு என்று கடைக்கு வந்து போகிறவர்களெல்லாம் கதைத்தார்கள். ஆனால் எனது சம்பளத்தில் ஒரு 'வெள்ளைச் சல்லியும்' கூடவில்லையே? நான் இதற்கெல்லாம் லாயக்கானவனில்லை. விடியற்காலை ஐந்து மணிக்கே வேலைக்கு வந்து... இரவு பத்துப் பதினொரு மணிவரை வேலை செய்கிறேனே... நல்லநாள் பெருநாள் என்று கூட இல்லாமல்... சனி, ஞாயிறறுக்கிழமைகள் பாராமல்... உழைக்கிறேனே... இதைப்பற்றி யார் கவனிக்கிறார்கள்? - நினைப்பதோடு சரி. அதற்குமேல் மூச்சு வெளிப்படாது. கடையில் ஒரு வெத்திலை பாக்கு எடுத்தாலே கணக்கில் குறித்துவிடுவார் முதலாளி. பிறகு சம்பளத்தில் கழிக்கப்படும். இந்த விசித்திரத்தில் சம்பள உயர்வா?

எனக்குப் பெரிய கவலையாயிருந்தது. பத்து வயதிலேயே ஆச்சி இறந்து போக அப்பு இன்னொருத்தியை மணந்துகொள்ள... வீட்டைவிட்டு வெளியேறியவன் நான். பல கடைகளில் எடுபிடி வேலைக்காரனாக, சைக்கிளில் சென்று கொமிசனுக்கு வியாபாரம் செய்பவனாக, மிட்டாய், ஐஸ்கிரீம் விற்பவனாக... இப்படிப் பல விதமான தொழில்கள். எல்லாமே நிரந்தரமற்ற தொழில்கள். நாற்பது வயதுக்குப் பிறகு... இருபது வயது அழகியாக... ஏழ்மையின் பிடியிலிருந்த கனகம்மாவைச் சந்திக்க நேர்ந்து... அவளைக் கைப்பிடித்து... இப்பொழுது ஐந்து வயதில் சுப்புறு!

இதையெல்லாம் நினைத்துக் கொண்டிருந்த பொழுது இனம்புரியாத வேதனையொன்று நெஞ்சை அலைக்கத் தொடங்கியது. கனகத்தையும் சுப்புறுவையும் நினைக்கையில் அழுகையே வந்துவிடும் போலிருந்தது.

அநாதையாக ரோட்டு நாய் போலத் திரிந்த எனக்கு வந்து சேர்ந்த பந்தங்கள்! பாவம், அதுகளோடு எப்பொழுதுதான் சந்தோஷமாக இருந்திருக்கிறேன்?

விடிய, சுப்புறு எழுவதற்கு முன்னரே வெளிக்கிட்டால் பிறகு, அநேகமாக அவன் உறக்கத்திற்குப் போன பின்னரே படுக்கைக்குப் போகிறேன். படுக்கையில் கனகம் குறைநிறைகளைச் சொல்லுவாள்.. கஷ்ட நஷ்டங்களைச் சொல்லுவாள். மௌனமாகவே கிடப்பேன். அவளது பிரச்சினைகளுக்கு என்னால் தீர்வு காண முடிவதில்லை... எனது பிரச்சினைகளுக்கு அவள்தான் தீர்வு காணவேண்டும். நான் கொடுக்கும் சொற்ப பணத்தை வைத்துக்கொண்டு எப்படித்தான் சமாளிப்பாளோ?

பொழுது இருட்சியடைந்து கொண்டிருந்தது. கடைக்கு எத்தனையோ பேர் வந்து போகிறார்கள். எல்லோரையும் கவனிக்கிறேன். ஆனால் வேதனைச் சுமையொன்று நெஞ்சை அழுத்திக் கொண்டிருக்கிறது. என்னவென்று தெரியாதவலி. ஏதோ ஒரு பயம். அது பயமா? அல்லது கவலையா? எதுவோ இல்லாமற்போய் விட்டமாதிரி... ஏதோ ஒரு தவறு செய்துவிட்ட மாதிரி... எதையோ இழந்துவிட்ட மாதிரி...

எவ்வளவோ முயன்று பார்த்தும் கவலையை அடைக்க முடியவில்லை. பிறகு, ஒரு முடிவெடுத்துக் கொண்டு முதலாளியிடம் போனேன்.

காசு மேசையில் இருந்த முதலாளிக்கு அண்மையாகச் சென்று, கதைக்கத் தோன்றாததால் பேசாது நின்றேன். எனது வித்தியாசமான தோற்றத்தைப் புரிந்துகொண்டு போலும்;

"என்ன வயித்தி...? ஒரு மாதிரி நிக்கிறாய்?" எனக் கேட்டார் முதலாளி.

பதில் பேசமுடியாமல் இருந்தது. தலையையும் நிமிர்த்த முடியாமலிருந்தது. துக்கம் முட்டிக்கொண்டு நின்று தொண்டையில் நோவெடுத்தது. கதைப்பதற்காக வாயைத் திறந்தால் அழுகை பொத்துக்கொண்டு வந்துவிடுமோ என்றும் தோன்றியது.

"என்ன வேணும்...? சொல்லு...! பயப்படாமல் கேள் வயித்தி!"

அப்பொழுதுதான் முதலாளியை நிமிர்ந்து பார்த்தேன். கண்ணீர் முந்திக் கொண்டு வந்தது.

அவர் 'பயப்படாமல்!' என்று சொன்னதுதான் கண்ணீரை வரவழைத்தது. வழக்கத்திற்கு மாறாக, நினைத்ததற்கும் மாறாக அவர் ஆதரவாகப் பேசியதுதான் என்னை உருக்கியது.

"என்ன வயித்தி... என்ன நடந்தது...? மணியத் தோட்டை ஏதாவது புடுங்குப்பாடே?" முதலாளியும் பதட்டப்படத் தொடங்கினர்.

என்னையறியாமலே தலை திரும்பவும் குனிந்து கொண்டது. அவரது முகத்தை எதிர்கொள்ள முடியவில்லை. தலைமுடியூடு கைவிரல்களை விட்டுக் கோதினேன். அப்படிச் செய்வதால் நான் உணர்ச்சி வசப்படாமல் நிற்பதற்கு முயன்றேன்.

"வயித்தி! நிமிர்ந்து என்னைப்பார்...! விசயத்தை என்னெண்டு சொல்லடாப்பா!"

நிமிர்ந்து பார்க்காமலே சொன்னேன் : "சரியான நெஞ்சுநோவாய் இருக்குதையா!" நெஞ்சைக் கையினால் அழுத்தத் தொடங்கினேன்.

"அதென்ன...? இருந்தாப்போலை நெஞ்சக்குத்து?"

"இல்லை ஐயா... கொஞ்சநாளாய் இருந்தது... நீங்கள் பேசுவியளெண்டு நான் சொல்லவில்லை... இப்ப கடுமையாயிருக்குது."

"எனக்கென்ன விசரே... பேசுறதுக்கு...? நெஞ்சுக்குத்தெண்டால் கவனமாயிருக்க வேணும்... டொக்டரிட்டைக் காட்டினனீயே?"

"இல்லை..." தலையைச் சொறிந்த கையால் நாடியைச் சொறிந்துகொண்டு ஏதோ பிழைசெய்தவனைப் போல முதலாளியை அரை குறையாகப் பார்த்தேன்.

"வயித்தி... நெஞ்சில வருத்தமெண்டால் சும்மா விட்டுக் கொண்டிருக்கக்கூடாது... டொக்டரிட்டைக் காட்டினால்... அவையள் சோதிச்சுப் பார்த்து என்ன வருத்தம் எண்டு சொல்லுவினம்..."

"எங்கை ஐயா நேரம் கிடைக்குது?"

"நீ என்னப்பா மடைக்கதை பேசிறாய்...? என்னட்டைக் கேட்டால் விடமாட்டேனே?" அவர் கடிந்து கொண்டதும் அடங்கிப்போய் நின்றேன்.

எனது குடும்பத்தைப் பற்றி முன்னரே ஓரளவு தெரிந்திருந்தும் இப்பொழுது திரும்பவும் கனகத்தைப் பற்றியும் மகனைப் பற்றியும் அக்கறையாக சுகநலன்களை விசாரித்தார்... பிறகு,

"நீ... இப்ப வீட்டுக்குப் போகப் போறியோ?"

"போனால் கொஞ்சம் ஆறுதல் எடுத்திட்டு நாளைக்கு விடிய வரலாம்!"

"சரி...! இப்ப போயிட்டு நாளைக்குக் காலமை சுகமாய் இருந்தால் வா...! இல்லாட்டில் டொக்டரிட்டைக் காட்டி மருந்து எடுத்திட்டு... மத்தியானத்துக்குப் பிறகு வா!"

"சரி ஐயா!"

முதலாளி என்மேல் இவ்வளவு கரிசனையும் வைத்திருப்பதை நினைக்கப் போகாமல் நிற்கலாமா என்றும் தோன்றியது. நன்றி பெருகியது. அவர் போகச் சொன்ன பின்னரும் போகாமல் நின்றேன். அவரை நிமிர்ந்து நிமிர்ந்து பார்த்தேன்.

"பிறகென்ன யோசனை...! போவன்!"

"இல்லை ஐயா... ஒரு அஞ்சு வடை தந்தியளெண்டால் நல்லது..."

"நெஞ்சுக்குத்துக்கு ஏனப்பா வடை?"

இதற்கு என்ன காரணத்தைச் சொல்லலாம் என்று தெரியாமல் ஒரு புதுமணப் பெண்ணைப் போல நாணினேன். பிறகு சமாளித்துக்கொண்டே, "பிள்ளைக்குக் கொண்டுபோய்க் குடுக்கலாமெண்டு..." என மென்று விளங்கினேன்.

முதலாளி மணியத்தைக் கூப்பிட்டார். ஓடிவந்தான்.

"இவனுக்கு ஒரு அஞ்சு வடை பாசல் பண்ணிக்குடு!"

நல்ல போஷாக்கில் வளர்ந்த குழந்தைகளைப் போல குண்டு குண்டாக முழியைப் பிதுக்கிக் கொண்டு கிடக்கும் வடைகளை ஒரு முறை பார்த்தேன்.

மணியம் என்னை விசித்திரமாகப் பார்த்தான். அவனை ஏறிட்டுப்பார்க்க முடியாதபடி கூச்சமாயிருந்தது.

எத்தனையோ பேருக்கு... எத்தனையோ வடைகள் பார்சல் பண்ணிக் கொடுத்திருக்கிறேன்... எனக்கு மணியம் வடை பார்சல் பண்ணுவதைப் பார்க்கையில் அவனிடமே பணிந்து போய் விட்டதைப் போன்ற ஆற்றாமையுணர்வு குற்றியது. அவன் பார்சல் பண்ணிக் கொண்டு வரும்வரையும் யாருக்கோ மெளன அஞ்சலி செலுத்துபவனைப் போல நின்றேன்.

"இந்தா!"

மணியத்தை நிமிர்ந்துகூடப் பார்க்காமல் பார்சலை வேண்டினேன். முதலாளியைப் பார்த்து நன்றியோடு, "அப்ப... வாறன் ஐயா!"

முதலாளி சரி என்பதுபோலத் தலையை ஆட்டினார்.

வடைப்பார்சல் கைக்கு வந்துவிட்டது! நேரத்தோடு வீட்டிற்குப் போகவும் கிடைத்திருக்கிறது! சந்தோஷம் பெருகியது! வீறு நடை போடப் போகிறேன்.

எனக்கு நெஞ்சுக்குத்தும் இல்லை, ஒரு மண்ணாங்கட்டியும் இல்லை. தலைகால் புரியாத மகிழ்ச்சியில் நடக்கத் தொடங்கினேன். பிறகு, ஒரு சந்தேகத்தில் முதலாளியைத் திரும்பிப் பார்த்தேன்.

முதலாளி எனது கணக்குப் கொப்பியில் கை போடுவது தெரிந்தது.

- இப்பொழுது உண்மையிலேயே நெஞ்சுக்குத்து வந்துவிடும் போல... ஏதோ எரிவு... ஏதோ... அடைப்பு... ஏதோ இழப்பு நேர்வது போன்ற உணர்வு...

(யாவும் கற்பனை)

*(சிரித்திரன், 1981)*



# சுதாராஜ் விவரக் குறிப்பு

பெயர் : சிவசாமி இராஜசிங்கம்.

கல்லூரிப்படிப்பு : யாழ் இந்துக் கல்லூரி.

மேற் படிப்பு : மொரட்டுவ பல்கலைக் கழகம்.

தொழிற்துறை : பொறியியலாளர்.

பணிபுரிந்த நாடுகள்: இலங்கை, ஈராக், குவைத், பாகிஸ்தான், இத்தாலி, கிரீஸ், ஏமன், அல்ஜீரியா, இந்தோனேசியா, எகிப்து.

எழுத்துத்துறை பிரவேசம் : 1971ம் ஆண்டு.

முதற் சிறுகதை : இனி வருமோ உறக்கம்?

நூல்கள் :
1. பலாத்காரம் (1977) சிறுகதைத் தொகுப்பு (தமிழ்ப்பணிமனை வெளியீடு).
2. இளமைக் கோலங்கள் (1981) நாவல் (வீரகேசரிப் பிரசுரம்).
3. கொடுத்தல் (1983) சிறுகதைத் தொகுப்பு (சிரித்திரன் பிரசுரம்).
4. ஒரு நாளில் மறைந்த இரு மாலைப் பொழுதுகள் (1989) சிறுகதைத் தொகுப்பு (மல்லிகைப் பந்தல் வெளியீடு).

5. காட்ட தொஸ் பவறமுத? (1999) சிறுகதைத் தொகுப்பு, சிங்கள மொழி பெயர்ப்பு (மல்லிகைப் பந்தல் வெளியீடு).

6. சுதாராஜின் சிறுகதைகள் (2000) தொகுப்பு (தேனுகா பதிப்பகம் வெளியீடு).

7. காற்றோடு போதல் (2002) சிறுகதைத் தொகுப்பு (எம்.டி.குணசேன வெளியீடு).

8. காட்டில் வாழும் கரடி நாட்டுக்கு வந்த கதை (2001) சிறுவர் இலக்கியம். (இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் வெளியிடப் பட்டது).

9. பறக்கும் குடை (2002) சிறுவர் இலக்கியம். (இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டது).

10. சுட்டிப்பையனும் கெட்டிக்காரக் குட்டிப்பூனையும் (2003) சிறுவர் இலக்கியம். (யுனிசெஃப், பிரித்தானிய கவுன்சில் ஆகியவற்றின் அனுசரணையுடன் இலங்கை தேசிய கல்வி நிறுவனத்தினால் வெளியிடப்பட்டது).

11. கோழி அம்மாவும் மயில் குஞ்சுகளும் (2003) சிறுவர் இலக்கியம் (இலங்கை தேசிய நூல் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் வெளியிடப்பட்டது).



சுதாராஜ்

ஈழத்து எழுத்தாளர்களுள்ளே
விசேஷ கவனத்துக்குரியவர்களுள்
ஒருவராக் கணிக்கப்படுகின்றவர்
சுதாராஜ், இவரது சிறுகதைகளில்
கலைத்துவம் மிகுந்த அழகியல்
அம்சங்கள் மேலோங்கி
நிற்பதைக் காணலாம்.
அழகியல் ஒன்றினையே நோக்கமாகக்
கொண்டு படைப்பிலக்கியத்தின்
பயன்பாட்டினை கருவைக்
கை நழுவ விட்டு விடும் இயல்பு
பெருமளவு இவர் படைப்புக்களில்
இடம் பெறுவதில்லை. பாத்திரங்களின்
புறவயமான செயற்பாடுக்கு
முக்கியத்துவம் கொடுப்பதனைத் தவிர்த்து
அகவயமான சித்திரிப்புக்களை
நேர்த்தியாகச் செய்யும்
ஒரு படைப்பாளி இவர்.